உ

கணபதிதுணை.

சைவ - எல்லப்பநாவலரால்

அருளிச்செய்யப்பட்ட

# திருவருணைக்கலம்பகம்

## மூலபாடம்

௫-ம் பதிப்பு.

இஃது,

ஊ - புஷ்பரதசெட்டியாரால்

கலாரத்நாகரம்

என்னும் தமது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1891.

V. B. SUBRAMANIYASARMA

கணபதிதுணை.

# திருவருணைக்கலம்பகம்.

## காப்பு.

நேரிசைவெண்பா.

அன்னவயல் சூழருணை யண்ணா மலையார்மேல்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத் - துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெள்ளேட்டின் மீதெழுதுங்
கைக்கோட்டு வாரணமே காப்பு.

---

கட்டளைக்கலித்துறை.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொரு
ளைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும் [ள்வாய்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றுளெம் முயிர்த்துணையே.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இது எட்டடித்தரவு - க.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனும்
அணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனும்
ஞானக்கண் ணதுகொண்டு நாடிமா றுணராதே
ஏனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
அடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்தும்
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்தும்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய்.

## இவை ஈரடித்தாழிசை - எ.

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ
மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே. (க)

இத்தலத்தி லைந்தொழிலு மிருபிறப்போ ரறுதொழிலுந்
தத்துவமுந் திருமேனி தரித்திலையே லியலாவே. (உ)

இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பலபேத
மொருக்காலு மொன்றுரைத்த தொன்றுரைக்க வறியாதே. (ஙு)

திருமுடிவைத் தருகால கற்பமெலாங் கடக்கவுநின்
றிருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே. (ச)

தானவரைக் கடிந்துமலர்ச் சதுமுகனை யொழித்துமற்றை
வானவரை யழித்துநின்கை மழுப்படைவாய் மழுங்காதே. (ரு)

அண்டருக்கு முனிவருக்கு மழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டு நுகர்ந்திடவுங் கண்டமட்டிற் கடவாதே. (சா)

மூவாமை தனக்குநின்றன் முதனடுவீ றிலாதமைக்குஞ்
சாவாமை பிறவாமை தமக்குமிவை சான்றன்றே. (எ)

## இவை நாற்சீரோரடியிரண்டுகொண்ட
## அம்போதரங்கம் - உ.

தடவரை நடைகெழு தரமென வருமொரு
கடகரி யுரிவிரி கலையென மருவினை. (க)
படமுடை யரவொடு பகைபடு முடுபதி
தடையற வுடனுறை சடைநெடு முடியினை. (உ)

## இவை முச்சீரோரடி அம்போதரங்கம் - ச.

சிலையென மலையை வளைத்தனை. (க)
திரிபுர மெரிய நகைத்தனை. (உ)
கலைமறை யிவுளி படைத்தனை. (ஙு)
கதிரவ னெயிறு புடைத்தனை. (ச)

## இவை இருசீரோரடி அம்போதரங்கம் - ௮.

| | | | |
|---|---|---|---|
| விதி சிரத்தினை | (௧) | நதி தரித்தனை | (௫) |
| அகழ் கரத்தினை | (௨) | மதி பரித்தனை | (௬) |
| விடை நடத்தினை | (௩) | நாள்க ளாயினை | (௭) |
| பொது நடத்தினை | (௪) | கோள்க ளாயினை. | (௮) |

## இவைபெயர்த்தும் ஈரடித்தாழிசை-௩.

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதமுநீ யபேதமுநீ. (௧)

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே. (௨)

ஆறாறு மளவிடுதற் கரியவனை யொருகரத்து
நீறாறு மலராறு நெஞ்சுருகப் பணலாமே. (௩)

## இது தனிச்சொல்.

எனவாங்கு.

## இது பத்தடி நேரிசை ஆசிரியச்சுரிதகம்.

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
அழகிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துய் கமலையிற் பிறந்தும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
அரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகால்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
இடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனவே. (௧)

## நேரிசைவெண்பா.

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியிய மானனிவர் சோமனிவர் - ஆதவனும்

மன்னுங்கா லும்புனலும் வானுமழ லுமிவர்
எண்ணுங்கா லெல்லா மிவர். (உ)

## கட்டளைக்கலித்துறை.

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரசைவின்
அல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்த வந்நாள்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. (௩)

## கலித்துறை.

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல் வீர்காள்
ஆகமவித்தார் மோக மவித்தா ரருணேசர்
யோக னகத்தா ளாக நினைத்தே தழைவீரோ. (ச)

## அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

குழையடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர்
குளிர்வெற் பூடே
மழையடுத்த துளிநனைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து
வருந்துஞ் சேதா
தழையடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுருக்கித்
தளரு மாலை
பிழையடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம்
பிறப்பி யாதே. (ரு)

## எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

யாதவர் குலத்துநெடு மாதவன் மருப்புடைய
வேனமிரு கத்துருவ மாய்
வேதமொழி பெற்றவய ஞேதிம மெனப்பறவை
வேடமு மெடுத்த திலையோ

ஓதருணை வித்தகனை மூவரி லொருத்தனென
வோதியிடு மற்ப மதியீர்
சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுதனி யைத்த பரமே. (௬)

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவை யாடினு நதிக ளாடினும்
படியெ லாநடந் தடிக டேயினும்
குரவ ராயினுங் கலைவி னின்றதன்
கொதிபொ றுக்கினுங் கதிகி டைக்குமோ
அரவ மாடுசெஞ் சடில ரங்கணு
ரமுதர் தாணினைந் தடியர் தம்மொடு
விரவி நீறணிந் தருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முத்த ராவரே. (எ)

### பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ்முறைமுறையன்பொடு
மப்பர்கவுணியர்சொல்சுந்தரர்
முப்பொழுதுமெதிர்புகழ்ந்திடு முதுநூலார்
அத்தரருணையினெடுந்திரை
தத்துதிருநதியின்மென்பெடை
யச்சமறவுடனணைந்துறை மடநாராய்
ஒத்தமனதொடுபுணர்ந்தவர்
சற்றுமகல்வதிலையென்றவ
ருற்றதுணையெனவிருந்தவ ருளய்வேறாய்
எத்தனைகபடநினைந்தவர்
கைப்பொருள்கருதிநடந்தன
ரெப்படியிறைவனைநம்புவ தினநாமே. (அ)

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனமகலு மருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
யிறைவனுடல் புகமொழிவரோ

கனகமுக படகவள கரடதட விகடமத
கரியின்மத மறகினைவரோ
வனமருவு மருமுதலை யொருமதலை தரவினிய
மதுரகவி மொழிமுதல்வரோ
அனகரபி னயாதுல ரமலரொம தருணைகிரி
யடிகடம தடியவர்களே. (௯)

## தலைவன் வினாவுதல்.

## எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
ரருணைவ ளம்பதி யன்றோ
படியினெ டுங்கரி யனையம தங்கொடு
பதறிந டந்திடு மின்றோ
ஒடியு மருங்கென வுணர்கிலிர் நின்றினி
யொருவச னஞ்சொல வொண்ணாதோ
கடியச ரங்களி னிளைஞரு டன்பல
கலகவி தம்பயில் கண்ணுறோ (௧0)

## அம்மானை - மடக்குத்தாழிசை.

நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ வம்மானை
அன்னமறி யாரொடுப்ப தையமோ வம்மானை. (௧௧)

## பாங்கி தலைவிக்குரைத்தல்.

## அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மானென்பார் கலையென் பார்கைம்
மலையென்பார் வழியே தென்பார்
ஏனென்பா ரிலையென் பார்யா
னேந்துமாந் தழைநன் றென்பார்

ஊனென்பார் நிறையுந் தாரா
ருறையுந்தென் னருணை மானே
கானென்பார் குழலை வேந்தர்
கருத்தென்றே கருதுங் காலே. (கஉ)

## புயவகுப்பு - ஆசிரியவண்ணவிருத்தம்.

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
கலன்மலிக வின்குழைக் குறவாயிசைந்தன
களபமகில் குங்குமத் தளறுகுடி கொண்டுதட்
டியபுழுக ணைந்துமெய்ப் பனிநீர்துளைந்தன
கலைமதிம ழுங்கிநத் தினமிருள டைந்துமுத்
தொளிகருக வெண்சுதைந் திருநீறணிந்தன
கனலிகைய ரிந்துகட் பரிதியைமு னிந்துதக்
கனைமுடித டிந்துமைத் தலையேவழங்கின. (கஉவ)
இரணியனு ரங்கிழித் தளவறும தங்கொழித்
தெழுநரம டங்கலைத் தடமார்பிடந்தன
இமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
சுவடுபட வின்பமுற் றதிலேகுழைந்தன
இரவிகிர ணங்கொழித் ததிசயமு டன்கிளைந்
தெழுபவள வன்பொருப் பெனவேவளர்ந்தன
இதழியர விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட்
குரவலரி சண்பகத் தொடையுமணிறைந்தன. (கஉ௨)
தரியலர்பு ரங்கெடச் சுரர்நரர்ப யங்கெடத்
தமணியநெ டுஞ்சிலைச் சிலைநாணெறிந்தன
தனுவலத நஞ்செயற் கமர்பொருச ரந்தரச்
சரதமென வந்துமற் பொருபோர்புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருந்
தலையுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தகதவள தந்தநற்
றறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன. (கஉஞ)

அருணகிர ணங்களிற் பலமணிநெ ருங்கிநச்
சரவமிளிர் கங்கணப் பணியான்மலிந்தன
அனவரத மம்பலத் தினினடமி டுந்தொழிற்
கபினயவி தங்கள்பெற் றழகோடிருந்தன
அருமறைதெ ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க்
கரசினொடு சுந்தரப் பெருமாள்புகழ்ந்தன
அரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
தருணையதி ருங்கழற் பெருமான்புயங்களே. (கங)

## தலைவனைவேண்டல்

### மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புயர்தழுவுங் கன்னியுஞ்செவ் விதழி யேமால்
பூண்டகயற் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
வியந்துசொலி னன்னதும்பொன் னிறமே யெங்கள்
மின்னிறமும் பொன்னிறமே புயம்பெ ருமல்
அயர்ந்திவள்வா டத்தகுமோ வருட்கண் பாரீ
ரருணகிரிப் பெரியீரோ யமல ரோகல்
வயர்தவிரா வழகரோ நினைக்க முத்தி
வரந்தருவா ரோமலைமேன் மருந்த னாரோ. (கச)

### இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலைமேன் மருந்த ரருணேச ரன்று வலைவீசி நின்ற வலையே, அலைமே னிறைந்து வருமீ னருந்தி யருகே யிடங்கொள் குருகே, முலைமேன் முயங்கு தலைநாளி லன்பர் மொழிகூண் மறந்த பிழையோ, தலைமேல் வனைந்த படியோ விருந்து தமியேன் யருந்து தகவே. (கரு)

## தலைவியைப்புகழ்தல்

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தகனமுறுவலின்மதனைமுனிபவர் சடையிலணிபலதலையினர்
அகனலடியரொடுறையுமிறையவ ரருணைவளநகரிவையார்

நிகரிறனதடவமுதநிறைகுட நிலவுமுகபடம்விலகிறல்
ககனவமரருநரருமிகல்கொடு கலகமிடுவரிவ்வுலகிலே. (௧௬)

## இதுவுமது.

## மடக்கு - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலககண் டகனுய் வருசலந் தரனு
 ருடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனு ரருணையங் கிரிசூழ்
 குளிர்புனந் தனிலே கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே
 மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே
 மொழியுமா சுகமே விழியுமா சுகமே. (௧௭)

## இரங்கல்.

## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுகமே சுகமே யிரும்வந் துபுனஞ்
 சூழ்கின் றவுமைத் தினமித் தினையுட்
புகமே யவிடா துகடிந் திடுமெம்
 பொல்லா மையுமின் றுபொறுத் திடுமின்
மகமே ருநெடுஞ் சிலையா ளரனு
 மலையா ரருணை புரிமால் வரைமேல்
அகமே செலுமா றுதுணிந் திதன்விட்
 டகறுன் பமுமன் பர்வரிற் சொலுமே. (௧அ)

## இதுவுமது-அறுசீர்க்கழிநெடில் ஆசியவிருத்தம்.

சொல்லா ரணத்திற் கரிவரியார்
 சோணு சலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி
 காட்டா தொழிதல் கண்டாயே

கொல்லா வம்புஞ் சமர்க்களத்திற்
குனியா வில்லுங் கொண்டுநிற்கும்
புல்லா டவனே யெமக்குறுதி
புகன்று ரெங்கே யகன்றாரோ. (௧௯)

பிரிவுவிலக்கல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆரும்வி ரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே
சீரும ருந்தமிழ் செப்பிடு நீர்மைய நிந்திவ ணேகுவீர்
மேருவெ டுஞ்சிலை யத்தனூர் வீறரு ணைபுரி வெற்பரோ. (௨0)

காலம்-மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெற்றிமதன் போர்க்காயும் பிறைக்குங் காலம்
வெங்கனலே போற்காயும் பிறைக்குங் காலம்
சற்றுமிரு கரமென்னே சங்கணியாக் காலம்
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலம்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதுங்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டுறையும்
பெற்றவிளந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்
பேதையேன் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். (௨௧)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலிற் றுலங்கு நகத்தாலுங்
கையிற் பொலிகூர் நகத்தாலும்
சீலத் தாக்க னுரங்கொண்டீர்
திசைமா முகனைச் சிரங்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர்
வில்வேள் புரத்தைப் பகைத்தெரித்தீர்

சூலப் படையேன் மழுப்படையேன்
சுமந்தீ ரருணை யமர்ந்தீரே. (உஉ)

மாலையிரத்தல்-மடக்கு
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரோ
யன்பர்க ளன்பிணி லாழ்வீரோ
சுமந்தொளிர் சூலமெ டுப்பீரோ
தோளணி மாலைகொ டுப்பீரோல்
இமந்தரு வெண்மதி காயாதே
யிருகணெ டும்புனல் பாயாதே
கமழ்ந்தகு முற்கொடி வாடாதே
கவ்குறு மிப்படி நீடாதே. (உ௩)

ஒன்பதின்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீடாழி ஞாலம் வானொடு தீகாலு லாவுமி யாவையு
நீறுய காலமாய் விடுநாள்
கோடாழி மால்பி தாமக னாருன கோடி வீழ்தலை
கோவைர பாரமீ துறவே
சூடாத மாலை சூடுவர் தோளோடு தோளை வீசுவர்
சோணைச லேசர்சோ பனமா
ஆடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ
ராராத வோகைகூ ருவரோ. (உச)

புன்னகங்கண்டிரங்கல் - கலித்துறை.

கூத்தாடுமருணேசர்வரையன்பர்பொருளன்புகொண்டென்னையும்
நீத்தார்கொணிழலாருமிலையாகிநின்றாய்நெடுங்காலமே
பார்த்தாலுமயலேகிளைத்தாய்சலித்தாய்பசுந்தென்றலால்
பூத்தாய்பொன்னிறமாகவென்னுகமேயன்னபுன்னாகமே. (உரு)

V.B. SUBRAMANIYA SARMA TAMIL PANDIT.

## இரங்கல் - மடக்கு.
## அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நாகமெ டுத்தவ ரம்பானூர்
நாலும றைக்குவ ரம்பானூர்
தோகையி டத்தவர் சேணாராய்
சோணகி ரிப்பதி வாணாராய்
மாகம டுத்தவி ளங்காவே
மன்னவ ரெண்ணம்வி ளங்காவே
கோகன கத்திமி ருந்தேனே
கொண்கனை விட்டுமி ருந்தேனே. (உசு)

## ஊசல் - மடக்கு
## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருசரணச் சிலம்பாட வாடீ ரூசல்
விளமுலைப்பொற் சிலம்பாட வாடீ ரூசல்
மருவுசலை மருங்கசைய வாடீ ரூசல்
வரிவளைக்கை மருங்கசைய வாடீ ரூசல்
அருமறைக ளளவிடுதற் கரிதா மைய
ரருணகிரிப் பரமர்புக ழுடைவே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடீ ரூசல்
புயமதனன் கயலுலவ வாடீ ரூசல் (உஎ)

## பாங்கிசொல்லுதல்
## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஊசலு கைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவா
ரொண்டர ளங்கொளுவார் தண்டலை கொய்திடுவார்
ஆசில்பு னற்குடைவா ரம்மனை பந்துகழங்
காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரோ
ஈசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா
ரோரரு ணைப்பதிசூழ் மேருவி னிற்கவணே

வீசுதி ணைப்புனமே யாவரொ னத்தெளியேம்
வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரோ. (உஅ)

## மடக்கு - கலிவிருத்தம்.

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாரும்
கோலமன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரும்
மாலைவில்வேள் சலத்தாரு மதர்த்தமதா சலத்தாரும்
மேலகலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரே. (உகூ)

## தலைவியைப்புகழ்தல்
## அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணைஞெளி தனிலுமொளி ரருமலைம ருந்தாய
வமலரதி ருங்கழலினார்
மருமலர்வி ரிந்துநதி பெருகருணை யம்பதியின்
மருவியம டந்தையிடையாம்
ஒருகொடியி லொன்றுகமு கொருபவள மொன்றுகுமி
ழொருமதிய மொன்றுபிறைதான்
இருசிலையி ரண்டுகணை யிருபணையி ரண்டுகுழை
யிருமுலையி ரண்டுமலையே. (ங0)

## எழுதரிதென்றல்
## எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையாச னத்தர்மலை மயிலாச னத்தொழு
மலையாநி லத்து வருவார்
அலையாச னத்தரொடு மமிர்தாச னத்தர்தொழு
மருணைச லத்தர் வரையீர்
முலையானை கட்டியிடை வெளிதோர்நி றுத்திமதி
முகமாய மைத்தரு குலாம்

இலைவேல்ப ரப்பியினி தெழுதோள மைப்பனினி
யெழுதேனி ருப்பு மனமே. (௩க)

## இரங்கல்-சிலேடை-கட்டளைக்கலித்துறை.

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கீறுங் கோலத்தைக் கண்டிருந்தும்
ஆலால முண்டவ ரண்ணு மலையர்த மன்பர்க்கன்றி
மாலான வர்க்கிரங் காரிங்ஙனேயொரு வன்கண்ணரோ. (௩உ)

## நேரிசைவெண்பா.

கண்ணருக்கும் போதருக்குங் காண்பரிதாய்க் கண்பறித்த
திண்ணருக்கு நன்றாய்த் தெரிந்ததே - விண்ணருக்காப்
போற்றுவா ரண்ணார் புரமெரித்தா ரொன்பிறவி
மாற்றுவா ரண்ணு மலை. (௩௩)

## இரங்கல்-கலிவிருத்தம்.

அண்ணு மலையத் தரடற் கிரிமேல்
எண்ணு மலையத் தவரொய் திலரால்
கண்ணு மலையத் தனைநீர் கலுழும்
விண்ணு மலையத் தரும்வெண் மதியே. (௩௪)

## பாங்கன் துணிவு.

## எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மதுவானி றைந்தகுழன் மடவார்நெ ருங்கருணை
மலைமேன்ம ருந்தர் வரையில்
முதுநீரில் வந்தவவ ரடையாள மென்றிறைவர்
முதலேமொ ழிந்த படியே
இதுநாக மன்றுமுலை யிதுபூக மன்றுகள
மிதுமேக மன்ற ளகமே

அதுநீல மன்றுவிழி யதுசாப மன்றுநுத
லதுகோப மன்ற தரமே. (௩௫)

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணை வெற்பின ரயனி ருக்கவு மரிபி ழைக்கவு மாகவே
திருமி டற்றெரு கருமை வைத்தவர் திருநதிக்கய றேடியே
கருது நெட்டுட லசைவ றத்துயில் கபட சித்திரை நாரைகாள்
இருக ணித்திரை யிலையெ னச்சொல விறைவர் பக்கலி லேகுமே.

பாங்கிதலைவிக்குரைத்தல் - கட்டளைக்கலித்துறை.

ஏகார் புனத்துத் தழையாற் கரிபட்ட தென்பரொன்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியும்
நாகா திபருந் தொழுமரு ணைசல நாட்டிலிளந்
தோகா யணங்கனை யாயவர்க் கேதுசொ லத்தக்கதே. (௩௭)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கயிலை மலையிருக்க நினைத்தோர்க் கெல்லா
நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையினு லுமைவணங்கிப் பரிந்து பூசை
புரிந்துதவந் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லாம்
எற்குலவு புகழருணை யீச ரோ
யினிதளிக்கும் பதவிதனக் கென்செய் வீரோ. (௩௮)

சித்து-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வீரத்தை யணிமழுவா ருமைபங் காளர்
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுகுஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்

தாரத்தைப் பொன்னாக வமைத்தோந் தம்பீ
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ மிந்தப்
பாரந்தை யாரறிவா ரயனாகத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாலித் தோமே. (௩௯)

இதுவுமது
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதமெமக் களித்தவரு ணேச னூர்க்கின்
பச்சிலைபொன் செய்திமையோர பசிநோய் தீர
ஓதுகடை மருந்தளித்த சித்த ரோம்யா
மொருபிடிசோ றல்லதுகூ ழுண்டோ வப்டா
மாதவாதந் திருவாணை கரிக ளெல்லா
மாதங்க மாக்குகிற்போ மருந்தில் லாதே
ஏதமற நாகமொளித் தராவாச் செய்வோ
மிரும்பையும்பொன் னாகவுரைத் திசைவிப் போமே. (௪0)

தலைவியைப்புகழ்தல்
எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இதழி யந்தொடைய ரருணையங் கிரியி
லிரத மூந்திவிடு வலவனே
பதிய டைந்துமறு கினில்வ சந்தனதி
படையெ ழுந்தது பகருவேன்
புதிய கொம்புசிலை வளையி ரண்டருகு
பொழியும் வெம்பகழி போராரு
உதய தந்தமத களிறு டன்கதலி
யுபய தண்டுவரு கின்றதே. (௪௧)

ஒன்பதின்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வளைக்கனக சாப சோண கிரிப்புனித கால கால
மதிக்குநெடு மாயர் போலவே

நாக்குளிஞ்சி யாரியாவ ரவாக்குமுனி லாமணிடு
தழறசிகரி யாக னீதியோ
வீணாக்கமல வோடை யாவர் புரத்தைமுனி டாண மாவா
விரித்தகொடி யாவ ரீதலால்
இபக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவா மேவி
யிடத்திலுறை தேவி யாவரோ. (சஉ)

## கட்டளைக்கலித்துறை.

ஆனிட பக்கொடி சோணு சலனென்று மன்பர்மலா
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றும்
கானிட வேடன்முன் னூனிட வுண்டது கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவா செய்வதென் வந்தனையே. (சங)

## களி - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தனையிருக்கு மறைதுதிக்கு மருணை நாதன்
சரணமலா புகழ்களியேஞ் சக்ர பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னையோ
விதிவசத்தால் விவரமறற விதஞ்சொல் வேனே
பனையிருக்க நெடியகஞ்சா விருக்க வீணை
பச்சையா லிலைதுயின்றான் பனையன் றேளி
யனையிருக்கப் பணிதுயின்றான் மதுவாந் தெய்வ
வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னானே. (சச)

## களி - நேரிசைவெண்பா.

ஆறா கொடியா ரருணு புரிக்களியேம்
வாறுட ரோஞே மதியற்றார் - மேனுளில்
சும்மாகஞ் சாவிலையே தூளிடித்துத் தின்றாலும்
தம்மாகஞ் சாவிலையே தான். (சரு)

## பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற
சக்கரத்தை விடுவர்சிவ சமயத் தாவா

[சேனை முதலியார்]

ஆளி லமரா ரரங்கேசர் சேவைக் கணுகுந்தொறும்
கோளில் திரளை விலக்கும் பிரம்பின் கொணைபடலால்
தோளி லடித்தழும் புண்டச் சுரர்க்கச் சுரர்தொழலால்
தாளின் முடித்தழும் புண்டுநஞ் சேனைத் தலைவருக்கே. (அகூ)

[சிறிய திருவடி]

ஆதித் திருவெழுத் தைந்துடைத் தாயு மராவணிந்தும்
சோதித் திருக்கண்கண் மூன்றுடன் றோன்றுஞ் சுருதிசொன்ன
நீதிக் கிசைய நடவா மனிதரை நேமிகொண்டு
வாதித் தருளும் பெருமா ளரங்கர்தம் வாகனமே. (கூ௦)

[இதுவும் அது]

வல்லா முலைத்திரு வின்பெரு மான்விட்ட வாசனம்போய்த்
தொல்லாழி நீரைக் கடந்தது தாளின் சுடரிரண்டும்
செல்லாத வூரைத் திரிபுரங் கண்டது சேனைவெள்ளம்
எல்லா முயக்கொண் டதுமருந் தார்கிரி யேந்திவந்தே. (கூக)

[ஸ்ரீ வைகுண்டம்]

தொல்லைக் கமடத் தலநவ கண்டந் தொடுகடனீர்
எல்லைக் கிரிதனக் கிப்புறத் தெண்கிரி யப்புறத்தின்
மல்லைப் பரிதியின் மண்டல நாகமவ் வான்முகட்டோர்
அல்லப் புறத்து வைகுந்தம் பொற்கோயி லரிக்கிடமே. (கூஉ)

[இதுவும் அது]

எந்த வுலகத்து மேலது நித்திய வின்பத்தது
பந்த நசிப்பது நித்தரு முத்தரும் பாரிப்பது
முந்தை மறையினின் றல்லாதெத் தேவர்க்கு முன்னவரி
தந்த மிலதரங் கன்மேவு வைகுந்த மானதுவே. (கூ௩)

[திருப்பாற்கடல்]

காவஞ் சுரபியுஞ் சிந்தா மணியுங் கடிக்கமலப்
பூவும் பணிலமும் பொங்கிள மாவும் புகர்த்தடக்கைம்
மாவும் பிறையு மமுதமு மெங்ஙன் மதிலரங்கர்
மேவுந் தரங்கக் கடலில்லை யாகிலிவ் விண்ணவர்க்கே. (கச)

[ஏழு மதில்களும், திருவரங்க விமானமும்]

அருமறை யோதிய வோரெட் டெழுத்து மயன்படைத்த
இருநில மீதினில் யாவருங் காண விலங்குதுத்திக்
குருமணி நாகத்தி லெங்கோன் விழிதுயில் கொண்டருளத்
திருமதி லேழும் விமானமு மாகிச் சிறக்கின்றவே. (கரு)

[இதுவும் அது]

தாழா திபஞ்சொல்ல வந்தா ரரங்கர் தயங்குசெம்பொற்
கேழா விமானங் கிளர்செம்பொன் மேரு கிரிசிகர்த்த
ஏழா வரணத் திடையிடைத் தீவுக ளிவ்வனைத்தும்
சூழாறு மாகட லெவ்வாறு நாமினிச் சொல்லுவதே. (கசு)

[சயனத் திருக்கோலம்]

ஞாலத் திகிரி பகலிர வாக நடத்துமிந்தக்
காலத் திகிரி நடக்கவற் றேவெங் கனலுமிழ்வாய்
ஆலப் பணியணை மீதே யரங்கத் தமர்ந்துறையும்
நீலக் கடல்கண் விழித்துறங் காவிடி னிச்சமுமே. (கஎ)

[இதுவும் அது]

தாமக் கடையுகத் துள்ளே விழுங்கித் தரித்தபழஞ்
சேமப் புவனஞ் செரிக்குமென் றேசிவன் மாமுடிக்கு
நாமப் புனறந்த பொற்றா ளரங்கர் நலஞ்சிறந்த
வாமத் திருக்கர மேலாக வேகண் வளர்வதுவே. (கஅ)

[திருக்கைகள்]

கதிராரு நீண்முடி சேர்ந்தகைப் போதெக் கடவுளர்க்கும்
அதிராச ஞனமை காண்மினென் றேசொல்லு மாயபொன்மா
மதிலா ரரங்கர்பொற் றுளார் திருக்கர மற்றிதுவே
சதுரா னனன்முத லெல்லா வுயிர்க்குஞ் சரணென்னுமே. (கூ

[வியூகமூர்த்தியே ஸ்ரீரங்கநாதன்]

மோகத் துயில்புரி மெய்போலக் கண்ட முறையினுக்கிங்
கேகத் திருவுரு வென்றறிந் தேனிந் நிரையை யனபோ
டாகத் துவைத்தரு டென்னரங் காவலங்கு மிங்குமொக்கப்
போகத்துக் கொண்ட பணநாக மொன்று பொறுத்தபின்னே. (

[எம்பெருமானது திருமேனியின் நீலநிறம்]

சோதித் திருவுரு வாகாய மாகச் சுருதிநன் னூல்
சாதித்து நின்று தெளிந்துவிட் டேன்மிக்க தானவரைச்
சேதித்த நேமித் திருவரங் காசங்கை தீரவுன்றன்
ஆதித் திருவுரு வின்பே ரணிநிற மானபின்னே. (௧௦௪

[இதுமுதல் ஐந்து கவிகள்-ஆனந்த அனுபவம்]

ஓங்கார வட்டத்து மாசுணப் பாயி லுலோகமுண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்ட தாலெப் பொழுதுமென்னை
நீங்கா திடர்செய்யுந் தீவினை காளினி நின்றுங்ன்று
தேங்காது நீருமக் காளிடத் தேசென்று சேர்மின்களே. (௧௦௨

விண்ணிட்ட சோலை யரங்கத்து மேவிய மெய்ப்பொருளைக்
கண்ணிட்ட பார்வையிற் கட்டியென் கண்வரக் கண்டுடலாம்
புண்ணிட்ட வண்ணக் கிழியுட் பொதிந்து புறத்துவெள்ளை
மண்ணிட்டி லச்சினை யிட்டுவின் ளாதுள்ளம் வைத்தனனே. (

கைத்துப் பழவினை தித்திக்க வென்றன் கருத்தினுள்ளே
பைத்துத்தி மெத்தையின் மீதே துயிலும்பைங் கேழெறிந்து
மைத்துக் குளிர்ந்து மதுரித்து மெத்தென்று மாமணத்து
நெய்த்துப் புகர்த்து நிகர்க்கும்பொன் மேனி நெடுங்கடலே. ()

[கருடசேவை]

தெள்ளா வரும்பொன்னி சூழரங் கா!ஒரு தேவரையும்
உள்ளாதெனதுள்ளம்யானென்செய்வேன்? விண்ணிலோருவனைப்
புள்ளாகி வேதப் பொருளாகி யுன்னைத்தன் பொற்கழுத்திற்
கொள்ளா வருகின்ற கோலமுள் ளேகண்டு கொண்டபின்னே. ()

முன்பா லிலைமக வாகிய போதிந்த மூதண்டங்கள்
உன்பா லொடுங்கி யிருந்தது போலு முததிமங்கைக்
கன்பா! அரங்கத்தென் னாரமு தே!அனு வாயிருந்தும்
என்பா லகண்டமு மாகிய நீவந் திருக்கின்றதே. (கoசு)

[பகவானைப் பிரார்த்தித்தல்]

வலைப்பால் விடம்பிணைக் கண்ணியர் போகத்தின் மா்லுறுமென்
தலைப்பாற் கழலரு டாரரங் கா!பல தாயர்தந்த
முலைப்பாற் கடலுன் திருக்கழ லாணிவெண் முத்தெரியும்
அலைப்பாற் கடலி னளவா மெனின்மற் றதுவுமன்றே. (கoஎ)

[இதுவும் அது]

தோடைமாற னுந்தமிழ் சொன்மாறனுந்தொழத் துத்திவெள்ளைக்
குடைமா சுணத்திற் றுயிலரங் கேச! குலவுவைவேற்
படைமாறு கொண்டமைக் கண்ணியர் பால்வைத்த பாசநெஞ்சை
மடைமாறி யுன்றன் றிருவடிக் கேவா வைத்தருளே. (கoஅ)

[அநந்ய கதித்வமும், பிரார்த்தனையும்]

காரணந் தவிர்ந்து விழிபோய்ச் சுழன்றுக லங்குமென்றன்
மரணந் தனில்வந் தருவசன் டாய்சொற்ற வாளியொன்றால்
அரணஞ் சுட்டவன் காணு வரங்க!என் னாருயிர்க்குன்
சரணஞ் சரண மொழிந்தில்லை வேறித் தாதவத்தே. (க௦௯)

[ஸார பேக்ஷயம்]

நீடோர் நிகிரிப் பணையா யுலகுக்கற்ற நின்னையென்றும்
பாடும் படித்தமிழ்ப் பாடோர் தாய்ப நான்மறைநூல்
தேடோர் திருவரங்கா! அடி யேனுயிர் செல்லுமன்னாள்
வீடோர் தாவிருந் தாமரைக் கேதிளி வெண்டுமே. (௧௧௦)

[அநந்ய ஸேவத்வ நிஷ்டை]

ஆகைக்கல் லாவை யெதிரொறு செல்லி யழுக்கவைகாத்
நாவைப் பரிகத்தப் பண்ணிய பேசுற்ச பற்சுகளிட
கோவைச் சகடம் பட்டைப் பொருதிய கொல்லியவாய்த்
தேவைப் பகர்ந்தசெஞ் சொற்றிரு வரங்கா கிர்சால்வ. (கக௧)

மணிதக் கவிமொழி யாமங்கை வாழ்மணம் வாளவைகள்
புனிதக் கவிகொண்டு மாலைசெய் தான்புயல் போல்முழங்கும்
தொனிதக்க சங்கந் திருச்சக் கரதடா யாண்முசலம்
குனிதக்க சார்ங்கந் தரித்தா ரங்கர்பொற் கோயிலுக்கே. (கக௨)

திருவரங்கத்துமாலை
முற்றிற்று.

SECOND EDITION] 1929 [1000 COPIES

| | அ. | ப. |
|---|---|---|
| ஆத்திசூடி உரை | 0 | 9 |
| கொன்றைவேந்தன் உரை | 0 | 9 |
| வெற்றிவேற்கை உரை | 1 | 0 |
| வாக்குண்டாம் உரை | 1 | 3 |
| நலவழி உரை ... | 1 | 6 |
| நன்னெறி உரை ... | 1 | 6 |
| ஷெ நீதிநூற்கொத்துஉரை | 8 | 0 |
| ஷெ 6 நூலின் மூலமும், நீதி நெறி விளக்க மூலமும், அவற்றின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும அடங்கிய நீதிநூற்றிரட்டு ... | 8 | 0 |
| அறப்பளீசுர சதகம் ... | 3 | 0 |
| குமரேச சதகம் ... | 4 | 0 |
| திருவேங்கட சதகம் ... | 4 | 0 |
| தண்டலையார் சதகம் ... | 2 | 0 |
| கோவிந்த சதகம ... | 0 | 9 |
| எமபிரான் சதகம் ... | 1 | 0 |
| சிவசங்கர சதகம் ... | 0 | 9 |
| ஷெ 7 சதகமும் அடங்கிய சதகத்திரட்டு1-ம்பாகம் | 12 | 0 |
| கைலாசநாதா சதகம் ... | 2 | 0 |
| ஜெயங்கொண்டார் சதகம் | 4 | 0 |
| குருநாத சதகம் ... | 1 | 0 |
| அவையாம்பிகை சதகம் | 2 | 0 |
| அருணசல சதகம் ... | 1 | 0 |
| அண்ணமலைச் சதகம் ... | 4 | 0 |
| வடவேங்கடநாராயணசதக | 2 | 0 |
| தொண்டைமண்டலசதகம் | 2 | 0 |
| கோகுல சதகம் ... | 0 | 9 |
| திருத்தொண்டர் சதகம் | 2 | 0 |
| ஷெ 10 சதகமும் அடங்கிய சதகத்திரட்டு2-ம்பாகம் ரூ | 1 | |

| | அ. | ப. |
|---|---|---|
| ஏசுவை நம்பினால் ரக்ஷிப் படையலாமா? ... | 0 | 6 |
| கிறிஸ்தவர் விடை மறுப்பு | 4 | 0 |
| விவிலிய குற்சிதம் ... | 2 | 0 |
| ஷெ திக்கார கண்டனம் | 2 | 0 |
| சிவநாம விளக்கம் ... | 1 | 6 |
| ஏசுமனிதனே, கடவுளா? | 2 | 0 |
| விக்ரஹாராதனமுதலியன | 1 | 0 |
| பைபில் யார் எழுதியது? | 1 | 0 |
| சிவனுந் தேவனு என்னும் தீய நாவுக்கு ஆப்பு ... | 1 | 0 |
| கிறிஸ்தவர் ஞானோதய ஆபாச விளக்கம் ... | 0 | 6 |
| புரோடஸ்டாண்டு கிறிஸ்து மத கண்டனம் ... | 0 | 9 |
| வஜ்ஜிரடங்கம் ... | 1 | 0 |
| கிறிஸ்துமதத் திரியேகத் துவ ஆபாசம் ... | 0 | 6 |
| இந்துஜெய பேரிகை: 4 பாகமும் ... | 3 | 9 |
| பைபிளும் உலக சிருஷ்டி யின் ஆபாசமும் ... | 0 | 9 |
| கிறிஸ்துமதத்தின் குருட்டு நம்பிக்கை ... | 0 | 3 |
| பாதிரிமார் ஸ்கூலில் பெண் கள் படிக்கலாமா? ... | 0 | 3 |
| ஆரியப்பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறைமை | 0 | 6 |
| ஷெ 18 நூலும் சேர்ந்தது ரூ | 1½ | |
| சைவதூஷண பரிகாரம் | 4 | [illegible] |
| பிரசங்க பீடிகை, கிறிஸ்து மத கண்டன வஜ்ஜிர குடாரம் ... ... | 1 | [illegible] |

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

உலகநாத பண்டிதர் இயற்றிய

# ஜாதி பேத விளக்கம்

புதிய பதிப்பு: விலை அணா 4

## இந்நூலில் அடங்கிய ஜாதிகளின் பெயர்

1. சபாநாதர் வணக்கம், 2. அவை யடக்கம், 3. ஆக்கியோன் பெயர், 4. பதிகம், 5. நூற் பயன், 6. ஜாதித் தொகை, 7. சைவ பேதம், 8. சைவர் தொழில், 9. ஆதி சைவர், 10. மஹா சைவர், 11. ஜாதித் தோற்றம், 12. அந்தணர், 13. அரசர், 14. வணிகர், 15. வேளாளர், 16 அனுலோமாதியர், 17. அலகர், 18 சூத்ரர், 19. தூதர், 20. குண்டக கோளகர், 21. ஷையார் தொழில், 22. தெலுங்கப் பிராமணர், 23. காணியாளர், 24. அபிஷேடகர், 25. பேரசர், 26. சாமந்தர், 27. பூணூற் கணக்கர், 28 மல்லர், 29. பண்டிதர், 30. கைக்கோளர், 31. குயவர், 32 மருத்துவர், 33. கோமுட்டி, 34 பொன் வாணிபர் 35. கவறைகள், 36 ஓச்சர், 37. கொந்தக வேளாளர், 38. சவள வேளாளர், 39. மாவுத்தர், 40. சேனைக் கடையார், 41. பரிக்குலத்தார், 42. சுருதிமான், 43. பாய்வாணிகர், 44. சாலியர், 45. யாழ்ப்பாணர், 46. நீலைக்கு உரியவர், 47. சிற்பர், 48. சாணியோர், 49. மீன் பள்ளியர், 50. பட்டணவர், 51. சேடர், 52. இடையர், 53. ஊசிச் சிற்பியர், 54. செக்கு வாணியர், 55. காவற் பள்ளியர், 56. ஈரங்கோலியர், 57. தட்டார், கொல்லர், கன்னார், தச்சர், 58. சான்றார், 59. களமர், 60. மறவர், 61. பூமாலைக்காரர், 62. முச்சியர், 63. உறைகாரர், 64. அம்பட்டர், 65. கூத்தாடியர், 66. கரையார், 67. மாகுலவர், 68. வலையர், 69. வேடுவர், 70. செப்புக் கன்னார், 71. குன்றுவர், 72. சவணர், 73. நிலைத் தறியார், 74. காணிக்கர், 75. பரவர், 76. கடையர், 77, அநுலோமர்க்குத் தொடக்கறுக்கிற வர், 78. அநுலோமர்க்கு வெளுக்கிறவர், 79. பிரதிலோமர்க்கு வெளுக்கிறவர், 80. நீல வண்ணார், 81. அரிப்பர், 82. இருளர், 83. கணியர், 84. ஒட்டர், 85. கடிகைப் புலவர், 86. பறையர், 87. இளமைகள், 88. சக்கிலியர், 89. தோட்டியர், 90. நக்கவாரிகள், 91. சோனகர், 92 பரங்கர், 93. கருவர், 94. ஜாதி உயர்ச்சி, 95. ஜாதித் தாழ்ச்சி.

186

ஸ்ரீ

அழகிய மணவாளதாச ரென்னும்

திவ்ய கவி பிள்ளைப்பெருமாளையங்கார்

இயற்றிய

# அழகரந்தாதி

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்பு செட்டி வீதி, சென்னை.

விலை அணா 1½

[All Rights Reserved]

# அழகரந்தாதி

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

## திருமாலிருஞ்சோலைமலை

# அழகரந்தாதி

## சிறப்புப்பாயிரம்

### கட்டளைக்கலித்துறை

திருகவி மங்கை மணவாள வள்ளல்செந் தேன்றுளித்து
முருகவிழ் தென்றிரு மாலிருஞ் சோலை மலைமுகுந்தற்
கிருகவின் றாள்களிற் சூடுமந் தாதியி னீரைம்பதில்
ஒருகவி கற்கினு ஞானமும் வீடு முதவிடுமே.

## காப்பு

அங்கத் தமிழ்மறை யாயிரம் பாடி யளித்துலகோர்
தங்கட்கு வீடரு ளும்புரு டோத்தமன் றண்வகுளத்
தொங்கற் பராங்குசன் றாளிணை மாலிருஞ் சோலைமலைச்
சங்கத் தழகரந் தாதிந டாத்தத் தலைக்கொள்வனே.

## நூல்

நீராழி வண்ணனைப் பாலாழி நாதனை நின்மலனைச்
சீராழி யங்கைத் திருமகள் கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
டாராழி மாயனை மாலலங் காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானையெஞ் ஞான்று முனைநெஞ்சமே! (க)

உரைமாற்ற முண்டென் பொறியைந்து முன்னிடத் தன்றியுண்ணும்
இரைமாற்ற வேண்டு மிதுவேயென் விண்ணப்ப மென்னப்பனே!
உரைமாற் றளவற்ற பொன்னுடுத் தாய்! வில் லெடுத்திலங்கை
வரைமாற் றலரைச்செற் றாய்! அழ கா! கரு மாணிக்கமே! (உ)

மாணிக் கனகம் புரைமேனி மாலுக்கு வார்சடையோன்
பாணிக் கனகம் பலியொழித் தானுக்குப் பச்சைத்துழாய்
ஆணிக் கனக முடியலங் காரனுக் கண்டமெல்லாம்
பேணிக் கனகனுக் குப்பித்த ரானவர் பித்தரன்றே. (ங)

பித்தரும் பாநின்ற நெஞ்சனை வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனைக் கடைக்கணியாய்!
முத்தரும் பாரும் தொழுமழ கா! வண்டு மூசுந்துழாய்ப்
புத்தரும் பார்முடி யாய்! அடி யாரைப் புரப்பவனே! (ச)

புரந்தர னைமனப் பூபதி யாகிப் புகாருகமா
துரந்தர னாகிலென்? நல்குர வாகிலென்? தொல்புவிக்கு
வரந்தர மாலிருஞ் சோலையின் முர்க்கென் மனத்தினுள்ளே
நிரந்தர மாயலங் காரன்கண் காட்டுநின் றபின்னே. (ரு)

நின்றபி ரானைக் கழலுமுன் னேநெஞ்ச மேபிரியாய்
சென்றபி ராயம்வம் பேசென்ற தாற்றிரு மங்கைகொங்கை
துன்றபி ராமனைச் சுந்தரத் தோளனைத் தோளின்மல்லைக்
கொன்றபி ரானை யடைந்தடி யாரொடுங் கூடுகைக்கே. (சா)

கூடுகைக் குஞ்சர மத்தடி யேற்குக் கொடியவஞ்சம்
சாடுகைக் குஞ்சர ணந்தர வேண்டுந் தடத்தழுந்தி
வாடுகைக் குஞ்சரங் காத்தீர்! இன் வாழ்க்கைக்கும் வானரக்கர்
வீடுகைக் குஞ்சரங் கோத்தீர்! விடைவெற்பின் வித்தகரே! (எ)

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

வித்தக ரும்பர்க் கரசா னவனும் விதியுங்கங்கை
மத்தக ரும்பா வும்மலங் காரர் மழைகொண்டகார்
ஒத்தக ருப்பாஞ் சோதியர் நாம முரைத்தன்னைமீர்!
இத்தக ரும்பா தெய்வமுங் கூத்தும்விட் டேத்துமினே! (அ)

ஏத்தும்!இன் பத்தியி னுவெட் டெழுத்தா மிணையடிக்கே
சாத்துமின்! பத்திரத் தண்ணந் துழாய்மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்திசெய் யும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி லிருத்தியும் வைப்பர் கருணைசெய்தே. (கூ)

செய்தவ ராக வருந்தியுந் தீர்த்தத் துறைபடிந்தும்
கைதவ ராகமங் கற்றுமென் னாம்?கடற் பார்மருப்பிற்
பெய்தவ ராகனை மாலலங் காரனைப் பேரிலங்கை
எய்தவ! ராகவ! என்றேத்த நீங்கு மிருவினையே. (கo)

[தலைவியின் அற்றமையைத் தோழி தலைவனுக்குக் கூறல்]

வினைக்கு மருந்தரிக் கும்பிணி மூப்புக்கும் வீகின்றவே
தனைக்கு மருந்தன்ன தானழ கா!செய்ய தாமரையங்
கனைக்கு மருந்தமு தே!அரு ளாய்நின்னைக் காதலித்து
நினைக்கு மருந்ததி தன்னுயிர் வாழ்க்கை நிலைபெறவே. (கக)

நிலையாமை யான வுடலு முயிரு நினைவுந்தம்மிற்
கலையாமை யானங் கலக்குமுன் னேசுங்கை வைத்தசடைத்
தலையாமை யானனன் றுமறை யானெழுந் தாளழகன்
அலையாமை யானவன் மாலிருஞ் சோலை யடைநெஞ்சமே! (கஉ)

நெஞ்ச முருக்கு முயிருருக் குந்தொலை நீள்வினையின்
வஞ்ச முருக்கும் பவமுருக் கும்வண்டு பூாயழகர்
கஞ்ச முருக்கு மலர்வாய்த் திருநண்பர் கஞ்சனுக்கு
நஞ்ச முருக்கு வளையாழி யன்னவர் நாமங்களே. (கங)

நாமங்க ளாலி நழுவுந் தனையு நவின்றவரைத்
தாமங்க ளாவி மனத்துள்வைப் பார்தண் டலையினகில்
தூமங்க ளாவி மணநாறு மாலிருஞ் சோலையன்பர்
சேமங்க ளாவின் கனியனை யார்பதஞ் சேருவரே. (கரு)

சோராத காத நரகேழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராத காதம் வசைபிணி பாவ மறிகடன்முன்
தூராத காதங்க ளேர்த்தானை மாலிருஞ் சோலையிற்போய்
ஆராத காத லுடன்பணி வீர்!என் னழகனையே. (க௬)

[பாங்கிவிடுதூது]

அழக்கன் றியகருங் கண்ணிக்குக் கண்ணி யளித்திலரேல்
வழக்கன்றி முன்கொண்ட வால்வளை கேளு மறுத்ததுண்டேல
குழக்கன்றின் பின்குழ லூதலங் காரர்க்குக் கோதைநல்லீர்!
சழக்கன்றில் வாய்பிளந் தாலுய்ய லாமென்று சாற்றுமினே! (க௭)

[தலைமகளது மடலூர்தற்றுணிவைத் தோழி
செவிலிக்கு உணர்த்தல்]

சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னு மாசைத் தமிழ்மலயக்
காற்றுக் கரும்பனை யுங்கண் படாளலங் காரற்கண்டர்
ஏற்றுக் கரும்பனை யக்கொங்கை யாள்கொண்ட வின்னலுக்கு
மாற்றுக் கரும்பனை யல்லாது வேறு மருந்தில்லையே. (க௮)

மருந்துவந் தார்தொழு மாலிருஞ் சோலை மலையழகர்
அருந்துவந் தாரணி யென்றபின் றூரட லாயிரவாய்
பொருந்துவந் தார்பணிப் பாயார் விதூரன் புதுமனையில்
விருந்துவந் தாரடி யார்க்கில்லை நோயும் வெறுமையுமே. (க௯)

[தலைமக ளிளமைக்குச் செவிலி இரங்கல்]

வேறுத்தவ ளைக்கஞ்ச னைச்செற்ற னார்விடை வெற்பர்வெங்கண்
கறுத்தவ ளைக்கஞ்ச மென்றுவந் தார்சன காம்பரத்தைப்
பொறுத்தவ ளைக்கஞ் சனமேனிக் காவி புலர்ந்துருகிச்
சிறுத்தவ ளைக்கஞ்சங் கூப்புமென் பேதைக்கென் செப்புவதே.(ச

செப்போ? தனஞ்செழுந் துப்போ?செவ் வாயென்று சேயிழையா
கொப்போ தனஞ்சுரு கித்திரி வீர்!கன லூதைமண்விண்
அப்போ தனமென் றமுதுசெய் தாரலங் காரர்பொற்றாள்
எப்போது! அணைந்த றவிர்ந்தேத்த நீங்க ளிருக்கின்றதே. (௨௦

இருக்கந் தரத்தனை வோர்களு மோதி யிடபகிரி
நெருக்கந் தரத்தனை யேத்தநின் றானை நிறத்ததுப்பின்
உருக்கந் தரத்தனைத் துன்பொழித் தானை யுலகமுண்ட
திருக்கந் தரத்தனை யல்லாதெண் ணேனொருதெய்வத்தையே. (௨௧

தெய்வம் பலவையர் நூலும் பலவவை தேர்பொழுதிற்
பொய்வம் பலவென்று தோன்றும்புல் லோர்கட்குப் போதநல்லோர்
உய்வம் பலனு மவனேயென் றோதி யுணர்வர்நெஞ்சே!
கொய்வம் பலர்சொரி யுஞ்சோலை மாமலைக் கொண்டலையே. (௨௨

கொண்டலை யாநிற்று மைம்புலக் கோண்மக ரங்களினீர்ப்
புண்டலை யார்பிற விக்கடன் மூழ்குவ ருத்தமனைத்
தண்டலை யார்திரு மாலிருஞ் சோலைத் தனிச்சுடரைப்
புண்டலை யால்வணங் காரணங் கார்வினை போகவென்றே. (௨௩)

என்று தரங்கலந் தேனற்றை நான்றொட் டிற்றைவரை
நின்று தரங்கிக்கின் றேற்கருள் வாய்நெடுங் கான்கடந்து
சென்று தரங்கக் கடறூர்த் திலங்கையிற் றீயவரைக்
கொன்றுத ரங்குவித் தாய்!சோலை மாமலைக் கோவலனே! (௨௪)

கோவலன் பார்ப்புடன் கேகயஞ் சூழ்குளிர் சோலைமலைக்
காவலன் பாற்கடற் கண்டுயின் மாலலங் காரனென்றே
பாவலன் பாற்பணி வாரணி வானவ ராகிமறை
நாவலன் பார்ப்பதி நாதனண் ணுப்பத நண்ணுவரே. (உ௫)

நண்ணின னுக முடிமே னடித்தென்னை நாசமறப்
பண்ணின னுகமும் பாரு மளந்தன பண்டுதம்பி
மண்ணின னுக வனம்போ யினவளர் சோலைமலைக்
கண்ணின னுகங் கரியான் சிவந்த கழலிணையே. (உ௬)

[தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கல்]

கழலப் புகுந்த வளையறி யாரென் கருத்தறியார்
அழலப் புகன்றெறுப் பாரன்னை மாரறு காற்சுரும்பு
சுழலப் புனைந்த துழாய்மார்பர் மாலிருஞ் சோலையென்னூர்
தழலப் புவரென் றனங்களி லேசந் தயங்கவென்றே. (உ௭)

தனத்துக் கராவிய வேல்விழிக் கேக்கற்றுத் தையலரால்
தினத்துக்க ராகித் திரிவார் பலர்சிலர் செங்கமல
வனத்துக்க ராசலங் காத்தாற்குச் சோலை மலையினின்ற
கனத்துக்க ராவணை யாற்கெம்பி ராற்குள்ளங் காதலரே. (உ௮)

காதலைப் பத்தினி மேல்வைத்த நீசக் கருநிருதன்
மாதலைப் பத்தியை மண்ணிலிட் டாய்!நின்னை வாழ்த்தித்தொண்டர்க்
கீதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழு மிடபவெற்பா!
நீதலைப் பத்தியங் கித்திரி வேற்கருள் செய்தருளே. (உ௯)

அருட்டரு மங்கை விடாதேத்து மன்பருக் கன்பரெல்லில்
இருட்டரு மங்கை யெறியாழி யாரிசைக் கிர்நரும்
கெருட்டரு மங்கைய ரும்வா ழிடப கிரியிற்கல்லா
முருட்டரு மங்கைய லெய்திலன் றேயலர் முத்தரன்றே. (௩௦)

மூத்தான் றேநின் கழலொரு காற்றை முகிழ்க்கப்பெற்றோர்
பித்தான் றேநினைக் கேபித்த ராகிற் பிரமன்கங்கை
வைத்தான் றேய்துயர் தீர்த்தாய்!நின் சோலை மலைமருவும்
பத்தான் றேபரி வாலென்னை யாளும் பாமர்களே. (௩௧)

பரந்தா மரைத்திரு மாலிருஞ் சோலைப் பரமரைக்கால்
கரந்தா மரையன்ன கார்நிறத் தாரைக் கடல்கடக்கும்
சரந்தா மரைதிரி கான்போ யிலங்கைத் தலைவன்பத்துச்
சிரந்தா மரைக்கணைத் தெய்தாரை யெய்தற்குத் தேர்மனமே. (௩௨)

தோரா யிரவு பகலிரை தேடுவை தீமைநன்மை
பாரா யிரங்குவை பாவைய ராற்பண்டு மாவலிபால்
சோரா யிரந்தவ னைத்திரு மாலிருஞ் சோலைநின்ற
பேரா யிரமுடை யானைநெஞ் சே!என்று பேணுவையே? (௩௩)

[தலைவி தனது வேட்கை மிகுதியைக் கூறுதல்]

பேணிக் கவித்தவ ளைக்குடை யாய்!பெரி யோர்பதின்மர்
ஆணிக் கவித்தமிழ் மாலைகொண் டாயழ கா!கரிய
மாணிக்க வித்தக மாமலை யே!வண் டுளவுக்கல்லால்
பாணிக் கவித்தடங் காதுவெங் காமப் படர்கனலே. (௩௪)

[பிரிவாற்றாத தலைவி சந்திரனை நோக்கி
இரங்கிக் கூறுதல்]

படாரகு வால்குவி யக்குழ லூதிய பாலரையம்
அடாரகு வாகனன் றுதைக்கிட் டாரலங் காரர்துழாய்க்
இடாரகு வார்பலர் காண்?தமி யேனை யெரிப்பதென்?நீ
விடாரகு வாய்க்கொண் டேல்சுட்டுக் கான்றிட்ட வெண்டிங்களே! ()

[நிலவினால் வருந்துந் தலைவியின் தளர்ச்சியைக் கண்ட
பாங்கி இரங்கல்]

திங்களைப் பானின்ற செந்தீக் கொழுந்திற் செழுஞ்சங்குபோ
லுங்களைப் பாவை யுருகுவ தோர்கில ரும்பரெல்லாம்
எங்களைப் பா! எமைக் காவாய்! எனவுல கீரடியால்
அங்களைப் பான்வளர்ந் தார்சோலை மாமலை யாதிபரே. (௧௬)

ஆதிய ராவிற் றுயிலலங் கார ரழகரன்பாம்
வேதிய ராவுநி வீற்றிருப் பாரண்ட மீதிருக்கும்
சோதிய ராவின்பின் போந்தாளை யன்றித் தொழேனுடலைக்
காதிய ராவினும் பொனமா மகுடங் கவிக்கினுமே. (௧௭)

கவித்தானை மன்னற்கு நட்பாய் முடிகவித் தானையுன்று
புவித்தானை வற்றப் பொழிசரத் தானைப் பொருதிலங்கை
அவித்தானை மாலிருஞ் சோலைநின் றானை யழகனைமுன்
தவித்தானை வா! என வந்தானைப் பற்றினென் றஞ்சமென்றே. (௧௮)

தஞ்சந் தனமென்று தேடிப்புல் லோர்தைய லார்கடைக்கண்
வஞ்சந் தனங்கொள்ள வாளா விழப்பர் மதியுடையோர்
செஞ்சந் தனப்பொழின் மாலிருஞ் சோலைத் திருநெடுமால்
நெஞ்சந் தனக்குவப் பாகநல் காநிற்பர் நேர்படினே. (௧௯)

நேராய வேதனை நெஞ்சிடந் தாய்! நெடுஞ் சோலைமலைக்
காராய! வேதனை முன்படைத் தாய்! நின் கழற்குத்தொண்டென்
றோராய வேதனைப் புன்பிறப் போயு மவாவழியிற்
பேராய வேதனை யில்லுழைப் போரும் பிழைப்பர்களே. (௨0)

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

பிழைத்தலை யானெண்ணிப் பேசுகின் றேனிப் பிணிமற்றொன்றால்
மழைத்தலை வார்குழ லீர்! தணி யாது வருணனைமுன்
அழைத்தலை யங்கடைத் தாரலங் கார ரலங்கனல்கீர்!
முழைத்தலை நின்று மலயா நிலம்வந்து மோதுமுன்னே. (௨௧)

மோதாக வந்தனை மூட்டிலங் கேசன் முடிந்துவிண்ணின்
மீதாக வந்தனை வில்லெடுத் தேவிடை வெற்பினின்ற
நாதா! கலந்தனைச் செற்றாய்! உனையன்றி நான்மறந்தும்
தீதாக வந்தனை செய்யேன் புறஞ்சில தேவரையே. (சஉ)

தேவரை யாதன் மனிதரை யாதல் செழுங்கவிதை
நாவரை யாம னவிலுகிற் பீர்!நம்மை யாளுஞ்செம்பொன்
மேவரை யானை யிருஞ்சோலை வேங்கட மெய்யமென்று
மாவரை யானை யொருவனை யேசொல்லி வாழுமினே! (சங)

வாழுமின் பங்கயச் சுந்தர வல்லி மணாளன்வெற்பைச்
சூழுமின்! பந்தித்த தொல்வினை தீர்ந்துய்யத் தொங்கல்சுற்றும்
தாழுமின் பஞ்சணை மேன்மட வார்தட மாமுலைக்கே
வீழுமின் பங்கரு தித்துன்ப யோனியில் வீழ்பவரே! (சச)

வீழும ராமர மெய்தார் மதிதவழ் வெற்பைநெஞ்சே!
தாழும ராடச் சமன்குறு காணிச் சரீரமென்னும்
பாழும ராமற் பரகதி யேற்றுவர் பார்க்கில்விண்ணோர்
வாழும ராவதி யுந்நர காமந்த மாநகர்க்கே. (சரு)

நகரமு னாடும் புரந்தவர் நண்ணல ரால்வனமும்
சிகரமு னாடுஞ் சிறுமைகண் டோமஞ்ஞை தேனிசைகள்
பகரமு னாடும் பனிச்சோலை வெற்பினிற் பார்க்குக்கஞ்சன்
தகரமு னாடுகைத் தார்க்கறிந் தீர்கள் சரண்புகுமே! (சசு)

சரணிய னாகத் தனைகிளைந் தாரைத்தன் போலவைக்கும்
ஆரணிய னாகத் தனையா னரங்க னழகனெங்கோன்
இரணிய னாக மிடந்தான் கதையன்றி யினர்தங்கள்
மூரணிய னாகத்தும் புன்குர லோரி முதுக்குரலே. (சஎ)

மூதுவிருந் தானவத் தானிரை மேய்த்தவர் முன்விதுரன்
புதுவிருந் தானவர் மாலலங் காரர் பொலங்கழலா
மதுவிருந் தாமரைக் காளா யிராக்கு மதிநுட்பநூல்
எதுவிருந் தாலு மதனால் விடாவிங் கிருவினையே. (௨அ)

[தலைவி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

வினையாட்டி யேன்கொண்ட வெங்காம நோய்வெறி யாட்டினுமிச்
சினையாட்டி னுந்தணி யாதன்னை மீர்!செய்ய பூங்கமல
மனையாட்டி நாயகன் மாலிருஞ் சோலை மலைச்சிலம்பாற்
றனையாட்டி வாருஞ்சொன் னேனந்த நோயு மெனக்கில்லையே. ()

[வண்டு விடுதூது]

எனக்கா வியங்கு முடலிங்கு மாகி யிருப்பதைச்சந்
தனக்கா வியங்குந் தமரவண் டே!சொல்லுந் தத்துவநூல்
சனக்கா வியங்கவி வல்லோர் புகழலங் காரனுக்கு
வனக்கா வியங்கண்ணி மாமலை ராண்மண வாளனுக்கே. (௩0)

மணவாள ராவி நிகர்திரு மாதுக்கு மாலழகர்
பணவாள ராவிற்கண் பள்ளிகொள் வார்திருப் பாதமெண்ணக்
குணவாள ராவிரின் றேயுயிர் காள்!உம்மைக் கூற்றுவனார்
நிணவாள ராவி யறுக்குமப் போது நினைப்பரிதே. (௩௧)

நினைப்பரி யாய்!எளி யாய்!உம்பர் யார்க்குநின் னன்பருக்கும்
வினைப்பரி யானவன் வாய்பிளந் தாய்!வியன் சோலைமலை
தனைப்பரி யாநின்ற தாளழ கா!முற் சனனத்துள்ளும்
உனைப்பரி யாமலன் றேபரித் தேனிவ் வுடலத்தையே. (௩௨)

உடலம் புயங்கத் துரிபோல் விடுமென் றுவணப்புள்ளின்
அடலம் புயமிசை சீவால் வேண்டுமை யானனற்கு
மடலம் புயற்கும் வரந்தருஞ் சோலை மலைக்கரசே!
கடலம் புயர்வரை யாலடைத் தாய்!என்னைக் காப்பதற்கே. (௩௩)

காப்பவ னந்த மலரோனை யுங்கறைக் கண்டனையும்
பூப்பவ னந்தாம் போக்கவைப் பான்புனல் பார்விசும்பு
தீப்பவ னந்தருந் தெய்வசி காமணி சேவடியை
நாப்பவ னந்தப் புகழ்வார்க் கொப்பில்லை நவகண்டத்தே. (௫

கண்டா கனன்கண்ண னல்லாற் கதியின்மை கண்டடைந்த
துண்டா கனம்பவொட் டாதுங்க ளூழ்வினை யுண்மையறிந்
தண்டா கனவண்ணனே! அரு ளாயென் றழகனுக்கே
தொண்டாக னென்னெஞ்சி னாலுரைப் பீர்பிறர் தொண்டர்களே. (

தொண்டுப டார்திரு மாலிருஞ் சோலையிற் சோதிக்கன்பு
கொண்டுப டாமல ரிட்டிறைஞ் சார்மடக் கோதையரைச்
கண்டுப டாமுலை தோயனு ராகங் கருதியிரா
உண்டுப டாநிற்கும் போதுநை வாரெங்க ளுய்வதுவே. (௫௬

உய்வந் தொழும்புசெய் தென்றிருப் போமையுய் யாமலைவர்
பெய்வந் தொழுவினைக் கேயென்ப ராற்பெருந் தேன்சிகரம்
தைவந் தொழுகு மலையலங் கார! சதுமுகத்துத்
தெய்வந் தொழுந்தெய்வ மே!என்கொ லோ?உன் றிருவுளமே. ()

திருவிளை யாடுதிண் டோட்செங்கண் மால்பல தேவருடன்
மருவிளை யான்றிரு மாலிருஞ் சோலை மலையெனவோர்
உருவிளை யாமற் பிறப்பார் பலர்புக ழோதிச்சிலர்
கருவிளை யாநிற்க வித்தாவர் முத்தியிற் காமமற்றே. (௫அ)

காமத் தனைப்பொய் யழுக்கா று கோபங் களவுகொலை
யாமத் தனையு முடையேனை யாளுங்கொல்? ஆன்பொருப்பாம்
தாமத் தனைவரும் போற்றநின் றுண்பண்டு தாமரையோன்
பூமத் தனைச்செய்த நோய்துடைத் தானடிப் போதுகளே. (௫௯)

போதகத் தானும்வெண் போதகத் தானும் புராந்தகனும்
நீதகத் தானது நீர்தருங் காலைத் திருவரைசேர்
பீதகத் தாய்!அழ கா!அரு ளாயென்பர் பின்னையென்ன
பாதகத் தான்மறந் தோதனி நாயகம் பாவிப்பரே. (௬௦)

பாவிக் கமல விரிவஞ்சற் கிறையவர் பத்தர்தங்கள்
ஆவிக் கமலத்து வீற்றிருப் பாரளிப் பாடல்கொண்ட
வாவிக் கமல மணநாறுஞ் சோலை மலையைக்கண்ணால்
சேவிக் கமல மறுமனமே!எழு செல்லுதற்கே. (௬௧)

செல்லுக் குவளை குழளுட்ட மென்று தெரிவையர்பால்
பல்லுக் குவளை முதுகாந் தளையும்புன் பாட்டுரைப்பீர்!
அல்லுக் குவளை யுழும்பாண்டி நாட்டை யடைந்துநுங்கள்
சொல்லுக் குவளையுண் டார்க்கலங் காரர்க்குச் சூட்டுமினே! (௬௨)

[மேகவிடுதூது]

சூட்டோ திமஞ்சென்று சொல்லாதென் காதலைத் தும்பியிசைப்
பாட்டோதி மங்கைய ரும்பணி யார்பண்டு கன்மழைக்காக்
கோட்டோ திமமெடுத் தார்சோலை மாமலைக் கோவலனார்
மாட்டோ திமஞ்சனங் காள்!உரைப் பீர்!மறு வாசகமே. (௬௩)

வாசம் பரந்த துழாயுமென் பாடலு மாலையொளி
வீசம் பரம்பசும் பொன்னுமென் வேட்கையும் வீற்றிருக்கும்
தேசம் பரம பதமுமென் சிந்தையுந் தீவளியா
காசம் பரவைமண் கண்டுண்ட மாலலங் காரனுக்கே. (௬௪)

அலங்காரன் சுந்தரத் தோள னழக னணிமுடியில்
இலங்கார னேறு திருவுடை யானெட் டெழுத்துங்கற்றார்
கலங்கா ரனங்கன் கணையாலெச் செல்வமுங் காதலியார்
மலங்கா ரருந்துயர் மேவினு மாகுவர் வானவரே (௬௫)

வானவ தாரணி சுந்தரத் தோளன்முன் மாவலியைத்
தானவ! தாரணி தா!என்ற மாயன் றராதலத்து
மீனவ தார முதலா னவைவினை யின்றியிச்சை
யானவ தாரறி வாரவ ரேழுத்த ராமவரே. (௩௬)

[பிரிவாற்றது வருந்துந் தலைவியைக் குறித்துச்
செவிலி இரங்கல்]

ஆமவ ளைப்பணித் தாள்வா ரழக ரபனுமையாள்
வாமவ ளைப்பணி யான்பணி பாதத்தை வாழ்த்துங்கொங்கை
ஏமவ ளைப்பணி பூணுள்சந் தேந்திழை யாளுரைத்தால்
வேமவ ளைப்பணி யாதே யெனுமெங்கண் மெல்லியலே. (௩௭)

[பிரிவாற்றது வருந்துந் தலைவி நிலைகண்டு
தோழி இரங்கல்]

மெல்லிய லைப்பரி யங்களை யாரும் வெறுத்துவசை
சொல்லிய லைப்பரி யங்கவொட் டார்சுடர் மாமலையைப்
புல்லிய லைப்பரி யங்கத்தி லேறும் புயல்பதின்மர்
கல்லிய லைப்பரி யங்கழற் றுமை நயந்தபின்னே. (௩௮)

பின்னிறப் பும்பிறப் புந்நரை மூப்பும் பிணியுமினை
முன்னிறப் பும்பிரித் தாளிருந் தானவர் முகிலனைக
மன்னிறப் புங்கக் கணைதொட்ட சோலை மலையழகன்
பொன்னிறப் புண்டரி கத்திருத் தாளன்றிப் போற்றிலமே. ()

[பிரிவாற்றத் தலைவி, செவிலியைக் குறித்து இரங்கல்]

போற்றியி ராம!என் றூர்சோலை மாமலை போதவிடார்
மாற்றியி ராவைப் பகலாக் கிளார்வண்டு மூய்குழன்மேல்
ஏற்றி யிராசத மாகவை யாரொன் னிடையையெல்லா
மாற்றியி ராவன்னை மாவென்னை! வாய்வம் பளக்கின்றதே. (௪௦)

அளப்பது மங்கையி னீரேற் பதுந்தந் தளிப்பதும்பின்
பிளப்பது மங்கையில் வெண்கோட்டிற் கொள்வதும் பெருணவாக்
கிளப்பது மங்கை யெனர்த்தோள் புணர்வதுஞ் சேட்கில்லையம்
வளப்பது மங்கையஞ் சேர்சோலை மாமலை மாதவரே. (எக)

மாதவ ராலும்ப ராலறி யார்மது ரைப்பிறந்த
யாதவ ராலிலை மேற்றுயின் றாரிருந் தாழ்சுனையில்
போதவ ராலுங்கண் மாலிருஞ் சோலையிற் போம்பிறவித்
தீதவ ராலன்றி யெத்தேவ ராலுந் தெறலரிதே. (எஉ)

அரியவ ரந்தந் தயன்முத லோர்க்கருள் செய்தவரைப்
பெரியவ ரந்தமில் வாழ்வின ராக்கித்தம் பேரருளால்
கரியவ ரந்தணர் கைதொழு மாலலங் காரர்வையத்
துரியவ ரந்தரங் கத்துயர் தீர்க்க வுலாவுவரே. (எங)

உலகுதிக் கும்படி சிந்தித்துத் தந்திவ் வுலகிலுறு
கலகுதிக் கும்படி நின்றபி ரானிட னானிலமும்
இலகுதிக் கும்விசும் புந்தொழ வோங்கி யிருல்வருடை
பலகுதிக் குந்தொறுந் தேன்பாயுஞ் சோலைப் பருப்பதமே. (எச)

பருப்பதந் தாமன்னி நிற்பது பாற்கடல் பள்ளிகொள்வ
திருப்பதந் தாமம்பண டிப்போதெ லாமிள ஞாயிறன்ன
உருப்பதந் தாமதர்க் கியாம லன்பர்க் குதவழகர்
திருப்பதந் தாமரை போல்வா ருகப்பதென் சிந்தனையே. (எரு)

சிந்திக் கலாரங் கொழிக்குந் திருச்சிலம் பாற்றழகும்
பந்திக் கலாப மயிலாடுஞ் சாரலும் பங்கயனோ
டந்திக் கலாமதி யாற்கரி யாருறை யான்பொருப்பும்
வந்திக் கலாமெனிற் சந்திக்க லாமுயர் வைகுந்தமே. (எசு)

வைதா ரையுமுன் மலைந்தா ரையுமலர்த் தாளில்வைத்தாய்
மொய்தாரை யத்தனைத் தீங்கிழைத் தேனையு மூதுலகிற்
பெய்தாரை வானிற் புரப்பா னிடபப் பெருங்கிரியாய்!
கொய்தாரை வேய்ந்த திருவடிக் கீழ்த்தொண்டு கொண்டருளே. ()

கொண்ட மருந்துங் கடைவாய் வழியுகக் கோழைவந்து
கண்ட மருந்துய ராம்போ துன்பாதங் கருதறியேன்
வண்ட மருந்துள வோனே! தென்சோலை மலைக்கரசே!
அண்ட மருந்தும் பிரானே!இன் றேயுன் னடைக்கலமே. (எஅ)

அடைக்கலந் தானை யிரந்தாள் புகல வவள்பொருட்டாற்
படைக்கலந் தானைத் தருமன் கெடாமல்வெம் பாரதப்போ
ரிடைக்கலந் தானை யலங்கார னைச்சர ணென்றடைந்தேன்
முடைக்கலந் தானையு மப்போ தயர்ப்பினு முத்தியுண்டே. (எகூ)

உண்டிறக் கும்புவ னங்களை மீள வுமிழ்ந்திலைபோல்
பண்டிறக் கும்பது மத்தோன் புரந்தரன் பைந்தழல்போல்
கண்டிறக் குஞ்சங் கரன்முத லோர்களைக் கண்டவரார்?
திண்டிறக் குஞ்சரஞ் சேர்சோலை மாமலைச் சீதரனே! (அ௦)

[பிரிவாற்றது வருந்துந் தலைவியின் நிலைமையைக் குறித்துத்
தோழி இரங்கல்]

சீரரி தாழ்பொழின் மாலிருஞ் சோலையிற் செல்வர்செங்கண்
போரரி தாள்புனை தாரரி தாகிற்றண் பூந்துளவின்
தாரரி தாவுந் தழையரி தாகிற் றழைதொடுத்த
நாரரி தாகிற் பிழைப்பரி தாமெங்க ணன்னுதற்கே. (அக)

நன்னுத லைப்பணி பூண்மார்பில் வைத்துவிண் ணாட்டிருப்பார்
மின்னுத லைப்பணி மேற்றுயில் வார்விடை வெற்பினிற்பார்
மன்னு தலைப்பணி யன்பரை வைக்கு மலரடிக்கீழ்த்
துன்னு தலைப்பணி செய்வதெஞ் ஞான்று?என் றுயர்தொலைக்கே.

தொலைத்தானை யோதுந் தொலையானை யன்னைசொல் லான்மருடம்
கலைத்தானை ஞானக் கலையானை யாய்ச்சி கலைத்தொட்டிலோ
டலைந்தானைப் பாவி னலையானை வாணன்கை யற்றுவிழ
லைந்தானை ... மலையானை வாழ்த்தென் மடநெஞ்சமே! ()

[தலைவி. தோழியறத் தொடுநிற்றல்]

செந்நூர்மை பாற்ற முடியாது வெய்து நீளிரவுந்
தண்ணிலைம் பாற்றுமி புங்கஞ்ச மாகுலிசாரி கண்மழையை
...நிலைம் பாற்றுநித் தாமல் கார ராடிவிளக்கும்
...செயமிழை பாற்றரு ...கட்டத் திருமிர் தேற்றுகற்கே. (அஅ)

...மெய்வீர தாமனை நேற்றுனர் போற்றிரு வெட்டெழுத்தால்
...யவிந்த தாமென் மயக்கமெல் லாமண்ணும் விண்ணுமுய்ய
போ...யவிந் தாமப் புலவங் காரன்பொன் மேருவைப்போல்
மே...முயிந் தாமனை புஞ்சுக் தாநந்தும் தாளண்ணலே. (அகூ)

அண்ணலை வண்மைந்து தோயசோலை மாமலை யச்சுதனை நந்
தண்ணலை வானைய னைத்தெய்வ நாதனைத் தாளடைவான்
...ண்ணலை வாயபகை பாமைவ ரோடி... ...னமுடற
புண்ணலை யானென்னெனி ருய்மன ... ...மைமன்றே! ()

...மையி லேமயிர்க் கற்பரைப் போற்றிப் பொதுமகளோக்
குலமையி லே!குயி லே!கொடி யேயென்றுங் கூர்விழியாம்
பைமையி லேயென்றும் பாடாமற் பாடுமின்! பாவலர்காள்!
நலமையி லேய்முத்த மார்சோலை மாமலை நம்பனையே. (அள)

நம்பினின் றேனுன் சரணர விந்தத்தை நன்னெஞ்சென்னும்
செம்பினின் றேபொறித் தேனுனக் காளொன்று தெய்வக்குழாம்
பம்பினின் றேசெறிக் கும்பதங் காண... பதறுகின்றேன்
கொம்பினின் றேன்சொரி யுஞ்சோலை மாமலைக் கொற்றவனே! ()

கொற்ற விராவணன் பொன்முடி வீழக் கொடுங்கண்டுஞ்சல்
உற்ற விராவணன் மாளவெய் தோனெண் பாதனுக்குச்
சொற்ற விராவணன் மாலிருஞ் சோலை தொழுதவினை
முற்ற விராவண னற்றமிழ் மாலை மொழிந்தனனே. (௨௯)

மொழித்தத்தை கொஞ்சு மலையலங் காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் காசளித் தோனடி நாட்டொடர்ந்தென்
னழித்தத்தைச் செய்தன்றிப் போகா வினையை யொருநொடியிற்
கழித்தத்தை யென்சொல்லு கேன்றனக் காட்பட்ட காலத்திலே. ( )

கால மலைக்கும் புவனங்க ளாக்கரந் தாய்மை திறம்
கால மலைச்சுமைத் தாயழ கா!கய லைதுப்பஞ்சார்
கால மலைக்கும் புவிக்குமன் பா!உயிர் காயம்வலிக்கு
கால மலைக்குங் கடுங்கூற்றைக் காய்ந்தனைச் சாத்தருளே. (௩௧)

அருளக் கொடியிடைப் பூமாது நீயுமவர் தாளிலுமாம்
இருளக் கொடிய நமன்வருங் காலத் தக்கபுயிலுமாய்
கருளக் கொடியழ கா!அலங் கார!வன் கஞ்சனைஞ்சத்
தருளக் கொடிய வுதைத்தாய்! எனதுயி ருன்றுயிலே. (௩௨)

[பிரிவாற்றாத் தலைவி தனது நிலைமையைக் கூறுதல்]

உயிர்க்கும் படிக்குமுன் னூயிரம் பேரொன் றுறுத்தனைமார்
செயிர்க்கும் படிக்குநின் றேனென்செய் கேன்!செழுந் தேவர்களும்
அயிர்க்கும் படிக்குற னாமழ கா!அலங் கார!வெய்க்கும்
தயிர்க்கும் படிக்குஞ்செவ் வாய்மலர்ந் தாய்!நின்னைத் தான்பணிந்தே.

பணிபதி வாடநின் றாடின னூற்றுவர் பாற்சென்றனை
பணிபதி னாலு புவனமுந் தாயின பாப்பதின்மர்
பணிபதி யெங்கு முவந்தன பங்கயப் பாவையுடன்
பணிபதி மார்ப னலங்காரன் பொற்றிருப் பாதங்களே. (௩௪)

பாதக ரத்தனை பேருங் கனகனும் பன்னகத்தா
மேதக ரத்தனை யற்கரு ளாளியை யெட்டெழுத்துள்
ஓதக ரத்தனைச் சுந்தரத் தோளுடை யானைநவ
நீதக ரத்தனைச் சேர்ந்தார்க்குத் தேவரு நேரல்லரே. (௬௫)

அல்லலங் காரையுஞ் சேர்விக்கு மைம்புல வாசையென்றும்
பல்லலங் காரைந்து கோளூன்றி யும்பற்ற றுதுகண்டாய்
மல்லலங் காரிகை யார்மரு ளர்ந்து வணங்குநெஞ்சே!
தொல்லலங் காரனைத் தென்றிரு மாலிருஞ் சோலையிலே. (௬௬)

[பிரிவாற்றாத தலைவி நிலையைக் குறித்துப்
பாங்கி இரங்கல்]

நே[illegible] லாமையில் சேர்திரு மாலிருஞ் சோலைநின்றான்
வேலையி லாமையில் வேடங்கொண் டான்புய மேவப்பெறச்
சேலையி லாமையி லக்குகண் ணுளையன் றெய்வத்துழாய்
மாலையி லாமையின் மாலையுற் றளந்தி மாலையிலே. (௬௭)

[பிரிவாற்றாது வருந்துந் தலைவி நிலையைத் தலைவனுக்குப்
பாங்கி கூறல்]

மாலைக் கரும்பு சிறுகா றுகைக்க வருந்துமெங்கள்
ஆலைக் கரும்புதன் றேசையெல் லாஞ்சொல்லி லாயிரந்தோட்
டோலைக் கரும்புண் டொடமுட மாமதி யூர்குடிச்
சோலைக் கரும்புய லேயரு ளாடன் றுளவினையே. (௬௮)

துளவிலை யார்பொன் னடிமுடி சூட்டித்தொண் டாக்கியென்னை
வளவிலை யாக்கொண்ட நீகை விடேன்மங் கலகுணங்கள்
அளவிலை யா! அலங் கார! சமயிக ளாய்ந்தவண்ணம்
உளவிலை யாயுரு வாயரு வாய வொருமுதலே! (௬௯)

ஒருபா லவர்போ ரொருபான் முனிவரு டனிருந்தன
இருபா ரவையுஞ்செ[illegible] வெப்பதென் [illegible]ட்ட யக்கினிக்கும்
பொருபாற் கடற்[illegible] துதிக்கும் பொருதைய ராகதிசுத
சிருபா லைவை [illegible] திருக்கின்ற சிங்கமுமே [illegible]

---

அ[illegible] ருகரும் பரமசாமிக்கு [illegible]
கை[illegible] பெருமாள் மக்காக் காரிமருக கருத்[illegible]றைல்
க[illegible]த் தொற்றொடை யமைத்த [illegible]
விளங்கத் தீர்த்தி பனைவள நாடன் [illegible] ([illegible])

அழகரந்தாதி

முற்றிற்று

ரிப்பன் புஸ்தகசாலை, **87**, தம்புசெட்டி வீதி, சென்னை

உலகநாத பண்டிதர் இயற்றிய

# ஜாதி பேத விளக்கம்

## புதிய பதிப்பு: விலை அணா 4

## இந்நூலில் அடங்கிய ஜாதிகளின் பெயர்

1. சபாநாதர் வணக்கம், 2. அவை யடக்கம், 3. ஆக்கியோன் பெயர், 4. பதிகம, 5. நூற் பயன், 6. ஜாதித் தொகை, 7. சைவ பேதம், 8. சைவர் தொழில், 9. ஆதி சைவர், 10. மஹா சைவர், 11. ஜாதித் தோற்றம், 12. அந்தணர், 13. அரசர், 14. வணிகர், 15. வேளாளர், 16 அனுலோமாதியர், 17. அலகர், 18 சூதர், 19. தூதர், 20. குண்டக கோளகர், 21. ஷையார் தொழில், 22. தெலுங்கப் பிராமணர், 23. காணியாளர், 24. அபிடேகர், 25. போசர், 26. சாமந்தர், 27. பூணூற் கணக்கர், 28. மல்லர், 29. பண்டிதர், 30. கைக்கோளர், 31. குயவர், 32 மருத்துவர், 33. கோமுட்டி, 34 பொன் வாணிபர் 35. கவறைகள், 36 ஓச்சர், 37. கொந்தக வேளாளர், 38. சவள வேளாளர், 39. மாவுத்தர், 40. சேனைக் கடையார், 41. பரிக்குலத்தார், 42. சுருதிமான், 43. பாய்வாணிகர், 44. சாலியர், 45. யாழ்ப்பாணர், 46. திசைக்கு உரியவர், 47. சிற்பர், 48. சாணியோர், 49. மீன் பள்ளியர், 50. பட்டணவர், 51. சேடர், 52. இடையர், 53. ஊசிச் சிற்பியர், 54. செக்கு வாணியர், 55, காவற் பள்ளியர், 56. ஈரங்கோலிடர். 57. தட்டார், கொல்லர், கன்னார், தச்சர், 58. சான்றார், 59. களாரயர், 60. மரவர், 61. பூமாலைக்காரர், 62. முச்சியர், 63. உறைகாரர், 64. அம்பட்டர், 65. கூத்தாடியர், 66. கரையார், 67. மாகுலவர், 68. வலையர், 69. வேடுவர், 70. செப்புக் கன்னார், 71. குன்றுவர், 72. சவணர், 73. நிலைத் தறியார், 74. காணிக்கர், 75. பரவர், 76. கடையர், 77, அநுலோமர்க்குத் துடக்குறுக்கிறவர், 78. அநுலோமர்க்கு வெளுககிறவர், 79. பிரதிலோமர்க்கு வெளுக்கிறவர், 80. நீல வண்ணார், 81. அரிப்பர், 82. இருளர், 83. கணியர், 84. ஒட்டர், 85. கடிகைப் புலவர், 86. பறையர், 87. இளமைகள், 88. சக்கிலியர், 89. தோட்டியர், 90. நக்கவாரிகள், 91. சோனகர், 92 பரங்கர், 93. கருவர், 94. ஜாதி உயர்ச்சி, 95. ஜாதித் தாழ்ச்சி.

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

பிரபோத சந்திரோதய வசனம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கம்: விலை ரூபா 1-4-0

---

பிரபுலிங்கலீலை வசனம்: கவிச் சக்ரவர்த்தியாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளியற்றிய அரிய நூலின் தமிழ் வசனம்: விலை ரூபா 1

---

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்: 82 பக்தர்களின் திவ்விய சரித்திரம்: விலை ரூபா 3

---

வேதப்பொருள் விளக்கம்: ருக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலுள்ள முக்கிய விஷயங்கள் அடங்கியது: விலை அணா 12. வேதப்பொருள் சார சங்கிரகம்: அணா 4

---

ஸ்ரீ பகவத்கீதை வசனம்: ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்த திவ்ய கீதையின் தமிழ் வசனம்: ரூபா 1-8-0

---

சைவ சமய விளக்க வினாவிடையும், சைவசமய ஆசௌச வினாவிடையும்: விலை அணா 8

---

வீரசைவ வினாவிடை: இதில் வீரசைவ மதத்தின் சமயாசார இலக்கணங்கள் யாவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன: அணா 5

---

அரிச்சந்திர புராண வசனம்: அரிச்சந்திர புராண மூலத்தை அநுசரித்துத் தமிழில் நூதனமாக வசனப்படுத்தப்பட்ட அரிய நூல்; இனிய நடையில் கதை விரிவாக அமைந்தது: விலை ரூபா 1-8-0

---

அருணாசல புராண வசனம்: அடியார்களின் பாவத்தைப் போக்கும திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரரின்மீது பாடப்பட்டுள்ள ஷை புராணத்தின் கருத்தை எல்லோரும் எளிதில் அறிந்துணருமாறு, இனிய நடையில் வசன ரூபமாக இயற்றப் பெற்றது: விலை ரூபா 1

---

திவ்விய தேச யாத்திரையின் சரித்ரம்: (வட தேசங்கள்) ரூபா 2

---

தக்ஷிண இந்தியா சரித்திரம்: ஷை 2-ம் பாகம் (தென் தேசங்கள்) விலை ரூபா 5

# நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

# நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி

## சிறப்புப் பாயிரம்

### வெண்பா

ஏற்ற மணவாள ரிசைத்தாரந் தாதிவெண்பா
தோற்றக்கே டில்லாத தொன்மாலைப்—போற்றத்
திருப்பதியா நூற்றெட் டினையுஞ்சே விப்போர்
கருப்பதியா வண்ணமுண்டா க.

[ஆழ்வார்கள் பன்னிருவர்]

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான்—வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு. (க)

[நம்மாழ்வார்]

பிறவாத பேறு பெறுதற்கெஞ் ஞான்று
மறவா திறைஞ்சென் மனனே!—துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பிதிருத் தாள். (உ)

[உடையவர்]

முன்னே பிறந்திறந்து மூதுலகிற் பட்டவெல்லாம்
என்னே மறந்தனையோ வென்னெஞ்சே!—சொன்னேன்
இனியெதிரா சன்மங்க ளின்றமுதப் பூதூர்
முனியெதிரா சன்பேர் மொழி. (ங)

[கூரத்தாழ்வான்]

மூக்கால மில்லா முகில்வண்ணன் வைகுந்தத்
தெக்காலஞ் செல்வா னிருக்கின்றேன்?—தக்காரெண்
கூரத்தாழ் வானடியைக் கூடுதற்கு நாயடியேன்
போரத்தாழ் வானசடம் போட்டு. (௪)

[பட்டர்]

நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலந் தானுகண்டீர்—ஆங்கூட்டச்
சிட்டருக்கு வாய்த்த திருவரங்க னின்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன். (௫)

[திருப்பதிகளின் வகை]

ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம்—சீர்நடுநா
டாறோடீ ரெட்டுத்தொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள். (௬)

---

# நூல்

## சோழநாட்டுத் திருப்பதிகள்-௪0

### க. திருவரங்கம் பெரிய கோயில்

சீர்வந்த வுந்தித் திசைமுகனு லல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ?—ஆர்வம்
ஒருவரங்கக் கோயி லுகந்தவனை யாள்வான்
திருவரங்கக் கோயிற் சிறப்பு. (க)

### உ. திருவுறையூர்

சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள்—உறப்போந்
துறந்தையா நின்ற வரங்கா! திருவாழ்
உறந்தையாய்! இங்குறைந்த தேது! (உ)

### ங. திருத்தஞ்சை

ஓதக்கே ணெஞ்சே! உனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை—போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று. (ங)

### ச. திருவன்பில்

போற்றிசெய வோர்குடைக்கீழ்ப் பொன்னாடு மிந்நாடு
நாற்றிசையு மாண்டாலு நன்கில்லை—தோற்றமிலா
எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர். (ச)

### ரு. திருக்கரம்பனூர்

சீலமா தவஞ்செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்தும்—உலகில்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே!
கரம்பனூ ருத்தமன்பேர் கல். (ரு)

### சா. திருவெள்ளறை

கல்லிருந்தான் றந்தை கமலத்தோ னக்கமலத்
தில்லிருந்தான் றந்தையரங் கேசனென்றே—தொல்லைமறை
உள்ளறையா நின்றமையா லுள்ளமே! கள்ளமின்றி
வெள்ளறையான் றாளே விரும்பு. (சா)

## எ. திருப்புள்ளம்பூதங்குடி

விரும்பினவை யெய்தும் வினையனைத்துந் தீரும்
அரும்பரம வீடு மடைவீர்—பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடை யீர்! அடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம். (எ)

## அ. திருப்பேர்நகர்

போமானை யெய்து பொருமானைக் கொம்புபறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானைத்—தாமச்
செழுந்திருப்பே ரானைச் சிறுகாலைச் சிந்தித்
தெழுந்திருப்பேற் குண்டோ விடர். (அ)

## கூ. திருவாதனூர்

இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார்—கடவுளர்க்கு
நாதனூ ராதரியார் நானென்தென் றாமலன்
ஆதனூ ரெந்தையடி யார். (கூ)

## க0. திருவழுந்தூர்

அடியாராய் வாழ்மி னறிவிலாப் பேய்காள்!
செடியார் வினையனைத்துந் தீரு—முடிவில்
செழுந்தூரத் தன்னெனினுஞ் செங்கண்மா லெங்கள்
அழுந்தூரத் தன்னணிய னாம். (க0)

## கக திருச்சிறுபுலியூர்

ஆமருவி மேய்த்த வரங்கரெதி ரார்கிற்பார்?
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள்—சேமம்
உறுபுலியூர் வன்றோ னுடையா னுடைத்தான்
சிறுபுலியூ ரெந்தைமேற் சென்று. (கக)

### கஉ. திருச்சேறை

சென்றுசென்று செல்வஞ் செருக்குவார் வாயிற்றோறு
நின்றுநின்று தூங்குமட நெஞ்சமே!—இன்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு! (கஉ)

### கங. திருத்தலைச்சங்கநாண்மதியம்

செப்புங்கா லாதவனுந் திங்களும்வா னுந்தரையும்
அப்புங்கா லுங்கனலு மாய்நின்றான்—கைப்பால்
அலைச்சங்க மேந்து மணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான். (கங)

### கச. திருக்குடந்தை

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ—வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெரும! குடந்தைக்கிடந்தாய்! பேசு. (கச)

### கரு. திருக்கண்டியூர்

பேசவரிற் றென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்;
கேசவனைக் காண்கவிழி; கேட்கசெவி;—ஈசனார்
உண்டியூர் தோறு முழன்றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை. (கரு)

### கசு. திருவிண்ணகர்

கையு முளையுங் கருத்துமுனக் கேயடிமை
செய்யும் படிநீ திருத்திடாய்—ஐயா!
திருவிண் ணகராளா! சிந்தையினு மெண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு. (கசு)

### ௧௭. திருக்கண்ணபுரம்

பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய்—ஏறுநீர்
வண்ணபுரத் தாய்!என் மனம்புகுந்தாய்! வைகுந்தா!
கண்ணபுரத் தாய்!உன் கழல். (௧௭)

### ௧௮. திருவாலி

கழன்றுபோம் வாயுவினைக் கட்டாமற் றீர்த்தம்
உழன்றுபோ யாடாம லுய்ந்தேன்—அழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து. (௧௮)

### ௧௯. திருநாகை

சேர்ந்துனகுக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினீ
ஆர்ந்ததற்கோர் கைம்மா றறிகிலேன்—பூந்துவரை
மன்னா!கை யாழி வலவா! வலம்புரியாய்!
தென்னாகை யாய்!அருளிச் செய். (௧௯)

### ௨௦. திருநறையூர்

செய்ய சடையோன் றிசைமுகத்தோன் வானவர்கோன்
ஐயமறத் தின்ன மறியாரே—துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன்செய் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல். (௨௦)

### ௨௧. திருநந்திபுரவிண்ணகரம்

செயற்கரிய செய்வோமைச் செய்யாம னெஞ்சே!
மயக்குவா ரைவர் வலியால்—நயக்கலவி
சிந்திபுர விண்ணகர மென்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு. (௨௧)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

## உஉ. திருவிந்தளூர்

நாடுதும்வா! நெஞ்சமே! நாராய ணன்பதிகள்
கூடுதும்வா! மெய்யடியார் கூட்டங்கள்—சூடுதும்வா!
வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும்
ஆதியிந்த ளூரா னடி. (உஉ)

## உங. திருச்சித்திரகூடம்

அடியா ருலகெல்லா மன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே னெஞ்சே!—கொடிதாய
சூத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டங்கருதிச் செல். (உங)

## உச. திருச்சீராமவிண்ணகரம்

செல்லுந் தொறுமுயிர்ப்பின் செல்லு மிருவினையை
வெல்லு முபாயம் விரும்புவீர்!—தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின்!பின் மீளாத
ஊராம விண்ணகர முண்டு. (உச)

## உரு. திருக்கூடலூர்

உண்டுகேட் டுற்றுமோந் துப்பார்க்கு மைவர்க்கே
தொண்டுபட லாமோ?உன் றொண்டனேன்—விண்டிலங்கும்
ஆடலூர் நேமிமுத லம்படையாய்! அன்புடையாய்!
கூடலூ ராய்!இதனைக் கூறு! (உரு)

## உசா. திருக்கண்ணங்குடி

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ? இன்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ?—தேறுகிலேன்
எண்ணங் குடியா யிருந்தானின் றன்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து. (உசா)

### உஎ. திருக்கண்ணமங்கை

கருத்தினால் வாக்கினா லன்மறையுங் காணா
ஒருத்தனைநீ நெஞ்சே! உணரில்—பெருத்தமுகில்
வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கம்
கண்ணமங்கை யூரென்று காண். (உஎ)

### உஅ. திருக்கவித்தலம்

காணியு மில்லமுங் கைப்பொருளு மீன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும்—சேணில்
புவித்தலத்தி லின்பமும் பொங்காவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால். (உஅ)

### உகூ. திருவெள்ளியங்குடி

காலனவும் போதாக் கடன்ஞாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார்?—கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகவூண் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர். (உகூ)

### ௩௦. திருமணிமாடக்கோயில்

சீரே தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினே னெஞ்சே!நீ—பாரில்
அணிமாடக் கோயி லரங்கனூர் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு. (௩௦)

### ௩௧. திருவைகுந்த விண்ணகரம்

வணங்கேன் பிறதெய்வ மாலடி யாரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன்—இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவே னீதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு. (௩௧)

### ௧௨. திருவரிமேயவிண்ணகரம்

வாழு மடியார் மடநெஞ்சே! நம்மளவோ?
தாழுஞ் சடையோன் சதுமுகத்தோன்—பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு. (௧௨)

### ௧௩. திருத்தேவனார்தொகை

ஆர்க்கும் வலம்புரியா லண்டமு மெண்டிசையும்
கார்க்கடலும் வெற்புங் கலங்கினவால்—சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத் தூதத்
தருத்தேவ னார்தொகையுஞ் சாய்ந்து. (௧௩)

### ௧௪. திருவண்புருடோத்தமம்

சாய்ந்த திருவரங்கந் தண்வேங் கடங்குடந்தை
எய்ந்த திருமா லிருஞ்சோலை—பூந்துவரை
வண்புருடோத் தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புருடோத் தமன்ற னூர். (௧௪)

### ௧௫. திருச்செம்பொன்செய்கோயில்

[தலைவி ஆற்றாமை மீதுதியால் மடலூரத் துணிதல்]

ஊர்வேன் மடலை யொழிவேன் மடநாணம்
சேர்வேன் கரிய திருமாலைப்—பாரறிய
அம்பொன்செய் கோயி லரங்கனணி நாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினிற் சென்று. (௧௫)

### ௧௬. திருத்தெற்றியம்பலம்

சென்றது காலந் திரைநரைமூப் பானவினி
என்றுகொல்? சாவறியோ மென்னெஞ்சே!—கன்றால்
உருத்தெற்றி யம்பலத்தை யோர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி யம்பலத்தைச் சேர்! (௧௬)

## ௩௭. திருமணிக்கூடம்

சோராது முன்செய்த தீவினையின் செய்வதுவும்
வாரா தினிநீ மடநெஞ்சே!—நேராக்
குருமணிக்கூ டத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக்கூ டத்தானைச் செப்பு. (௩௭)

## ௩௮. திருக்காவளம்பாடி

செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற் றமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வங் காண்பாரை—எப்போதும்
காவளம்பா டித்திருமால் காற்றா மரைதொழுது
நாவளம்பா டித்திரிவே னான். (௩௮)

## ௩௯. திருவெள்ளக்குளம்

நானடிமை செய்யவிடாய் நானானே னெம்பெருமான்
தானடிமை கொள்ளவிடாய் தானானான்—ஆனதற்பின்
வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை யொத்து. (௩௯)

## ௪0. திருப்பார்த்தன்பள்ளி

ஒத்தமர ரேத்து மொளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்திற் காண்பரிய வென்னெஞ்சே!—சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்
பார்த்தன்பள் ளிக்குட் பணி. (௪0)

சோழநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

## பாண்டியநாட்டுத் திருப்பதிகள்-கஅ.

### க. திருமாலிருஞ்சோலைமலை

பணிந்தேன் றிருமாலைப் பாமாலை தாளில்
அணிந்தே னருட்டஞ்ச மாகத்—துணிந்தேன்
திருமா லிருஞ்சோலை சேர்ந்தே னெனக்கு
வருமா லிருஞ்சோதி வான். (சக)

### உ. திருக்கோட்டியூர்

வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீபார்த் திரங்கிறாய்—தேன்பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி யூரானே! இன்னமுமென்
ஆசைத் திருக்கோட்டி யான். (சஉ)

### ௩. திருமெய்யம்

[பிரிவாற்றாத் தலைவி இரங்கிக் கூறுதல்]

ஆளா யுனக்கன்பா யாசையாய் நாணிலிலாய்
வாளா மனைவியென்று வாழ்வேனைக்—கேளாய்
திருமெய்ய மாயா! சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயா மதன். (சந)

### ச. திருப்புல்லாணி

மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா லிதயங் கரையும்—முதலாய
புல்லாணி மாலே! புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி யென்செவிக்கு மாறு. (சச)

### ரு. திருத்தண்காலூர்

[தலைவனை பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி யிரங்கல்]

மாறுபட வாடையெனும் வன்காலவந் தென்முலைமேல்
ஊறுபட வூர்ந்த வுளைவெல்லா—மாறத்
திருத்தண்கா லூரான் றிருத்தண் டுழாயின்
மருத்தண்கா லூராதோ வாய்ந்து. (சரு)

### ௬. திருமோகூர்

[அன்னத்தைத் தூது விடுத்த தலைவி அதனைக் குறித்து ஐயுறுதல்]

வாயான் மலர்கோதி வாவிதொறு மேயுமோ?
மேயாம லப்பால் விரையுமோ?—மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ? நாளை
வருமோ? கூர் வாயன்னம் வாழ்ந்து (௪௬)

### ௭. திருக்கூடல்

வாழ்விப்பா னெண்ணமோ? வல்வினையி லின்னமென்னை
ஆழ்விப்பா னெண்ணமோ? அஃதறியேன்—தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ கா!நின் குறிப்பு. (௪௭)

### ௮. ஸ்ரீவில்லிபுத்தூர்

குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ? கோதை
பிறந்தவூர் விண்டுசித்தர் பேரூர்—பிறப்பிலியூர்
தாழ்வில்லி புத்தூரென் றைவர்க்குத் தானிரந்தான்
வாழ்வில்லி புத்தூர் வளம். (௪௮)

### ௯. திருக்குருகூர்

வளந்தழைக்க வுண்டாலென்? வாசமணந் தாலென்?
தெளிந்தகலை கற்றாலென்? சீசீ—குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாவிச் சடகோப னூரெங்கள்
வண்குருகூ ரென்னாத வாய். (௪௯)

### ௧௦. திருத்தொலைவில்லிமங்கலம்

வாயு மனைவியர்பூ மங்கையர்க ளெம்பிராற்
காயுதங்க ளாழிமுத லைம்படைகள்—தூய
தொலைவில்லி மங்கலமூர் தோள்புருவ மேனி
மலைவில்லி மங்கலந்த வான். (௫௦)

### ௪௧. ஸ்ரீவரமங்கை (வானமாமலை)

வானோர் முதலா மாமளவா வெப்பிறப்பும்
ஆனோற் கவதியிட லாகாதோ?—தேனேயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே!
சீவர மங்கையரா சே! (௫௧)

### ௪௨. திருப்பேரை

அரைசாகி வையமுழு தாண்டலு மின்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர்—முறைசாரும்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கெட்டு நாவிலவன்
தன்றிருப்பே ரைப்பதியா தார். (௫௨)

### ௪௩. ஸ்ரீவைகுந்தம்

[தலைவியின் இளமை கண்ட செவிலி இரங்கல்]

தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவள்
நேருடுத்த சிந்தை நிலையறியேன்—போருடுத்த
பாவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத் துழாய்நாடும்
சீவைகுந்தம் பாடுந் தெளிந்து. (௫௩)

### ௪௪. திருப்புளிங்குடி

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச
விளியுந் துயர்போய் விடுமே—எளியேற்
கருளப் புளிங்குடிவா பூச்சுதலைக் கொண்டு
கருளப் புளிங்குவந்தக் கால். (௫௪)

### ௪௫. திருவரகுணமங்கை

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

காலமு கோயுங் கருதாத வன்னைமீர்!
வேலன் வெறியை விலக்குமின்கள்!—மாலாம்
வரகுண மங்கையன்றாள் வண்டுழாய் மேலே
தாகுண மங்கை தனக்கு. (௫௫)

### கசு. திருக்குளந்தை

தனக்குடலம் வேறான தன்மை யுணரான்
மனக்கவலை தீர்ந்துய்ய மாட்டான்—நினைக்கில்
திருக்குளந்தை யாருரைத்த சீர்க்கீதை பாடும்
தருக்குளந்தை யாமலிருந் தால். (௫௬)

### கஎ. திருக்குறுங்குடி

தாலத் திழிகுலத்துச் சண்டாள மானாலும்
மேலத் தவரதனின் மேன்மைத்தே—கோலக்
குறுங்குடிவாழ் மாயன் குரைகழற்கா ளாகப்
பெருங்குடியாய் வாழ்வார் பிறப்பு. (௫௭)

### கஅ. திருக்கோளூர்

பிறப்பற்று மூப்புப் பிணியற்று நாளும்
இறப்பற்று வாழ விருப்பீர்!—புறப்பற்றத்
தன்னருக்கோ னூராவிற் றாமோ தரன்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள்! (௫௮)

பாண்டியநாட்டுத் திருப்பதிகள் முற்றும்

---

## மலைநாட்டுத் திருப்பதிகள் - கங

### க. திருவனந்தபுரம்

கோளார் பொறியைந்துங் குன்றியுட லம்பழுத்து
மாளாமு னெஞ்சே! வணங்குதியால்—கேளார்
சினந்தபுரஞ் சுட்டான் றிசைமுகத்தான் போற்றும்
அனந்தபுரஞ் சேர்ந்தா னடி. (௫௯)

### ௨. திருவண்பரிசாரம்

[பிரிவாற்றாது வருந்துந் தலைவியின் நிலை கண்ட
செவிலி இரங்கல்]

அடியுங் குளிர்ந்தா ளறிவுங் குலைந்தாள்
முடிகின்றாண் மூச்சடங்கு முன்னே—கடிதோடிப்
பெண்பரிசா ரங்குப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசா ரங்கிடந்த மாற்கு. (௬௰)

### ௩. திருக்காட்கரை

மார்க்கமுந் தாந்தாம் வழிபடுந் தெய்வமும்
ஏற்க வுரைப்பார்சொ லெண்ணாதே—தோற்குரம்பை
நாட்கரையா முன்னமே நன்னெஞ்சே! நாரணனும்
காட்கரையாற் காளாகாய்! காண். (௬௧)

### ௪. திருமூழிக்களம்

காண்கின்ற வைம்பூதங் கட்கு மிருசுடர்க்கும்
சேண்கலந்த விந்திரற்குந் தேவர்க்கும்—மாண்கரிய
பாழிக் களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கு
மூழிக் களத்தான் முதல். (௬௨)

### ௫. திருப்புலியூர்

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

முதல்வண்ண மாமே முலைவண்ண முன்னே
விதிவண்ண நீங்கி விடுமே—சதுராத்
திருப்புலியூர் நின்றான் றிருத்தண் டுழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின். (௬௩)

### ௬. திருச்செங்குன்றூர்

வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே யுயிர்மாயும் போழ்து—பரமேட்டி!
செங்குன்றூர் மாலே! சிறைப்பறவை மேற்கனகப்
பைங்குன்றூர் கார்போற் பறந்து. (௬௪)

## எ. திருநாவாய்

பறந்து திரிதரினும் பாவியே னுள்ளம்
மறந்தும் பிறிதறிய மாட்டா—சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல் லாலென்
ஒருநாவாய் வாழ்த்தா துகந்து. (கசு)

## அ. திருவல்லவாழ்

உகந்தார்க்கெஞ் ஞான்று முளனா யுகவா
திகந்தார்க்கெஞ் ஞான்று மிலனாய்த்—திகழ்ந்தி
டருவல்ல வாமுருவு மல்லவென நின்றான்
திருவல்ல வாழுறையுந் தே. (கசு)

## கூ. திருவண்வண்டூர்

தேவு முலகு முயிருந் திரிந்துநிற்கும்
யாவும் படைத்த விறைகண்டீர்—பூவில்
திருவண்வண் டூருறையுந் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால். (கஎ)

## க0. திருவாட்டாறு

மாலை முடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவன நீபுகுந்தாய் பண்டென்று—சாலவான்
கேட்டாற் றுயிலேன்கா ணேசவனே! பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில்கொள் வாய். (கஅ)

## கக. திருவிற்றுவக்கோடு

வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே!
மேய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட—கூத்தன்
திருவிற் றுவக்கோடு சேர்ந்தாற் பிறவிக்
கருவிற் றுவக்கோடுங் காண். (கக)

௪௨. திருக்கடித்தானம்

காண விரும்புமென் கண்கள் கையுந் தொழவிரும்பும்
பூண விரும்புமென் றன் புன்றலைதான்—வாணன்
திருக்கடித்தானத்தான் றிகிரியான் றண்டான்
திருக்கடித்தானத்தானைச் சென்று. (௭௦)

௪௩. திருவாறன்விளை

சென்று புனன்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்றுபுலனைந்தடக்கி விட்டாலும்—இன்றமையால்
மாறன் விளைத்த மறையோதார்க் கில்லையே
ஆறன் விளைத்திருமா லன்பு. (௭௧)

மலைநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

நடுநாட்டுத் திருப்பதிகள் - ௨.

௧. திருவயிந்திரபுரம்

அன்பணிந்த சிந்தையரா யாய்ந்த மலர்தூவி
முன்பணிந்த தேவர்க்கு மூர்த்தியரோ—என்பா
ரெமையிந் திரபுரத்தார்க் கின்றொண்ட ராளார்
தமையிந் திரபுரத்தார் தாம். (௭௨)

௨. திருக்கோவலூர்

தாமரையா ளாதியாய்த் தாவரங்க ளீறான
சேம வுயிருஞ் செகமனைத்தும்—பூமடந்தைக்
காங்கோவ லாயுதன்பின் ஞேக வவதரித்த
பூங்கோவ லாயன் பொருள். (௭௩)

நடுநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

## தொண்டைநாட்டுத் திருப்பதிகள் - உ௨.

### க. திருக்கச்சி - அத்திகிரி

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித் திராதே—அருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர்க் கண்ணன்றன்
உச்சித் திருப்பதியா மென்று. (எச)

### உ. திருவட்டபுயங்கம்

என்றுந் துயருழக்கு மேழைகாள்! நீங்களினங்
கன்றுபோற் றுள்ளிக் களிக்கிறீர்—அன்றுநடம்
இட்ட புயங்கத் திருச்சரண மேசரணென்
றட்டபுயங் கத்தர்க்கா ளாய். (எரு)

### ங. திருத்தண்கா

[பிரிந்து ஆற்றாளாய தலைவி தலைமகன் பக்கல் தனக்கு உள்ள அன்புறுதியைத் தோழிக்குக் கூறுதல்]

பூட்பட்டே னைம்பொறியா லாசைப்பட் டேனறிவும்
கோட்பட்டு நாணங் குறைபட்டேன்—சேட்பட்ட
வண்காவை வண்டுவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தா றனக்கு. (எசு)

### ச. திருவேளுக்கை

தனக்குரிய னாயமைந்த தானவர்கோன் கெட்டான்
உனக்குரிய னாயமைந்த னுய்ந்தான்—நினைக்குங்கால்
வேளுக்கை யாளரியே! வேறுதவி யுண்டோ? உன்
தாளுக்கா ளாகா தவர்க்கு. (எஎ)

### ரு. திருப்பாடகம்

தவம்புரிந்த சேதனரைச் சந்திரனா தித்தன்
சிவன்பிரம னிந்திரனைச் செய்கை—உவந்து
திருப்பாட கமருவுஞ் செங்கண்மா றன்மார்
பிருப்பாட கவுரை யாலே. (எஅ)

### ௬. திருநீரகம்

ஆலத் திலைசேர்ந் தழியுலகை யுட்புகுந்த
காலத்தி லெல்வகைநீ காட்டினாய்?—ஞாலத்துள்
நீரகத்தாய்! நின்னடியே னெஞ்சகத்தாய்! நீண்மறையின்
வேரகத்தாய்! வேதியர்க்கு மீண்டு. (௭௯)

### ௭. திருநிலாத் திங்கட்டுண்டம்

மீண்டுந் தெளியார்கண் மேதினியோர் நின்னடிப்பூப்
பாண்டரங்க மாடி படர்சடைமேல்—தீண்டிக்
கலாத்திங்கட் டுண்டத்தின மீதிருப்பக் கண்டு
நிலாத்திங்கட் டுண்டத் தானே! (௮௦)

### ௮. திருவூரகம்

நேசத்தா லன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தா ளென்றலைமேல் வைத்திலையேல்—நாசத்தால்
பாரகத்து ளன்றிநான் பாழ்நரகில் வீழ்ந்தென்கொல்
ஊரகத்து ணின்றாய்! உரை. (௮௧)

### ௯. திருவெஃகா

உரைகலந்த நூலெல்லா மோதி யுணர்ந்தாலும்
பிரைகலந்த பால்போற் பிறிதாம்—தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீருறவாந் தங்கள்
உருவெஃகா வுள்ளத்தி னோர்க்கு. (௮௨)

### ௧௦. திருக்காரகம்

ஓராதார் கல்வி யுடையேங் குலமுடையேம்
ஆரா தனமுடையேம் யாமென்று—சீராயன்
பூங்கா ரகங்காணப் போதுவார் தாடலைமேல்
தாங்கா ரகங்காரத் தால். (௮௩)

### கக. திருக்கார்வானம்

தாலேலோ வென்றாய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ் வாறுபசி யாற்றினள்? முன்—மாலே! பூங்
கார்வானத் துள்ளாய்! கடலோடும் வெற்போடும்
பார்வான முண்டாய்! நீ பண்டு. (அச)

### கஉ. திருக்கள்வனூர்

பண்டேயுன் றொண்டாம் பழவுயிரை யென்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே—மண்டலத்தோர்
புள்வாய் பிறந்த புயலே! உனைக்கச்சிக்
கள்வாவென் றோதுவதென் கண்டு? (அரு)

### கங. திருப்பவளவண்ணம்

கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங் காதலால்
உண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே—பண்டைத்
தவளவண்ணா! கார்வண்ணா! சாமவண்ணா! கச்சிப்
பவளவண்ணா! நின்பொற் பதம். (அசு)

### கச. திருபரமேச்சுரவிண்ணகரம்

பதத்தமிழாற் றன்னையே பாடுவித்தென் னைத்தன்
பதத்தடியார்க் கேயாட் படுத்தான்—இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலவான்
வரமேச் சுரலணைந்த மால். (அஎ)

### கரு. திருப்புட்குழி

மால்வே ழமுமரவு மாயையும்வெற் புங்கடலு
மேல்வீழ் படையும் விடமும்போய்ப்—பாலன்
நெருப்புட் குழிகுளிர நின்றதுங்கேட் டோதார்
திருப்புட் குழியமலன் சீர். (அஅ)

### கசு. திருநின்றவூர்

[தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்]

சீரறிந்து தோழிமீர்! சென்று கொணர்ந்தெனக்குப்
போரா முலைமுகட்டிற் பூட்டுமினோ!—சோரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னனைமா ணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர். (அசு)

### கஎ. திருவெவ்வுளூர்

நீர்மைகெட வைதாரு நின்னோ டெதிர்த்தாரும்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்கையினால்—நீர்மையினா
வெவ்வுளத்த னென்செய் வினையைப் பொறுத்தருளி
எவ்வுளத்த னே! நீ யிரங்கு. (கூ)

### கஅ. திருநீர்மலை

ஓங்கு முயிரனைத்து மின்னருளாற் காப்பான்
ஆங்க னொருவனுமே யாதல்—ஈங்கனால்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவா ழெந்தையெதிர் நின்று. (கூக)

### ககூ. திருவிடவெந்தை

நின்று திரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையார்—இன்று
வெருவிடவெந் தைக்கே விரும்பியதொண் டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து. (கூஉ)

### உ0. திருக்கடன்மல்லை

செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி
முறிந்தவிழப் பாகனையு மோதி—எறிந்து
தருக்கடமல் லைக்குமைத்தான் றஞ்சமென்று நெஞ்சே!
திருக்கடன்மல் லைக்குட் டிரி! (கூடு)

### ௨௧. திருவல்லிக்கேணி

திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து பகர்மின்! புகன்றால்—மருந்தாம்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர். (௯௪)

### ௨௨. திருக்கடிகை

சீருளா னம்மைத் திருத்தினா முன்னறியாக
கூறறியுந் தந்தடிமை கொண்டதற்கே—நேரே
ஒருகடிகை யம்மனமே! உள்ளுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான். (௯௫)

## தொண்டைநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

---

## வடநாட்டுத் திருப்பதிகள் - ௧௨.

### ௧. திருவேங்கடம் (திருப்பதி)

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்—தேனேய்
திருவேங கடந்தொழுதந் தீயவிபூ இக்குள்
மருவேங் கடந்தமனமிவ் வாழ்வு. (௯௬)

### ௨. திருச்சிங்கவேள்குன்றம் (அகோபிலம்)

வாய்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
ஆய்கருணை யும்முனிவுந் தோன்றியவால்—கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற வழல்சாபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு. (௯௭)

### ௩. திருவயோத்தி

ஆர்க்குமிது நன்றறிநீ தானானு நெஞ்சே! நீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே—சீர்க்கும்
திருவையோத் திப்புயலைச் சீரியமெய்ஞ் ஞானத்
தருவையோத் திற்பொருளை யோர். (௯௮

### ௪. திருநைமிசாரண்யம்

ஓரறிவு மில்லாத வென்போல்வார்க் குய்யலாம்
பேரறிவுண் டேனும் பிறர்க்கரிது—பாரறிய
நைம்மிசா ரண்ணியத்து நாதரடி யாரோடும
இம்மிசார் வுண்டாயி னல். (௯௯

### ௫ திருச்சாளக்கிராமம்

உண்டா முறைமை யுணர்ந்தடிமைப் பேர்புண்டேன்
பண்டாங் குடிகுலத்தாற் பன்மதத்தால்—கொண்டாட்டால்
ஆளக் கிராமத்தா லல்லற்பேர் பூணாமல்
சாளக் கிராமத்தார் தாட்கு. (௧௦௦)

### ௬. திருவதரியாச்சிரமம்

தாட்கடிமை யென்ற தமையுணரார்க் கெட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளுங் கேசவனை—வேட்கையொடு
போவதரி தானாலும் போய்த்தொழுவோ நெஞ்சமே!
மாவதரி யாச்சிரமத் து. (௧௦௧)

### ௭. திருக்கங்கைக்கரைக்கண்டம்

மத்தாற் கடல்கடைந்து வானோர்க் கமுதளித்த
அத்தா! எனக்குன் னடிப்போதில்—புத்தமுதைக்
கங்கைக் கரைசேருங் கண்டத்தாய்! புண்டரிக
மங்கைக் கரைசே! வழங்கு. (௧௦௨)

### ௮. திருப்பிருதி

வழங்கு முயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்குங் கவந்தன் விறற்றோட்—கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தாற் போற்றுணித்து வீழ்த்தான்
திருப்பிருதிக் கென்னெஞ்சே! செல். (௧௦௩)

### ௯. திருவடமதுரை

செல்வ முயிருடம்பு சேர வரித்தாக்கி
வல்வினையி னீங்குமினோ மாந்தர்காள்!—தொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்ததஞ்ச மென்று
திடமதுரை செய்தான் றிறத்து. (௧௦௪)

### ௧௦. திருத்துவாரகை

திறந்திறமாத் தாந்துய்க்குந் தீஞ்சுவையை நாடி
அறந்திறம்பிப் பாதகரோ ரைவர—நறுந்துளவ
மாதுவரை யோனே! மணந்துணையாக் கொண்டேனைக்
காதுவரை யோ!மெய் கலந்து. (௧௦௫)

### ௧௧. திருவாய்ப்பாடி (கோகுலம்)

கலந்தமர ரோடுங் கலைகண்டா ரோடும்
பொலிந்துதிரு நாட்டிருக்கப் போவீர்!—மலிந்தபுகழ்
அண்டராய்ப் பாடி யமலரடி யாரடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும். (௧௦௬)

### ௧௨. திருப்பாற்கடல்

தொழும்பாய நானல்ல சூதறிந்து கொண்டேன்
செழும்பா யலைமுத்தஞ் சிந்தி—முழங்கும்
திருப்பாற் கடலான்றாள் சேர்ந்தா ரடிசேர்ந்
திருப்பாற் கடலா மிடர். (௧௦௭)

வடநாட்டுத் திருப்பதிகள் முற்றும்.

## திருநாட்டுத் திருப்பதி-க

### திருவைகுந்தம் பரமபதம்

இடருடையேன் சொல்ல வெளிதோ பிரமன்
அடரும்விடை யோற்கு மரிதே—தொடரும்
கருவைகுந் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந் தம்பெறுவார் சீர். (க0

திருநாட்டுத் திருப்பதி முற்றும்.

---

மண்ணி லரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையும்—நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்றலைமேற் பூ.

பதின்ம ருரைத்த பதியொருநூற் றெட்டும்
துதிசெய்ய வந்தாதி சொன்னோன்—அதிக
குணவாள பட்டர்திரு கோகணகத் தாளசேர்
மணவாள தாசன் வகுத்து.

## நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி முற்றிற்று.

---

அழகிய மணவாளதாசர் திருவடிகளே சரணம்.

3RD EDITION] 1928 [1000 COPIES

188

# திருவேங்கடத்தந்தாதி

MAHAMAHOPADHYAYA DR. V. SWAMINATHA AIYAR LIBRARY ADYAR MADRAS

# திருவேங்கடத்தந்தாதி

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

# திருவேங்கடத்தந்தாதி

## சிறப்புப் பாயிரம்

### கட்டளைக் கலித்துறை

இக்கரை யந்திரத் துட்பட்ட தென்ன விருவினையுள்
பக்கரை மாறொடி யுந்தர் யாதும் புன்பிறப்பாம்
எக்கரை நீக்கிப் படித்தாரை யந்த விருவிரசைக்
கக்கரை சேர்க்கு மணவாள தாசன் ருநகவியே.

### காப்பு

நல்லந் தாதி திருவேங் கடவற்கு நான்விளம்பச்
சொல்லந் தாதின் வழுபொருட் சோர்வறச் சொல்லித்தருள்
பல்லந் தாதிசை வண்டார் குருகைப் பரசமயம்
வெல்லந் தாதி மறைதமி ழாற்செய்த வித்தகனே.

---

## நூல்

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றனை சீர்நன்னையால்
தருவேங் கடத்துத் தலைமே னடந்தனை தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தனை வுற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சவென் றேடினை யால்கழலே. (க)

மாலை மதிக்குஞ்சி யீசனும் போதனும் வாசவனும்
நாலை மதிக்கு முனிவருந் தேவரு நோக்கியந்தி
காலை மதிக்குள்வைத் தேத்துந் திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமா னுறைதிரு வேங்கடமே. (உ)

வேங்கட மாலை யவியா மதிவிளக் கேற்றியங்கம்
ஆங்கட மாலைய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே
தீங்கட மாலைக் கவிபுனைந் தோமிதிற் சீரியதே
யாங்கட மாலை யிராவத மேறி யிருக்குமதே. (ங)

இருக்கா ரணஞ்சொல்லு மெய்ப்பொரு ளின்பமு மெய்ப்பொருட்கும்
கருக்கா ரணமுநற் றாயுநற் றந்தையுங் கஞ்சச்செல்வப்
பெருக்கா ரணங்கின் றலைவனு மாதிப் பெருந்தெய்வமும்
மருக்கா ரணவும் பொழில்வட வேங்கட மாயவனே. (ச)

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும்விண்ணும்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சாத் தாலிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்றிரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே. (ரு)

தூர விரும்புண் டரிக்குமிக் காயத்தைச் சூழ்பிணிகாள்!
நேர விரும்புண் டார்க்கருள் வானெடு வேங்கடத்தான்
ஈர விரும்புண்ட ரீகப்பொற் பாதங்க ளென்னுயிரைத்
தீர விரும்புண்ட ரீராக்கு மாறுள்ளஞ் சேர்ந்தனவே. (சு)

சேர்ந்து கவிக்கும் முடிகவித் தாய்!சிறி யேனிதயம்
சார்ந்து கவிக்கும் வாமனித் தாய்!கொண்ட றண்டலைமேல்
ஊர்ந்து கவிக்கும் வடமலை யாய்!பஞ் சொழுக்கியபால்
வார்ந்து கவிக்கும் பொழிலஞ் சேலென்று வந்தருளே. (எ)

வந்திக்க வந்தனை கொள்ளென் றுகந்தனு மாதவரும்
சிந்திக்க வந்தனை வேங்கட நாத!பல் சீவன்றின்னும்
உந்திக் கவந்தனைச் செற்றாய்! உனக்குரித் தாயபின்னும்
புந்திக் கவந்தனைச் செய்தைவர் வேட்கை பொருமென்னையே! (அ)

[தலைவனைப் பிரிந்து வருந்தி மாலைப்பொழுதுக்கும் அன்றிற் குரலுக்கும் அற்றாத தலைவிக்குத் தோழி இரங்கல்]

பொருதாங் கத்தும் வடத்து மணந்த புரத்துமன்பர்
கருதாங் கத்தர் துயில்வேங் கடவ!கண் பார்த்தருள்வாய்!
திருதாங் கத்து நிறம்போல் வருமந்தி நேரத்தன்றில்
ஒருதாங் கத்தும் பொழுதும் பொருளென் னொருவல்லியே. (கூ)

[தலைவனைப் பிரிந்த தலைவி கடலொடு புலம்பல்]

ஒருமா தவனி யொருமாது செல்வி யுடனுறைய
வருமா தவனின் மகுடம்வில் வீச வடமலைமேல்
கருமா தவன்கண்ண னின்பாற் றிருநெடுங் கண்வளர்கைக்
கருமா தவமென்ன செய்தாய்? பணியெனக் கம்புதியே! (க0)

அம்பரந் தாமரை பூத்தலர்ந் தன்ன வலயவரை
அம்பரந் தாமரை யஞ்சன வெற்பரை யாடகமாம்
அம்பரந் தாமரை சூழ்ந்தாரை வாழ்த்தில ரைம்புலனும்
அம்பரந் தாமரை போற்றிரி வாரை யகனெஞ்சமே! (கக)

[தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்]

நெஞ்சகந் தத்தை யுமக்குரைத் தேனிற்றை நீடிரவொன்
றஞ்சகந் தத்தை யிளக்குமென் னுசைய தாமிதழ்சொல்
கொஞ்சகந் தத்தை யனையீர்! இங்கென்னைக் கெடாதுவிடும்!
விஞ்சகந் தத்தை விளைக்குந் துழாயண்ணல் வேங்கடத்தே. (கஉ)

வேங்கடத் தாரையு மீடேற்ற நின்றருள் வித்தகரைத்
நீங்கடத் தாரைப் புனைந்தேத்தி லீர்சிறி யீர்!பிறவி
தாங்கடத் தாரைக் கடத்தும்!என் றேத்துதிர் தாழ்சயத்துள்
ஆங்கடத் தாரை விலங்குமன் றேசொல்லிற் றையமற்றே. (கங)

ஐயா! துவந்தனை நாயேனை யஞ்சன வெற்ப!என்றும்
கையா துவந்தனை நின்னையல் லாற்கண் ணுதன்முதலோர்
பொய்யா துவந்தனை யார்முகங் காட்டினும் போற்றியுரை
செய்யா துவந்தனை பண்ணாது வாக்குமென் சென்னியுமே. (கச)

[தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆறாமை கண்ட
செவிலித்தாய் இரங்கல்]

சென்னி யிலங்கை குவிக்கு முயிர்க்குந் திசைக்குநின்னை
உன்னி யிலங்கையிற் கண்ணுறங் காளுயர் வீடணனை
மன்னி யிலங்கையில் வாழ்கென்ற வேங்கட வாண!மற்றோர்
கன்னி யிலங்கைக்கி னின்பேர் கருணைக் கடலல்லவே. (கரு)

கூடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் றளிநெஞ்சமே!
வடமா மலையுந் திருப்பாற் கடலும்வை குந்தமும்போல்
இடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே. (கசு)

இருப்பத னந்தனி லெண்ணலில் வைகுந்தத் தென்பர்வெள்ளிப்
பருப்பத னந்தண் மலரோ னறிகிலர் பாரளந்த
திருப்பத னந்தன் மதலைகிற் குந்திரு வேங்கடமென்
பொருப்பத னந்தற விர்ந்துயிர் காள்!தொழப் போதுமினே! (கஎ)

போதார விந்த வரையும் புகாவண்ட புற்புதத்தின்
மீதார விந்த வினைதீர்க்க வேண்டும்விண் மண்ணுக்கெல்லாம்
ஆதார! இந்தளந் தேன்பாடும் வேங்கடத் தப்ப!நின்பொற்
பாதார விந்தமல் லாலடி யேற்கொரு பற்றில்லையே. (கஅ)

[தலைவனைப் பிரிந்த தலைவியின் வருத்தங் கண்டு ஆற்றளான
தோழி சந்திரனை நோக்கி இரங்கிக் கூறல்]

பற்றி யிராமற் கலைபோய் வெளுத்துடல் பாதியிரா
வற்றி யிராப்பக லின்கண் பனிமல்கி மாசடைந்து
நிற்றி யிராக மொழிச்சியைப் போமனை வேங்கடத்துள்
வெற்றி யிராமனை வேட்டாய்கொல் நீயுஞ்சொல் வெண்மதியே! ( )

மதியா தவன்கதிர் மின்மினி போலொளிர் வைகுந்தந்தா
மதியா தவன்றர வாழ்ந்திருப் பீர்வட வேங்கடவன்
மதியா தவன்கடத் துட்டயிர் வாய்வைத்த மாயப்பிரான்
மதியா தவனூராங் கீண்டான் கழல்சென்னி வைத்திருமே! (௨௰)

இருபது மந்தாரத் தோளு மிலங்கைக் கிறைவன்சென்னி
ஒருபது மந்தாரத் தேயறுத் தோனப்ப னுந்திமுன்னாள்
தருபது மந்தர வந்தன நான்முகன் றன்முதலா
வருபது மந்தர மொத்தபல் சீவனும் வையமுமே. (௨௧)

வைய மடங்கலு மோர்துகள் வாரி யொருதிவலை
செய்ய மடங்கல் சிறுபொறி மாருதஞ் சிற்றுயிர்ப்பு
துய்ய மடங்கலி லாகாயந் தான்விரற் றொன்றும்வெளி
வெய்ய மடங்கல் வடிவான வேங்கட வேதியற்கே. (௨௨)

வேதா வடமலை வெங்காலன் கையில் விடுவித்தென்னை
மாதா வடமலை கொங்கையுண் ணாதருள்! மண்ணளந்த
பாதா! வடமலை மேற்றுயின் றாய்!கடற் பார்மகட்கு
நாதா! வடமலை யாய்!அலர் மேன்மங்கை நாயகனே! (௨௩)

நாயக ராத்திரி யுஞ்சில தேவர்க்கு நாணிலைகொல்?
தூயக ராத்திரி மூலமெ னுமுனந் துத்திப்பணிப்
பாயக ராத்திரி மேனியம் மாண்பைம்பொன் வேங்கடவன்
தீயக ராத்திரி சக்கரத் தாற்கொன்ற சீர்கண்டுமே. (௨௪)

துண்டற னந்தரங் காலெரி நீர்வையங் காத்தவைமீண்
டுண்டவ னந்தரங் கத்துறை வானுயர் தந்தைதமர்
விண்டவ னந்தர மேலவன் வேங்கட மாலடிமை
கொண்டவ னந்தரத் தும்பேர் நினைக்கவுங் கூற்றஞ்சுமே. (௨௫)

அஞ்சக் கரவட மூலத்தன் போத னறிவரிய
செஞ்சக் கரவட வேங்கட நாதனைத் தேசத்துள்ளீர்!
நெஞ்சக் கரவட நீக்கிபின் றேதொழு நீண்மறலி
துஞ்சக் கரவடம் வீசுமக் காலந் தொழற்கரிதே. (௨௬)

தொழும்பா லமரர் தொழும்வேங் கடவன் சுடர்நயனக்
கொழும்பா லனையொரு கூறுடை யானந்த கோபனில்லத்
தழும்பால னாகிய காலத்துப் பேய்ச்சிய ருத்துநஞ்சைச்
செழும்பா லமுதென் றுவந்தாற்கென் பாடல் சிறக்குமன்றே? ()

சிறக்கும் பதந்தரு வார்திரு வேங்கடச் செல்வர்செய்ய
இறக்கும் பதந்தொழு துய்யவெண் ணீர்நெறி யிற்பிழைத்து
மறக்கும் பதந்தியுஞ் சேலு மசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்கமும் போலவை ராற்கெடும் பாதகரே! (௨௮)

பாதம ராவுறை பாதாளத் தூடு பகிரண்டத்துப்
போதம ராயிரம் பொன்முடி யோங்கப் பொலிந்துநின்றாய்!
நீதம ரானவர்க் கெவ்வாறு வேங்கட நின்றருளும்
நாதம ராமா மெய்தாய்!முன் கோவ னடந்ததுவே. (௨௯)

நடைக்கலங் கார மடவார் விழிக்கு நகைக்குச்செவ்வாய்க்
கிடைக்கலங் கார முலைக்கிச்சை யான விவனென்றெண்ணிப்
படைக்கலங் காணத் துரந்தே நமன்றமர் பற்றுமன்றைக்
கடைக்கலங் கரணப்ப னே!யலர் மேன்மங்கை யங்கத்தனே! (௩0)

அங்க மலைக்கும் வினையா லலமா வோவுனக்கும்
அங்க மலைக்கு மடிமைப்பட் டேனா வானபரி
அங்க! மலைக்குடை யாய்! அக்க ராவுட னன்றமர்செய்
அங்க மலைக்குமுன் னின்றருள் வேங்கடத் தற்புதனே! (௫௧)

அற்பா தத்து மடவார் கலவியு மாங்கவர்கள்
நற்பா தத்து நடிப்பதும் பாடலு நச்சிநிற்பார்
நிற்பா தத்துக் கதிர்தோயும் வேங்கட நின்றருளுஞ்
சிற்பா தத்துவன் றாளடைந் தேன்முத்தி சித்திக்கவே. (௫௨)

சித்திக்கு வித்தது வோவிது வோவென்று தேடிப்பொய்ந்நூல்
கத்திக்கு வித்தபல் புத்தகத் தீர்! கட் டுரைக்கவம்மின்!
அத்திக்கு வித்தனை யும்முண்ட வேங்கடத் தச்சுதனே
முத்திக்கு வித்தக னென்றே சுருதி முறையிடுமே. (௫௩)

முறையிடத் தேச மிலங்கைசெற் றான்முது வேங்கடத்துள்
இறையிடத் தேசங் குடையா னினியென்னை யாண்டிலனேல்
துறையிடத் தேயுழ லெல்லாப் பிறவி தமக்குமள
வுறையிடத் தேய்ந்திடு மிவ்வந்தி வானத் துடுக்குலமே. (௫௪)

உடுக்கு முடைக்கு முணவுக்கு மேயுழல் வீர்! இனிநீர்
எடுக்கு முடைக்குரம் பைக்கென்செய் வீர்! இழி மும்மதமு
மிடுக்கு முடைக்குஞ் சரந்தொட்ட வேங்கட வெற்பாண்ட
அடுக்கு முடைக்கு மவரடி காண்மின்! அனைவருமே. (௫௫)

பெருமஞ் சனவ னொருவனை யேயுன்னி வாழ்த்துந் தொண்டீர்!
கருமஞ் சனனங் களைந்துய்ய வேண்டிற் கருதிற்றெல்லாம்
தருமஞ் சனவெற்பன் றட்டா மரையயச் சதுமுகத்தோன்
திருமஞ் சனஞ்செய் புனல்கா ணுமீசன் சிரம்வைத்ததே. (௫௬)

சீரந்தடி வானிவ ளேனுவென் றயன்வெய்ய தீயசொல்லக்
காரந்தடி வான்றலை கவ்வப்பித் தேறலிற் கண்ணுதலோன்
ஓரந்தடி வீழத் துயர்தீர்த்த வேங்கடத் தெந்தைகண்டீர்
புரந்தடி யேனைத்தன் பொன்னடிக் கீழ்வைக்கும் புண்ணியனே! ()

புண்ணியங் காமம் பொருள்வீடு பூதலத் தோர்க்களிப்பான்
எண்ணியங் காமன் றிருத்தாதை நிற்கு மிடமென்பரால்
நண்ணியங் காமன் பரைக்கலங் காத்திரு நாட்டிருத்தி
மண்ணியங் காமற் பிறப்பறுத் தாளும் வடமலையே. (௩௮)

வடமலை யப்பன் னகஞ்சேர்ந் தவனிடை மங்கைகொங்கை
வடமலை யப்பன் னரும்போகந் துய்த்தவன் மாயன்கண்ணன்
வடமலை யப்பன் னருள்போற்றி யைவர் மயக்குகா
வடமலை யப்பன் னிருநாம நாவின் மலக்குவனே. (௩௯)

மலங்கத் தனத்தை யுழன்றீட்டி மங்கையர் மார்பில்வடம்
அலங்கத் தனத்தை யணையகிற் பீர்! அப்பன் வேங்கடத்துள்
இலங்கத தனத்தை மகன்றேறி னின்றெறி ரேற்றமன்னர்
கலங்கத் தனத்தைக் குறித்தானை மேவக் கருதுமினே! (௪௦)

கருத்தா தரிக்கு மடியேனைத் தள்ளக் கருதிக்கொலோ
திருத்தா தரிக்குமை வர்க்கிறை யாக்கினை செண்பகத்தின்
மருத்தா தரிக்கு மருவிய ருவட வேங்கடத்துள்
ஒருத்தா! தரிக்கும் படியெங்ங னே? இனி யுன்னைவிட்டே. (௪௧)

உன்னைக் கரிய மிடற்ற னயன்முத லும்பரெல்லாம்
பொன்னைக் கரியொத்த போதுமொவ் வார்புகழ்க் கோசலையாம்
அன்னைக் கரியமுத் தே! அப்ப னே! உன்னை யன்றிப்பின்னை
முன்னைக் கரியளித் தாய்க்குல மான மொழியில்லையே. (௪௨)

இல்லைக்கண் ணரின்பந் துன்பங்கண் ணர்கண்ட வேந்திழையார்
சொல்லைக்கண் ணாமு தென்னுந்தொண் ணர்! தொல் லசுரனிறம்
கல்லைக்கண் ணாவத் தைத்திரு வேங்கடக் காவலனை
மல்லைக்கண் ணர்தாத் தேய்த்தானை வாழ்த்துமின்! வாழுகைக்கே.

கைத்தனு மோடிசை வெற்பெனக் காணவெவ் வாணனென்னு
மத்தனு மோடிகல செய்வனென் றேவந்து வையுறவேல்
அத்தனு மோடியு மங்கியு மோடவென் னப்பனுக்குப்
பித்தனு மோடின னங்கத்துத் தாமென்றும் பெண்ணையென்றே.

பெண்ணுக்கு விக்கச் சிலைமே லொருதுகள் பெய்தபொற்றாள்
அண்ணைக்கு விக்க லெழும்போ தெனக்கருள் வாய்!பழிப்பு
நண்ணுக்கு விக்கச் சிளமுலைப் பூமக ணாயகனே!
எண்ணுக்கு விக்கக் குழலூ தும்,வேங்கடத் தென்கண்ணனே! ( )

கண்ணனை யேநெஞ்சுருகே னைகொண்டென் கண்ணுநெஞ்சும்
புண்ணனை யேன்கல் லனையேனென் றாலும்பொற் பூங்கமலத்
தண்ணனை யேநல்ல சார்வாக வேங்கடஞ் சார்ந்துமணி
வண்ணனை யேயடைந் தேற்கில்லை யோ!தொல்லை வைகுந்தமே.

வைகுந்த மாய விழிமாதர் வேட்கையை மாற்றியென்னை
வைகுந்த மாய வினைநீக் கியமுத்தர் மாட்டிருத்தி
வை!குந்த மாய வொசித்தாய்! வடதிரு வேங்கடவா!
வைகுந்த மாயவ னே!மாசி லாதவென் மாயணியே! (சுஎ)

[பிரிவாற்றாத் தலைவியின் துயர் கண்ட செவிலித்தாய்
இரங்கல்]

மணியாழி வண்ண னுகந்தாரைத் தன்வடி வாக்குமென்றே
துணியாழியமறைசொல்லுந்தொண்டர்! அதுதோன் றக்கண்டோம்
பணியாழின் மென்மொழி மாலாகிப் பள்ளிகொள் ளாமற்சங்கோ
டணியாழி நீங்கிநின் றாள்வேங்க டேசனை யாதரித்தே. (சுஅ)

ஆதரிக் கப்பட்ட வாறுதன் மங்கைய ரங்கைமலர்
மீதரிக் கப்பட்ட நின்னடி யேவெள் ளருவிச்செம்பொன்
போதரிக் கப்பட்டஞ் சூழ்வேங் கடவெற்ப! போரரக்கர்
தீதரிக் கப்பட்ட கானகத் தூடன்று சென்றதுவே. (௪௯)

[கிள்ளைவிடுதூது]

சென்றவ னத்தத்தை யைந்தலை வாழ்வித்துத் தீயமன்னர்
பொன்றவ னத்தத்தைச் செய்தபி ரான்புகழ் வேங்கடத்துள்
நின்றவ னத்தத்தை யாயுதன் பாதத்தென் னேசமெல்லாம்
ஒன்றவ னத்தத்தை காள்! உரை யீரற முண்டுமக்கே. (௫0)

[தலைவி, செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

உண்ட மருந்துகைக் கும்மன்னை மீர்! மத னேரைந்தம்பும்
கொண்ட மருந்துகைக் குங்குறு காமுனங் கொவ்வைச்செவ்வாய்
அண்ட மருந்துகைக் குந்திறந் தானப்பன் போற்பரியும்
எண்ட மருந்துகைக் கும்பொடி காப்பிடு மின்றெனக்கே. (௫௧)

எனக்குப் பணியப் பணியொரு காலிரு காலுநல்க
உனக்குப் பணியிங் கிருவேம் பணியிலென் னோர்பணியு
நினக்குப் பணிவித்துக் கொண்டுன் பணிநீ பணித்திலையென்
றனக்குப் பணிவெற்பின் மீதோங்கி நின்ற தனிச்சுடரே! (௫௨)

[தலைவியின் பிரிவாற்றாமை கண்ட செவிலி இரங்கல்]

துனித்தொண்டை மானிலத் தேபுரி வார்க்கரு டாளுடையாய்
தொனித்தொண்டைமாநெடுவாய்பிளந்தாய்! துங்கவேங்கடவா! [க்
முனித்தொண்டைமான்கையிற்சங்காழிநல்கியென் மூரற்செவ்வாய்
கனித்தொண்டை மான்கையிற் சங்காழி கோடல் கருமமன்றே.

[பிரிவாற்றாத் தலைவி பிறை கண்டு வருந்தல்]

கருமாதவா! இருந் தாவன செய்தென் கருத்திருளைப்
பொருமாதவா! விருந் தாவனத் தாய்! பொற் சவரியென்னும்
ஒருமாதவா விருந் தா! வனக் காவுயர் வேங்கடத்தெம்
பெருமா! தவா விருந் தாவன வேயும் பிறைக்கொழுந்தே. (௫௪)

பிறைமாலை யாலொரு பேதைநைந் தாளந்தப் பேதைக்குநின்
நறைமாலை தா! என்று மானிடம் பாடிய நாவலர்காள்!
நிறைமாலை யற்றுக் கவிமாலை யாணினை யீர்! திருவெள்
ளறைமாலை வேங்கடத் தேயுறை மாலை யாங்கணையே. (௫௫)

அரங்கங் குடந்தை குருகூர் குறுங்குடி யட்டபுய
கரங்கண்ண மங்கை நறையூர் கடன்மல்லை கச்சிகண்ண
புரங்கண்டி யூர்தஞ்சை மாலிருஞ் சோலைபுல் லாணிமெய்யம்
தரங்கம் பரம பதம்வேங்க டேசற்குத் தானங்களே. (௫௬)

தானவனாக மருப்பொசித் தானுக்குத் தானுகந்த
தானவனாக முடியினின் றானுக்குத் தாள்வணங்காத்
தானவனாக மிடந்தானுக் காளென்று தன்னையெண்ணாத்
தானவனாக நினைந்திருப் பாற்சென்றுந் தானவனே. (௫௭)

தானவராகந் தடிவார் வடமலைத் தண்ணந்துழாய்
ஞானவராகர் தருமண்டம் யாவையு நண்ணியவர்
கானவராக விரலேறு மத்திக் கனியின்வைகும்
வானவராக விருப்பா ரயற்றுண் மசகங்களே. (௫௮)

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்]

மசகந் தாமென்ன லாய்நிலை யாவுடல் வாழுயிரை
அசகந் தாவல்ல தோவன்னை மீர்! அண்ட முண்டுமிழ்வா
ரிசகந் தாவண்ணர் வேங்கட வாண ரிலங்கையர்கோன்
தெசகந் தாமறுத் தார்திருப் பேர்சொல்லும்! தீங்கறவே. (௫௯)

தீங்கட மாலத்தி முன்னின்று காலிப்பின் சென்றகொண்டல்
வேங்கட மாழ்கழ லேவிரும் பார்விலை மாதர்மலம்
ஆங்கட மால்செய மாலா யவரெச்சி லாகநச்சித்
தாங்கட மாலழி வாரிருந் தாலுஞ் சவப்பண்டமே. (௬௰)

பண்டை யிருக்கு மறியாப் பரமபதத்தடியார்
அண்டை யிருக்கும் படிவைக்கு மப்பனை யண்டத்துக்கும்
தண்டை யிருக்கு மலர்ந்தசெவ் வாயனைத் தாள்வணங்கா
மண்டை யிருக்கும் விடுமோ? சனன மரணமுமே. (௬௧)

புராணங் கடக்குஞ் சாரீங்க வாழ்வித்து வல்லரக்கர்
முரணங் கடக்குஞ் சரவேங் கடவ!கண் மூடியந்தக்
கரணங் கடக்குஞ் சரமத்து நீதரு கைக்கெணக்குன்
சரணங் கடக்குஞ் சரண்வே றிலைதந்து தாங்கிக்கொள்ளே! (௬௨)

தாங்கட லாழி வளைதண்டு வாள்வில்லிற் றனவரை
சங்கட வீசிக் குறித்தடித் துத்துணித் தெய்துவெல்லும்
பூங்கடல் வண்ண னிலைகிடை வந்தது போக்கிருப்பு
வேங்கடம் வேலைய யோத்திவெங் கானகம் விண்ணுலகே. (௬௩)

உலகந் தரவுந்தி பூத்திலை யேற்சுட ரோரிரண்டும்
இலகந் தரமும் புவியுமெங் கே?அய னீசனெங்கே?
பலகந் தரமு முணவுமெங் கே?பல் லுயிர்களெங்கே?
திலகந் தரணிக் கெனநின்ற வேங்கடச் சீதரனே! (௬௪)

சீவார் கழலை யிரண்டையுஞ் செப்பென்று தீங்குளவி
றுவார் கழலைப் பயில்செங்கை யார்நலம் பேணுமைவர்
ஆவார் கழலை யிரண்டா மவத்தையி னன்றெனக்குன்
பூவார் கழலை யருளப்ப னே!அண்ட பூரணனே! (௬௫)

பூரண ஞானன் பொன்னுல காளி புராரிகொடி
வாரண ஞானன் வாழ்த்தும் பிரான்வட வேங்கடத்துக்
காரணா ஞானங் காணா விறைவி கணவன்மண்ணேழ்
பாரண ஞான னென்பார்க்கு நீங்கும் பழுதவமே. (௬௬)

பழுத்தெட்டி போன்ற நடுச்செல்வர் பின்சென்று பல்செருக்கால்
கொழுத்தெட் டினையள வெண்ணமற் றீர்!துவ டேறிமந்தி
கழுத்தெட்டி யண்டர் பதிநோக்கும் வேங்கடக் காவலனை
எழுத்தெட்டி னாலெண்ணி யேத்தீர்!பரகதி யேறுதற்கே. (௬௭)

ஏறுக டாவவ ரன்னங் கடாவவ ரிருகோட்
டேறுக டாமழை யோங்கல் கடாவவ ரோடருவி
ஆறுக டாத வழுந்தனப் பாய வரிகமுகம்
தாறுக டாவும் வடவேங் கடவரைத் தாழ்ந்தவரே. (௬௮)

தாழ்ந்த வருக்கந் தருவொக்கு மோ?பல் தாரகையும்
சூழ்ந்த வருக்கன் சுடரொக்கு மோ?தொல் லமரக்கொன்று
வாய்ந்த வருக்கங் களைந்தான் வடமலை மாலடிக்கீழ்
வீழ்ந்த வருக்கன பருக்கொப்ப ரோ?அண்டர் மெய்த்தவரே. (௬௯)

மெய்த்தவம் போருக வெஞ்சொல் ராமன்வில் வாங்கிவளைத்
துய்த்தவம் போருக நாளுஞ்செய் தோருயர் வேங்கடத்து
வைத்தவம் போருகப் பூவார் கழலை மறைமனுநூல்
பொய்த்தவம் போருக வார்காமம் வேட்டுப் புராணுயரே. (௭௰)

புரண்டுதிக் கும்முடற் கேயிதஞ் செய்பொரு ளாக்கையினால்
இரண்டுதிக் குந்தடு மாறுநெஞ் சே!இனி யெய்துயம்வா!
திரண்டுதிக் கும்மரன் வேளய னார்முதற் றேவரெல்லாம்
சரண்டுதிக் கும்படி மேனின்ற வேங்கடத் தாமத்தையே. (௭௧)

[பிரிவாற்றாத தலைவி, தோழியரை நோக்கி இரங்கிக் கூறல்]

தாமத் தலைவெண்ணெ யுண்டவர் நாளிடைத் தாயர்பிணி
தாமத் தளையுவந் தார்வேங் கடாதிபர் தாமரைப்பூந்
தாமத் தலைமணி யோடணி மார்பினர் தண்ணந்துழாய்த்
தாமத் தலைவைதென் றேமட வீர்!என் றடமுலையே. (எஉ)

தடவி கடத்தலை வேழமுன் னின்றன சாடுதைத்துப்
புடவி கடத்தலை மேரு மளந்தன பூந்திருவோ
டடவி கடத்தலை வேட்டன வேங்கடத் தப்பன்புள்ளைக்
கடவி கடத்தலை செய்யுண்ட மாதவன் காண்மலரே. (எ௩)

கானக முண்டநிற போமென்னி னீங்கிக் கடும்பிணிகாள்!
தேனக முண்டகத் தாளவேங் கடேசனைச் சென்றிரக்கும்
போனக முண்டவெண் ணீற்றா னயனொடும் பூமியொடும்
வானக முண்ட பெருமானை யின்றென் மனமுண்டதே. (எச)

மனந்தலை யாகுற வெண்ணி வணங்கி வழுத்துந்தொண்டர்
இனந்தலைப் பெய்தன னீதன்றி யேயிமை யோருமெங்கள்
தனந்தலை வா!எனும் வேங்கட வாண! தடங்கடலுள்
நனந்தலை நாகணை யாயறி யேனன்பு ஞானமுமே. (எ௫)

ஞானக்கண் டாகன வொக்கும் பவந்துடை நஞ்சிருக்கும்
தானக்கண் டாகனச் சோதியென் றேத்துவன் றாலமுடன்
வானக்கண் டாகன வண்ணா!என் றேதொலை வந்தடையா
ஈனக்கண் டாகனற் கிந்தான் பரகதி யென்னப்பனே. (எசு)

என்னப்ப னாகத்துப் பொன்னூலன் வேங்கடத் தெந்தையுயில்
மன்னப்ப னாகத்துக் கஞ்சலென் றான்பன் மணிசிதறி
மின்னப்ப னாகத்துப் பாய்ந்தான் கதையன்றி வெவ்வினைகள்
துன்னப்ப னாகத்துப் பொய்ந்நூல் புகாவென் றுளைச்செவிக்கே. ( )

[நாரைவிடுதூது]

செவித்தலை வன்னியிற் குடுண்ட வேயிசை திப்பதம்யான்
தவித்தலை வன்மைய லுந்தமர் காப்புந் தமிழ்க்கலியன்
கவித்தலை வன்றிரு வேங்கடத் தான்முன் சுழுறுமின்பொன்
குவித்தலை வந்துந்து கோனேரி வாழுங் குருகினமே! (எஅ

தருகூ ராங்க மறைத்தமிழ் மாலை குலாவுந்தெய்வ
முருகூ ராங்கர் வடவேங் கடவர்முன் னாளிலங்கை
வருகூ ராங்கந் துணித்தார் சரணங்கள் வல்வினைகட்
கிருகூ ராங்கள்கண் டீருயிர் காள்!சென் றிரவுமினே! (எகூ)

இரணிய நாட்ட னிரணிய னீரைந் தலையன்கஞ்சன்
முரணிய கோட்டி னகத்திற் கரத்தின்முன் றளிற்றுஞ்சத்
தரணியிற் குத்தி யிடந்தெய்து தைத்தவன் சர்ப்பவெற்பன்
ஆரணிய கேழ லரிரா கவன்கண்ண னாகிவந்தே. (அ௦)

வந்தித் திருக்கு மறைபோற்று வேங்கட வாணமலர்
உந்தித் திருக்குங் குமமணி மார்ப!உள் வஞ்சனையும்
புந்தித் திருக்கும் வெகுளியுங் காமமும் பொய்யும்விட்டுச்
சிந்தித் திருக்கும தெக்காலம்? யானுன் றிருவடியே. (அக)

திருவடி வைக்கப் புடவிபற் றுதண்டஞ் சென்னிமுட்டும்
கருவடி வைக்கலந் தாற்றுவெண் டிக்குங் கடன்மண்கொள்வான்
பொருவடி வைக்கன லாறிப்பி ரான்புன லாழிகட்டப்
பெருவடி வைக்கண்ட வப்பனெவ் வாறடி பேர்ப்பதுவே? (அ௨)

போரானைக் கோட்டினைப் பேர்த்தானை வேங்கடம்பேணுந்துழாய்த்
தாரானைப் போதனைத் தந்தானை யெந்தையைச் சாடிறப்பாய்ந்
தூரானை மேய்த்துப்புள் ளூர்ந்தானைப் பஞ்சவர்க் குய்த்துநின்ற
தேரானை நான்மறை தேர்ந்தானைத் தேருநந் தீதறுமே. (அ௩)

அறுகூடு கங்கை தரித்தா னயனழைத் தாலுமிச்சை
அறுகூடு மாலடி யாரடிக் கேயப்பன் வேங்கடவன்
மறுகூடு மாத ரெறிபூ ணெறிக்கு மதிலரங்கன்
வறுகூடு நம்மை மருவாமல் வாழ்விப்பன் மாமனமே! (அச)

மாமனங் காந்தவல் வாய்ப்புள்ளை யேவ மடித்துப்பித்தன்
காமனங் காந்தவன் றேடவெய் தோனறும் பூங்கொடிக்குத்
தாமனங் காந்தன் றிருவேங் கடத்தெந்தை தாள்களிலென்
றீமனங் காந்தங் கவருசி போலென்று சேர்வதுவே? (அரு)

சேரு மறுக்கமு நோய மரணமுந் தீவினையின்
வேரு மறுக்க விரும்பிகிற் பீர்! வட வேங்கடத்தே
வாரு மறுக்க வறியா னவரையும் வாழவருள்
கூரு மறுக்க மலையணி மார்பனைக் கோதண்டனே. (அசு)

கோதண்டத் தானத்தன் வாள்கதை நேமியன் கோலவட
வேதண்டத் தானத்த னின்னிசை யாண்மண்ணும் விண்ணுமுய்ய
மூதண்டத் தானத் தவதரித் தானெனின் முதுதிவினைத்
தீதண்டத் தானத் தனுவெடுத் தானெனிற் றீநரகே. (அஎ)

நரக மடங்கலுஞ் சென்றெய்த்த பாவிக்கு நாரியர்மேல்
விரக மடங்கமெய்ஞ் ஞானம் வெளிசெய வீடுபெற
உரக மடங்க நடித்தபொற் றாளின்றென் னுச்சிவைப்பாய்!
வரக மடங்கய லானாய்! வடமலை மாதவனே! (அஅ)

மாதிரங் காதன் மனைவாழ்க்கை யென்றெண்ணி வான்பொருட்கு
மாதிரங் காதம் பலவலை வீரின்னு மைந்தனென்றோர்
மாதிரங் காத படிவணங் கீர்! அரி மாவொடுகைம்
மாதிரங் காதமர் செய்கின்ற சேட மலையனையே. (அகூ)

மலையி னரக்க ருடன்றெழுந் தாரென்று மாமறைநூற்
கலையி னரக்க ருடனிந்தி ராதியர் காட்டச்செய்யும்
கொலையி னரக்க ருடனேறும் வேங்கடக் குன்றமென்றால்
உலையி னரக்க ருடந்தில ரேனுமென் னுள்ளவர்க்கே. (௯௰)

[தோழி, தலைமகனை ஏதங் கூறி இரவு வரல் விலக்கல்.]

உள்ளமஞ் சாய்வலி யாய்வலி யார்க்கு முபாயம்வல்லாய்
கள்ளமஞ் சாயுதங் கைவரு மாயனுங் கங்குலினில்
வெள்ளமஞ் சார்பொழில் வேங்கடக் குன்றினில் வீழருவிப்
பள்ளமஞ் சாரல் வழிவரில் வாடுமெம் பாவையுமே. (௯௧)

பாவை யிரங்கு மசோதைக்கு முத்துப் பதுமச்செல்விக்
கேவை யிரண்டன்ன கண்மணி நீல மருசரணப்
பூவை யிரந்தவர்க் கின்பவ ளம்புல் லசுரர்க்கென்று
மாவை யிரந்திரு வேங்கடத் தோங்கு மரகதமே. (௯௨)

மரகதத் தைக்கடைந் தொப்பித்த தொத்தனை யாழ்த்தினார்த
நரகதத் தைத்தள்ளி வைகுந்த நல்கினை நப்பின்னையாம்
விரகதத் தைக்கு விடையேழ் தழுவினை வேங்கடவன்
குரகதத் தைப்பிளந் தான்றோள்க ளாகிய குன்றுகளே. (௯௩)

குன்றுக ளத்தனை யுங்கட லாரக் குவித்திலங்கை
சென்றுக ளத்தனை வோரையு மாய்த்துத் திருச்சரத்தால்
அன்றுக ளத்தனை யட்டானை யப்பனை யாய்மகடோள்
துன்றுக ளத்தனை யேத்தவல் லார்க்கில்லை துன்பங்களே. (௯௪)

துன்பங் களையுஞ் சனனங் களையுந் தொலைவுறுபேர்
இன்பங் களையுங் கதிகளை யுந்தரு மெங்களப்பன்
தன்பங் களையும் படிமூவ ரைவைத்துத் தாரணியும்
பின்பங் களையு மிழுதுமுண் டானடிப் பேர்பலவே. (௯௫)

[தலைவனைப் பிரிந்த தலைவி, கடலை நோக்கி
இரங்கிக் கூறல்]

பலகுவ லைக்குட் சிலசஞ்சம் போலும் படிவவப்பன்
கலதுவ லைக்குமுன் னுண்டானின் மாட்டு நணுகிலனே
உலதவ லைக்குங் கடலே! நின கண்முத் துகுத்திரங்கி
இலகுவ லைக்குலஞ் சிந்தித்துஞ் சாயின் றிராமுற்றுமே. (கசு)

[நீட்டித்து வந்த தலைவனோடு தலைவி ஊடிப் பேசுதல்]

முற்றிலைப் பந்தைக் கழங்கைகொண் டோடினை முன்னும்பின்னும்
அற்றிலை நமை யலைபொறுத் தோங்கொல்லை யாவினிளங்
கற்றிலை மேற்றுயில் வேங்கட வா! இன்றுன் கான்மலரால்
சிற்றிலைத தீர்த்ததற் குப்பெரு வீட்டினைச் செய்தருளே. (கஎ)

அரும்பாத கன்பொய்யன் காமுகன் கள்வ னருள்சிறிதும்
அரும்பாத கனனெஞ்ச னூருச் சினத்தன வாவினின்றும்
திரும்பாத கன்மத்த னேனேற்குச் சேடச் சிலம்பமர்ந்த
திரும்பாத கஞ்சந் தரிலது காணுன் றிருவருளே. (கஅ)

திருமந் திரமில்லை சங்காழி யில்லை திருமணில்லை
தருமந் திரமொன்றுஞ் செய்தறி யீர்செம்பொற் றுணவனை
மருமந் திரக்கப் பிளந்தான் வடமலை வாரஞ்செல்வீர்
கருமந் திரண்டதை யெத்தாற் களையக் கருதுதிரே? (கக)

கருமலை யும்மருந் துங்கண் ணு மாவியுங் காப்புமவன்
தருமலை யுந்திய பேரின்ப வெள்ளமுந் தாய்தந்தையும்
வருமலை யுந்திருப் பாலாழி யுந்திரு வைகுந்தமும்
திருமலை யும்முடை யானெனக் கீந்த திருவடியே. (க00)

மட்டலர் தண்டலை சூழ்வட வேங்கட வாணனுக்குத்
தொட்டலை யுண்டபி ரானுக்கன் பாம்பட்டர் தூயபொற்ற
ளுட்டலை யுண்ட மணவாள தாச னுகந்துரைத்த
கட்டலர் சேர்திரு வந்தாதி நூறு கலித்துறையே. (கப

## திருவேங்கடத்தந்தாதி

முற்றிற்று.

அழகிய மணவாளதாசர் திருவடிகளே சரணம்.

181

ஸ்ரீ

# திருவேங்கடமாலை

## (மூலம்)

அழகிய மணவாள தாசர் என்னும்
திவ்யகவி-பிள்ளைப் பெருமாளையங்கார்
இயற்றியது

---

தேவகோட்டை

பிரம்மஸ்ரீ-உபய வேதாந்த-
மஹாவித்வான்

ஸௌந்தர ராஜ அய்யங்கார் ஸ்வாமிகளால்

பார்வையிடப்பட்டது

---

பிரசுராலயம்:—

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

நெ. 3/34. நயினியப்ப நாய்க்கன் வீதி,

பார்க் டவுன், P. O. சென்னை.

1932] [பிரஜோத்பத்தி ஆண்டு

நெ. 3/34, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் (P.O.) சென்னை.

☞ நீங்கள் உலகில் அதிர்ஷ்டசாலியாக வேண்டுமோனால், அதிர்ஷ்டம் எப்போது நமக்கு வரும்? நாம் துக்கமின்றி உலகவாழ்க்கையை எப்போது நடத்தக்கூடும்? முதலிய பல ரகசியங்களையும் ஜோதிட சாஸ்திரிகள் உதவியில்லாமல் தாங்களே அறிந்துகொள்ளக் கூடிய நூல். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டும்.

இந் நூல் ஒவ்வொரு குடும்பத்தாரும் தாம் தாம் அநுபவிக்க வேண்டிய சுக துக்கங்களையும் லாப நஷ்டங்களையும் ஜோதிட சாஸ்திரிகளது சகாயமின்றி அறிந்துகொள்ளத்தக்க சக்தியைக்கொடுக்கும்.

# சோதிட ஆசிரியன் 1—2—3—4

## முப்பது தினத்தில் தானே சோதிடராக்கும்.

இந் நூலின் முதற்பாகம் அவரவர்கள் ஜெனனமான காலத்தை அநுசரித்து, ஜென்ம லக்கினம், அம்ச லக்கினம், திசாபுத்திகள் முதலிய ஜோதிட ரகசியங்களை எளிதில் தாங்களே அறிந்துகொள்ள அநுகூலமாக இருக்கிறது இரண்டாம் பாகத்தில் லக்ன பலன்-துவாதச பாவ பலன்-உடுமகா திசா புக்திகளின் பலன்-அந்தரங்கள், அஷ்டவர்க்கம் போடும் வழி—களத்திர புத்திராதி தோஷ நிவாரண பரிகாரம் ஜாதகன் பிறந்த வருஷம் மாதம் தேதி நாழிகையைக் கணக்கெடுத்து ஆராய்ச்சி செய்து ஏற்பட்ட லக்ன ஸ்தான முதல் பன்னிரண்டு ஸ்தானங்கள் வரையிலுள்ள பலன்கள், அந்தந்த ஸ்தானங்களில் கிரகங்களின் உச்ச-நட்பு ஆட்சி நிலையினை அறிந்து, அதன் பலா பலன்கள், இராஜயோகம்—வறுமை யோகம்—துர்க்குண புத்திர யோகம்—சற்குண புத்திர யோகம்-துஷ்ட களத்திர யோகம்-உத்தம களத்திர யோகம் முதலியன காட்டும். 3-ம் பாகத்தில் நவக்கிரக சாந்திகள்—நான்காம் பாகத்தில் லக்கின ஆயுள் நிர்ணயம்—கணித ஆராய்ச்சியில் ஆண்பெண் அறிவது—விவாகப் பொருத்த நிர்ணயம், தார பலன், பெண்களின் ருது தோஷங்கள் அதற்குப் பரிகாரம், கண்டம், கண்டாதிகண்டம் முதலிய ஜோதிட ரகசியங்களையும், தமிழ் வழங்கும் தேயத்தார் யாவரும் சோதிடர் உதவியின்றி எளிதில் தெரிந்துகொள்ளலாம். இன்றே ஒரு புத்தகம் வரவழைத்துப் பார்க்கவும். இதில் நவக்கிரக ஸ்தோத்திர சுலோகங்கள் விசேஷமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீராமஜெயம்.

அழகிய மணவாள தாசர்

என்னும்

திவ்யகவி-பிள்ளைப் பெருமாளையங்கார்

இயற்றிய

# திருவேங்கடமாலை

## (மூலம்)

தேவகோட்டை

பிரம்மஸ்ரீ-உபய வேதாந்த-மஹாவித்வான்-

ஸௌந்தர ராஜ அய்யங்கார் ஸ்வாமிகளால்

பார்வையிடப்பட்டது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

பிரசுராலயம்:—

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

நெ. 3/34, நயினியப்ப நாய்க்கன் வீதி,

பார்க் டவுன், P. O. சென்னை.

# எமது சொந்தப்பதிப்பு தமிழ் நூல்கள்.

## ஸ்ரீ விவேகாநந்தர் தமிழ் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இராஜயோகமும் பதஞ்சலி யோக சூத்ர வியாக்கியானமும் | 2 | 4 |
| பதஞ்சலியோகசூத்ர மூலமும் வியாக்யானமும் (தனி) | 1 | 4 |
| கர்மயோகம் - விரிவானது | 1 | 0 |
| ஞானயோக ரஹஸ்யம் | 2 | 4 |
| வேதாந்த ரகசியம் | 2 | 0 |
| ஞானாத்ம ஒளி 1-2-3 பாகம் | [illegible] | 10 |
| ஞானோதயம் | 1 | 0 |
| 1904-ல் தேச மொழிகள் | 2 | 0 |
| அருள் மொழிகள் | 1 | 8 |
| பக்தியோகம் | 0 | 12 |
| ஸ்ரீராமகிருஷ்ணபிரம்மானந்த சம்பாஷணை | 3 | 0 |
| ஸ்ரீராமதீர்த்தபரமஹம்ஸ விஜயம் 1 2 பாகம் | 5 | 0 |
| சச்சிதானந்த சிவம் சம்பாஷணை | 2 | 2 |
| மோக்ஷசாதன ரகசியம் (வசனம்) | 4 | 0 |
| சங்கீதாமிர்த கீர்த்தனை (தெலுங்கு) | 1 | 8 |
| சங்கீதாமிர்த கீர்த்தனை (தமி) | 1 | 4 |
| ஹிந்தியசங்கீதகீர்த்தனைபாட்டு | 1 | 8 |
| சங்கீதக்கீர்த்தனை சுர-ஞானவிளக்கம் (சுரம்) | 1 | 4 |
| ஞானோதயஸ்தோத்திரப்பாட்டு | 1 | 4 |
| அகஸ்தியர் ரணவைத்தியம் | 0 | 12 |
| அகஸ்தியர் ரயனவிதி 500 உரையும், நாகமுனிவர் 200-ம் | 1 | 4 |

## முருகன் புகழ் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரையுடன் | 0 | 8 |
| கந்தரந்தாதி மூலமும் வில்லிபுத்தூர் ஆழ்வார் உரையும் நூதன முறை | 0 | 8 |
| கந்தரநுபூதி உரையுடன் | 0 | 8 |
| " விரிவுரை இரண்டும் | 0 | 12 |
| கந்தர் கலிவெண்பா மூலமும் உரையுடன் | 0 | 8 |
| நீதி வாக்யங்கள் ([illegible]) | 0 | 4 |
| [illegible] 1 பாகம் | 4 | 0 |
| ஆர[illegible] 100 [illegible] 1,250 [illegible] தொகை, 60 [illegible] 14 படம் (4-ம் பதிப்பு) | 6 | 0 |
| திரிசங்கம் விரிவுரை | 0 | 6 |
| நீதிநெறி விளக்கம் மூலமும் விருத்தியுரையும் (ஆங்கிலம்) | 1 | 8 |
| பருநீதி [illegible] [பதிப்பு] | 0 | 8 |
| வள்ளுவர் [illegible] | 1 | 0 |
| [illegible] உரை | 0 | 6 |
| களவெண்பா மூலமும், [illegible] விளக்கம், [illegible] தலைப்பு, பதவுரை, கருத்துரை, விசேடவுரை | 2 | 0 |
| கலியுக புராணம் | 0 | 8 |
| 50 விகடக்கதைகள் | 0 | 3 |
| விபூதிருத்திராக்ஷ மகிமை | 0 | 6 |
| பிரதோஷ மகிமை வசனம் | 0 | 4 |
| சென்னை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய வைபவ வசனம் | 0 | 6 |
| கைவல்ய மூலம் | 0 | 4 |
| ராமகிருஷ்ண விஜயம் | 1 | 4 |
| நீதிநெறி விளக்கம் விரிவுரையுடன் | 0 | 8 |

N. B. இன்னும் அநேக சொந்த பதிப்புகளின் பெயரும் விலையும் [illegible] யில் காண்க; விலாசம் தெரிவித்தால் காட்டலாக் அனுப்புவோம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# திருவேங்கடமாலை

## (மூலம்)

காப்பு.

வெண்பா.

நீண்பார் புகழுந் திருவேங் கடமாலை
வெண்பாவா னூறும் விளம்புதற்குக்—கண்பாராய்
நாராய ணா! அடியே னுடுந் தமிழ்வேத
பாராய ணா! சடகோ பா! (௧)

இதுவும் அது.

[இது திருவேங்கட முடையானைக் குறித்தது]

மூலமே! என்றகரி முன்வந் திடர்தொலைத்த
நீலமே கம்போல நின்றானைப்—பாலாய
வேலைநடு விற்றுயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதென் வாய். (௨)

[அவையடக்கம்]

ஆழ்வார்கள் செந்தமிழை யாதரித்த வேங்கடமென்
றாழ்வான புன்சொல்லுந் தாங்குமா—லேழ்பாரும்
வெல்லுங் கதிர்மணியும் வெம்பாலுஞ் செஞ்சாந்தும்
புல்லும் பொறுத்தமையே போல். (௩)

## நூல்.

பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
பரமபத நாட்டினான் பையரவின் கூட்டிற்
சிரமபத நாட்டினான் சேர்பு. (௧)

சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே—போதி
லிருப்பாற் கடலா னிபமூர்ந்தார்க் கெட்டாத்
திருப்பாற் கடலான் சிலம்பு. (௨)

மாலைக்கோ வித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாய் வேங்கடமே—சோலைத்
தருமா தரைநட்டான் றண்முல்லை யாயர்
தருமா தரைநட்டான் சார்பு. (௩)

நாலு திசைமுகமு நண்ணுதலா லொண்கமல
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே—சாலுறையு
மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்று தல்போ லாரியனு
ளுண்மயக்கந் தேற்றுவித்தா னூர். (௪)

பாணிபிறை கொன்றை பணிசூடி மாவேந்தி
வேணியானைப் பொருவும் வேங்கடமே—ஆணிநிறப்
பீதாம் பரனார் பிரமர்வா பூண்டங்கண்
பீதாம் பரனார் விருப்பு. (௫)

மாலாய்ச் சசிதழுவி வச்சிரமேந் திப்புகமா
மேலாய்ப் புரந்தரனும் வேங்கடமே—நாலாய்க்
கிளர்வாகு மந்தரத்தான் கேட்டமரர் வேட்டுத்
தளர்வாகு மந்தரத்தான் சார்பு. (௬)

வள்ளிபுணர்ந் தாறுமுக மன்னிமயின் மேற்கொளலால்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே—உள்ளினரைத்
தங்கமலப் பார்வையான் றன்னடியார் மேல்வைக்குஞ்
செங்கமலப் பார்வையான் சேர்வு (௭)

புள்ளரவ நீரவம் போர்மா வரவமறு
வெள்ளரவ வெற்பாகும் வேங்கடமே—ஒள்ளரியாய்
மாகனகம் பத்தினார் வாய்கண்கை யுந்திபதங்
கோகனகம் பத்தினார் குன்று. (௮)

துய்யசெம்பொற் கோயிற் சுடரெறிப்பக் கண்முகிழ்த்து
வெய்யவன் றேர் மாவிடறும் வேங்கடமே—ஐயிருநூ
றனைமுகப் பாம்பணையா னணிலைப்பி றாநிவருங்
கானமுகப் பாம்பணையார் காப்பு. (௯)

மாண்பிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரு
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே—பாண்டுமக
னேறிரதப் பாகனா ரேத்துமடி யார்நாவி
லாறிரதப் பாகனா ரூர். (௧௦)

கோலியொரு நான்கு குலமறையு நாற்றிசையும்
வேலியென நின்றேத்தும் வேங்கடமே—வாலிதனை
கண்பாவை யாதரித்தான் ஞானமுத லாழ்வார்கள்
வெண்பாவை யாதரித்தான் வெற்பு. (௧௧)

தெள்ளியதோர் வீடருளுஞ் சீர்கேட்டுப் பொன்மலையும்
வெள்ளிமலை யும்பணியும் வேங்கடமே—புள்ளின்
கொடிவாக னத்தான் குளிர்ந்திருண்ட காரின்
வடிவாக னத்தான் வரை. (௧௨)

எப்பூ தலமு மிறைஞ்சித் திசைநோக்கி
மெய்ப்பூ சனைபுரியும் வேங்கடமே—கொப்பூ
ழிலகுமுண்ட கந்தரத்தா னின்றளிக்கு மீரே
ழுலகுமுண்ட கந்தரத்தா னூர். (கங)

நோவினையு நோயினையு நோய்செய் வினையினையும்
வீவினையுந் தீர்த்தருளும் வேங்கடமே—மூவினைசெய்
மூவடிவாய்ப் பச்சென்றான் முன்னா ளகலிகைக்குச்
சேவடிவாய்ப் பச்சென்றான் சேர்பு. (கச)

பித்துமல ஊமைமுடம் பேய்குருடு கூன்செவிடு
மெய்த்துயர்நோய் தீர்த்தருளும் வேங்கடமே—பத்தருக்கு
வந்ததுக்கங் காப்பா னலருந் திபினுலகந்
தந்ததுக்கங் காப்பான் றலம். (கரு)

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறங்கும் வேங்கடமே—கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்குஞ்
செம்பவள மாவென்றான் சேர்வு. (கசு)

தாவிவருங் வானரங்க டண்குவட்டிற் சற்கடக
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே—காவிரிசூழ்
பொற்றிருவ ரங்கத்தான் போதன் சிவனென்று
மற்றிருவ ரங்கத்தான் வாழ்வு. (கஎ)

ஒண்சிந்து ரத்தைவெறுத் தாடும் பிடிவேழம்
விண்சிங்கங் கண்டணைக்கும் வேங்கடமே—எண்சிந்தைக்
கோரா விருந்தா னொருநாள் விதுரனுக்கு
வாரா விருந்தான் வரை. (கஅ

மாதுமடக் கன்னிகழை வந்தணுகிக் கம்பத்தின்
மீதாடிப் பாளொக்கும் வேங்கடமே—ஊதுகுழற்
பாலன்பா லாக்குவித்தான் பஞ்சவர்க்காய் நூற்றுவரைக்
காலன்பா லாக்குவித்தான் காப்பு. (௧௯)

மன்னு குடிக்குறவர் வானூர் துலாத்திடையே
மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே—என்னு
ளரவிந்தப் போதகத்தா னன்பா லழைத்த
கரவிந்தப் போதகத்தான் காப்பு. (௨௦)

கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன
வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே—கல்லை
யரிவைவடி வாக்கினா னன்னமாய் வேத
விரிவைவடி வாக்கினான் வெற்பு. (௨௧)

தேனேறித் தேன்வைக்குந் திண்கழைமேல் விண்மகர
மீனேறி வேள்கொடியாம் வேங்கடமே—வானேறித்
தீமுகனா கத்திருப்பார் சேவடிக்கா ளானவெனைக்
காமுகனா கத்திருப்பார் காப்பு. (௨௨)

ஒண்கொம்பிற் றேனிறா லூர்பிறைக்கோட் டாலுடைந்து
விண்குடும்ப வாய்நிறைக்கும் வேங்கடமே—வண்கும்ப
கம்பத்தா னைக்கடுத்தார் காரரக்கர் போர்மாளக்
கம்பத்தா னைக்கடுத்தார் காப்பு. (௨௩)

கூனவிள வெண்குருகு கோனேரி யில்விசும்பூர்
மீனவிழ லைக்கொத்தும் வேங்கடமே—கானகத்தும்
பொன்னா ருழையெய்தார் பூங்கழலே தஞ்சமெனை
உன்னா ருழையெய்தா ரகர்

மண்மூலந் தாவென்று மந்திகடு வற்குரைப்ப
விண்மூலங் கேட்டேங்கும் வேங்கடமே—ஒண்மூல
வேதத் திருக்குழையார் வெய்யோ னிரண்டனைய
சீதத் திருக்குழையார் சேர்வு. (உரு)

நாலவிட்ட பொன்னா சனன்னுதலா ருந்துதொறு
மேலவிட்டந் தொட்டிழியும் வேங்கடமே—ஆலமிட்ட
பொற்புக் களங்கறுத்தார் போர்சரிய வாணன்றோள்
வெற்புக்க ளங்கறுத்தார் வீடு. (உசு)

டாணிறங்கொ டெங்கினிளம் பாளைவிரி யச்சுளையின்
மீனினங்கொக் கென்றெறிக்கும் வேங்கடமே—வாணிமிர்ந்த
வெள்ளத்துக் கப்பாலான் மெய்ப்பரம யோகியர்தம்
உள்ளத்துக் கப்பாலா னூர். (உஎ)

கோம்பணியுந் தேமாங் குயிலகருடன் போற்கூவ
வெம்பணிகள் புற்றடையும் வேங்கடமே—ஐம்பணியும்
விண்ணணிந்து காப்பார் மிசைவைத்தார் பத்தாத்தை
முண்ணணிந்து காப்பா ருவப்பு. (உஅ)

தெங்கிளநீர் வீழச் சிதறுமணி வையக்கரிகள்
வெங்கனலென் றஞ்சிப்போம் வேங்கடமே பைங்கழையின்
மாண்டாரைப் பண்டழைத்தார் மாமறையோன் பாற்றோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார் வாழ்வு. (உகூ)

அங்கயலின் மேக மதிரப் பெரும்பாந்தள்
வெங்கயமென் றங்காக்கும் வேங்கடமே—பங்கயனோ
டம்புவ னங்கடந்தா ரம்புயத்து மங்கையொடு
வெம்புவ னங்கடந்தார் வெற்பு. (௩0)

திங்களிறு மாந்துலவத் தீம்பாற் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே—பொங்கமரி
லார்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் பற்று. (௯௧)

அம்புலியின் வாழ்மா னதிருங் குரற்பகுவாய்
வெம்புலியைக் கண்டேங்கும் வேங்கடமே—நம்புமெனை
வீங்கூதனைக் கண்டிருப்பார் விண்ணோர் நார்பிறந்து
சாங்கூத்தைக் கண்டிருப்பார் சார்பு. (௯௨)

கண்ணால் வெடித்த கழைமுத்தங் கார்துளைத்து
விண்ணுறுமீன் போலிருக்கும் வேங்கடமே—எண்ணார்
கலங்கவரு மஞ்சனையார் காண்முளையை யூர்ந்தார்
சலங்கவரு மஞ்சனையார் சார்பு. (௯௩)

செல்லுக்கு மேற்செல்லுந் திண்ணியவேய் வாசவனார்
வில்லுக்கு வாளியாம் வேங்கடமே—எல்லுக்கு
மந்தகா ரம்படைத்தா ராழல்வா யம்பினால்
வெந்தகா ரம்படைத்தார் வெற்பு. (௯௪)

பொன்கமழுங் கற்பகத்தின் பூங்கா வனத்துக்கு
மென்கமுகங் காலாக்கும் வேங்கடமே—நன்கமரு
மூரத் திகிரியா ரூதுந் திகிரியார்
வீரத் திகிரியார் வெற்பு. (௯௫)

தண்ணிலைக்கண் மூங்கிற் றலைதொடுத்த தேனிறால்
விண்ணிலைக்கண் ணாடியாம் வேங்கடமே—உண்ணிலைக்குஞ்
சோதி வணங்கரியார் தூயசன காதியரு
மோதி வணங்கரியா ரூர். (௯௬)

தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு
வெண்கவரி போலசையும் வேங்கடமே—ஒண்கடல்சூழ்
வண்டுவரை நாட்டினான் மத்தாக வாரிதியுட்
பண்டுவரை நாட்டினான் பற்று. (௩௭)

அங்கதிருங் கான்யாற் றடர்திவலை யானனைந்து
வெங்கதிருந் தண்கதிராம் வேங்கடமே—செங்கதிர்வேற்
சேந்தனத்த மைந்தன் றிருத்தாதை விற்கிளையாள்
பூந்தனத்த மைந்தன் பொருப்பு. (௩௮)

சேணுலவு திங்களெனுஞ் சித்தசவேள் வெண்குடைக்கு
வேணுவொரு காம்பாகும் வேங்கடமே—கோணுமனத்
தென்னையா ளாகத்தா னின்னருள்செய் தான்கமல
மின்னையா ளாகத்தான் வெற்பு. (௩௯)

தேவருடை யைர்கருவின் செந்தே னிறால்கிழிய
மீவருடை பாய்கின்ற வேங்கடமே—மூவடிமண்
போயிரந்தா ரத்தார் புனையு மொருபதினு
றாயிரந்தா ரத்தாரகம். (௪௦)

வன்குறிஞ்சி மாதர்பால் வானோ ரருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே—நங்குறிஞ்சிப்
பேய்த்தனஞ்சு வைத்தார் பிறர்க்கமுதீந் தீசனுக்கு
வாய்த்தனஞ்சு வைத்தார் வரை. (௪௧)

வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவுகனி கைநீட்டும் வேங்கடமே—தாவுகடல்
வேவவிலங் கைக்கொண்டார் வீடணனை வைத்தொழிந்தார்
சாவவிலங் கைக்கொண்டார் சார்பு. (௪௨)

வெள்ளியகன் மீதே விடர்முளைத்த செங்காந்தள்
வெள்ளி யகல்விளக்காம் வேங்கடமே—வெள்ளியெனும்
வேதியனுட் டங்கெடுத்தார் மேதினியைப் பாதலமென்
றோதியனுட் டங்கெடுத்தா ரூர். (௪௩)

அல்லிமலர்க் காந்தளின்மே லாடுஞ் சுரும்பினங்கண்
மெல்லியர்கள் கைக்கழகாம் வேங்கடமே—மல்லினரைப்
பண்டடைந்த வன்புடையார் பார்த்தனுக்குத் தத்துவநூல்
விண்டடைந்த வன்புடையார் வெற்பு. (௪௪)

காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே—பூந்துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மே
னூன்மடங்கா மார்வத்தார் காடு. (௪௫)

நாகத்தின் மேற்குறவர் நன்கெறிந்த மாணிக்க
மேகத்தின் மின்புரையும் வேங்கடமே—மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண் டுமிழ்ந்தளந்து
சாத்தாண்ட மண்டலத்தார் காப்பு. (௪௬)

செம்பதும ராகச் சிலைசூழ் பெரும்பாந்தள்
வெம்பரிதி யூர்கோளம் வேங்கடமே—உம்பருல
கோதத்தி னப்புறத்தா னோரா விலைதுயின்றான்
வேதத்தி னப்புறத்தான் வெற்பு. (௪௭)

கோலமணிப் பாறையிற்பாய் கோடரங்கள் செங்கதிரோன்
மேலனுமன் பாய்ந்தனைய வேங்கடமே—நாலுமறை
யாய்ந்தபர தத்துவந்தா னானான் குடமாடல்
வாய்ந்தபர தத்துவந்தான் வாழ்வு. (௪௮)

கோம்பினிறால் வாங்கநிமிர் குஞ்சரக்கை யம்புலிமேல்
வெம்பியெழுங் கோளரவாம் வேங்கடமே—தம்பிபல
போர்காது மீர்ந்தார் புனையரக்கி மூக்கினொடு
வார்காது மீர்ந்தார் வரை. (௪௯)

வண்மைதிகழ் வெண்பளிங்கு வட்டத்திற் கண்டுயின்மான்
விண்மதியின் மானையுக்கும் வேங்கடமே—ஒண்மதியா
னாலைத்தா யோதானார் நோக்கவரி யார்துளவ
மாலைத்தா யோதானார் வாழ்வு. (௫௦)

சிலேடைகள்.

காதலிற்றுச் சார்ந்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடமே—போதகத்தை
மோதி மருப்பொசித்தா முன்பதினா றாயிரவ
ரோதி மருப்பொசித்தா னூர். (௫௧)

கேள்வித் துறைவோருங் கேடறவில் வாழ்வோரும்
வேள்விக் கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து
முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய
வன்பா ரதமுடித்தார் வாழ்வு. (௫௨)

பொய்யாம் வினையேனைப் போல்வாரு மன்பருஞ்செய்
மெய்யாம் வழுத்தேயும் வேங்கடமே—செய்யா
டனத்துவசப் பொற்புள்ளார் தானவரை மோதுஞ்
சினத்துவசப் பொற்புள்ளார் சேர்வு. (௫௩)

கோடவிலா வுள்ளத்துக் கோதி லடியவரும்
வேடருமங் கைவரைவெல் வேங்கடமே—மூடா
டனமா மனைக்கொன்றார் வன்கஞ்ச னென்னுஞ்
சினமா மனைக்கொன்றார் சேர்பு. (௫௪)

மொய்வதன மங்கையர்கண் முன்கையும் யோகியர்கண்
மெய்வயது மஞ்சுகமார் வேங்கடமே—பெய்வளையார்
பாற்றிருப்பா தஞ்சிவந்தார் பற்றினார் புன்பிறப்பை
மாற்றிருப்பா தஞ்சிவந்தார் வாழ்வு. (௫௫)

இல்லக் குறத்தியரும் யாக்கை நிலை வேட்டவரு
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே—நல்ல
புதுப்பூவை வண்ணத்தான் பூமுகத்துச் செவ்வாய்
மதப்பூவை வண்ணத்தான் வாழ்வு. (௫௬)

தேனியலுங் கூந்தலார் செங்காம தவத்தோர்
மேனியுமை யம்பொழியும் வேங்கடமே—ஞானியர்க [ணைய்
டாங்குறியெட் டக்கரத்தார் நாளூரன்மேல் வைத்துவெண்
தாங்குறியெட் டக்கரத்தார் சார்பு (௫௭)

காணையில்லார் சொற்கேட்ட கந்தருவ ருந்தவரும்
வீணையிரா கத்தைவிடும் வேங்கடமே—கோணை
யிருங்குண்டை யோட்டினா னேற்பொழிந்தான் கூனி
மருங்குண்டை யோட்டினான் (௫௮)

முந்நூன் மறையவர்நா மோதரய்யை மாரணமு
மெய்ந்நூ லலங்கவரும் வேங்கடமே—பொய்ந்நூலா
லச்சமயக் கத்தினா ராதரிக்குந் தெய்வங்கள்
வச்சமயக் கத்தினார் வாழ்வு. (௫௯)

ஓதுமறை யோர்புறமு முள்ளுங் கலையினரு
மேதையக லாதிருக்கும் வேங்கடமே—கோதைகுழல்
சுற்றுத தாரணியார் தூயதிருத் தாளூன்றப்
பற்றுத தாரணியார் பற்று. (௬௦)

நன்முலைபோல் வெண்ணகையார் நாயகர்மேல் வைத்தநெஞ்ச
மென்முலையுங் கற்புரஞ்சேர் வேங்கடமே—முன்மலைந்து
தோற்றமா ரீசனார் தோற்றிமா யம்புரியச்
சீற்றமா ரீசனார் சேர்வு. (௬௧)

கூறுங் கிளிமொழியார் கொங்கையென்றுங் கண்ணென்றும்
வீறு மருப்பிணைசேர் வேங்கடமே—நாறுந்
துளவமலர்க் கண்ணியார் தொண்டடைந்த தமக்கன்
புளவமலர்க் கண்ணியரா னார். (௬௨)

மாதரம்பொன் மேனி வடிவு மவர்துறக்கு
மீதரம்பை யைப்பழிக்கும் வேங்கடமே—பூதலமுந்தின்
பம்பரமா காயத்தார் பாடுனல் வீடாரு
நம்பரமா காயத்தார் நாடு. (௬௩)

கோள்கரவு கற்றவிழிக் கோதையர்கள் பொற்றாளும்
வேள்காமு மம்பஞ்சசர் வேங்கடமே—நீள்கரனார்
தூடணனார் முத்தலையார் துஞ்சவெய்து துஞ்சாரைக்
கூடணனார் முத்தலையார் குன்று (௬௪)

கோங்கைக்கோ டேறிக் குலுக்குமரி புங்கரியும்
வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே—பூங்கைக்குண்
மெய்த்தவளச் சங்கெடுத்தார் மேகலைவிட் டங்கைதலை
வைத்தவளச் சங்கெடுத்தார் வாழ்வு. (௬௫)

மாவிற குயிலு மயிலு மொளிசெய்ய
மேவிப் புயறவழும் வேங்கடமே— ஆவிக்கு
ளானவரு டந்தடுத்தா ரானிரைக்காக் குன்றேந்தி
வானவரு டந்தடுத்தார் வாழ்வு. (௬௬)

கானோ டருவி கனகமுமுந் துந்தள்ளி
மீனோ டெனக்கொழிக்கும் வேங்கடமே—வானோர்கண்
மேகனைய னங்கொண்டார் வேணியரன் காண்பரியார்
காகனைய னங்கொண்டார் காப்பு. (சுஎ)

கண்டடைந்த வானவருங் காந்தட் குலமலரும்
விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடமே—தொண்டருக்கு
வைகுந்த நாட்டான் மருவுறவ மீந்துவைக்கும்
வைகுந்த நாட்டான் வரை. (சுஅ)

வாழும் புலியினொடு வானூர் தினகரனும்
வேழங்க ளும்வலஞ்செய் வேங்கடமே—ஊழின்கட்
கற்றா யினுமினியான் சாரா வகையருளு
நற்றா யினுமினியா னாடு. (சுகு)

தாட்கமலப் பூநனைக்குஞ் சாயகங்கள் சொய்துதிரி
வேட்டுவ வடிவில்லா வேங்கடமே—வாட்கலிய
னாலியப்பாம் பாட்டினார் நச்சுமடு வைக்கலக்கித்
தாளியப்பாம் பாட்டினா காப்பு. (எ0)

ஆயுந் துறைமாத்தைக யண்டினமுந் தண்டினரும்
வேயுங் கிளைவிட்ட வேங்கடமே—தோயுந்
தயிர்க்காத்தாங் கட்டுண்டார் தாரணியிற் றந்த
வுயிர்க்காத்தாங் கட்டுண்டா ரூர். (எக)

தொண்டொடுமெய் யன்புடையார் தூய்மனமுஞ் சந்தனமும்
விண்டொடுபொற் பாம்பணைசேர் வேங்கடமே—தண்டொடு
கோலமருங் கார்முகத்தார் கோடாழி யார்குழைபின் [வான்
கோலமருங் கார்முகத்தார் குன்று. (எஉ)

கிட்டுநெறி போகியருங் கிள்ளைகளுந் தங்கூடு
விட்டுமறு கூடடையும் வேங்கடமே—எட்டுமத
மாவென்று வந்தான் வாநாளை வாவின்று
போவென்று வந்தான் பொருப்பு. (௭௩)

மட்டுவளர் சாரலினு மாதவத்தோர் சிந்தையினும்
விட்டு மதிவிளங்கும் வேங்கடமே—கட்டுசடை
நீர்க்கங்கை யேற்றா னிரப்பொழித்தா னீள்குறளாய்ப்
பார்க்கங்கை யேற்றான் பதி. (௭௪)

புக்கவரு மாதவரும் பூமதுவுண் வண்டினமு
மெய்க்கவசம் பூண்டிருக்கும் வேங்கடமே ஒக்கவெனை
யன்பதினா லாண்டா ரிலைவெயொடுங் கானுலைந்த
வன்பதினா லாண்டார் வரை. (௭௫)

தக்கமறை யோர்நாவுந் தண்சார லின்புடையு
மிக்க மனுவினையும் வேங்கடமே—அக்கரவம
பூண்டார்க்கு மாறுடைத்தார் பொங்கோத நீரடைத்து
மீண்டார்க்கு மாறுடைத்தார் வெற்பு. (௭௬)

நீடு சொன்முடியு நீதிநெறி வேதியர்கள்
வீடு மகமருவும் வேங்கடமே—கோடுங்
கருத்துளவ மாலையார் காணும னின்ற
மருத்துளவ மாலையார் வாழ்வு. (௭௭)

சீதங்கொள் சாரலினுஞ் சீர்மறையோ ரில்லிடத்தும்
வேதங்க ளுல்வளரும் வேங்கடமே—போதன்
சிரித்துப் புரந்துடைந்தான் றேவரொடு மண்டம்
விரித்துப் புரந்துடைந்தான் வெற்பு. (௭௮)

நன்கோடு போலுமுலை நாரியருஞ் சண்பகத்தின்
மென்கோடுங் கற்பகஞ்சேர் வேங்கடமே —வன்கோடு
கூரிருவ ராகனார் கோகனகை பூமியென்னு
மோரிருவ ராகனா ரூர். (௭௯)

கோடஞ்சுங் கோதையர்கள் கொங்கையினுங் குஞ்சரத்தும்
வேடன் சரந்துரக்கும் வேங்கடமே—சேடனெனு
மோர்பன் னகத்திடந்தா னுற்றா னிரணியனைக்
கூர்பன் னகத்திடந்தான் குன்று (௮௰)

நாரியாதங் கூந்தலினு நாலு மருவியினும்
வேரிநறுஞ் சாந்தொழுகும் வேங்கடமே—பாரினுளா
ரற்பசுவர்க் கத்தா ரறிவரியார் முன்மேய்த்த
நற்பசு வர்க்கத்தார் நாடு. (௮௧)

மாதரார் கண்ணு மலைச்சார லுங்காமர்
வேதமார்க் கஞ்செறியும் வேங்கடமே—பாதமாம்
போதைப் படத்துவைத்தார் போர்வளைய மாற்றரசர்
வாதைப் படத்துவைத்தார் வாழ்வு (௮௨)

எத்திக்குங் காம்பு மெயினருமா ரத்தினையே
வித்திக் கதிர்விளைக்கும் வேங்கடமே—தித்திக்குங்
காரிமா றன்பாவார் காதலித்தார் தம்பிறவி
வாரிமா றன்பாவார் வாழ்வு. (௮௩)

பாரோடு கான்யாறும் பல்களிறு நந்தவனம்
வேரோ டலைத்தீர்க்கும் வேங்கடமே—காரோதஞ்
சுட்டகரு விற்படையார் தொண்டரைமீண் டேழுவகைப்
பட்டகரு விற்படையார் பற்று. (௮௪)

நன்காமர் வண்டினமு நால்வாய் மதகரியு
மென் மரமுழக்கும் வேங்கடமே—புன்காம
மேவார் கழலா ரெனதுளத்தி றென்றலைவை
பூவார் கழலார் பொருப்பு. (அ௫)

பாம்புங் குளிர்சந்தின் பக்கத்தி னிற்கின்ற
வேம்பு மருத்துவக்கும் வேங்கடமே—காம்புகர
மானவரை நன்குடையா ராளாய்த் தொழுதேத்து
மானவுரை நன்குடையார் வாழ்வு. (அ௬)

சாரு மருவிதவழ் சா லுஞ்செஞ் சந்தனத்தின்
வேரு மரவமரு வேங்கடமே—கேரு
மதுகையிட வர்க்கறுத்தார் மாமறையோன் சாப
மதுகையிட வர்க்கறுத்தார் வாழ்வு. (அ௭)

மண்மட்டுத் தாழ்சுனையும் வட்டச்சி லாதலமும்
விண்மட்டுத் தாமரைசேர் வேங்கடமே— எண்மட்டுப்
பாதமுன்னி னைந்தார் பரமபதஞ் சேர்கவென்று
போதமுன்னி னைந்தார் பொருப்பு. (அ௮)

போதா விருசுடரும் போதுதற்கு மோதுதற்கும்
வேதாவி னுன் முடியா வேங்கடமே—மாதாவின்
வீங்குதனத் துக்கினியான் விம்மியழா தாட்கொண்டா
னூங்குதனத் துக்கினியான் சார்பு. (அ௯)

பேய்க்குமொரு பேய்போன்று பித்தாய்த் திரிவோர்க்கும்
வேய்க்குமணி முத்திவரும் வேங்கடமே—வாய்க்கமுதூர்
வண்மைப்பே ராயிரந்தான் மன்னினுன் மாவலிபாற்
றண்மைப்பே ராயிரந்தான் சார்பு. (௯௰)

வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியு மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே—தோட்கைவிழ
மாகவந்த னைக்கழித்தார் வாழிலங்கைப் பாதகரை
மேலாகவந்த னைக்கழித்தா ரூர். (௯௧)

கூட்டு தவத்தவருங் கோளரிக ளின்தொகையும்
வேட்டு வரம்பொழியும் வேங்கடமே—மோட்டுமதத்
தந்திக் கமலத்தார் தாம்பெறாஉம் வீடளித்தா
ருந்திக் கமலத்தா ரூர். (௯௨)

வஞ்ச மடித்திருப்பார் வாக்குங் கலைக்கோடும்
விஞ்ச மடித்திருக்கார் வேங்கடமே—கஞ்சப்
பிரமாநந் தத்தான் பிரபஞ்ச மாய்த்த
பரமாநந் தத்தான் பதி. (௯௩)

சேலஞ்சுங் கண்மடவார் தேங்குழலுங் கோங்கினமு
மேலஞ்சு வர்க்கமார் வேங்கடமே—கோலஞ்சேர்
பாரிலலங் காரத்தார் மற்றும்பல் பூணணிந்த
காரிலலங் காரத்தார் காப்பு. (௯௪)

கோய்யு மலர்ச்சோலைக் கொக்கும் பிணியாளர்
மெய்யும் வடுத்தவிரும் வேங்கடமே—நையுஞ்
சனனாந் தகனார் தலையிலிதோள் சாய்த்த
சினனாந் தகனார் சிலம்பு. (௯௫)

நேர்க்கவலை நோயினரு நீடுசிலை வேடுவரும்
வேர்க்கவலை மூலங்கள் வேங்கடமே—கார்க்கடன்மேற்
றூண்டுங்கா லத்திறப்பார் தம்மைவிழுங் கிக்கனிவாய்
மீண்டுங்கா லத்திறப்பார் வெற்பு. (௯௬)

தண்டா மரைச்சுனையிற் சாதகமும் வேடுவரும்
விண்டாரை நாடுகின்ற வேங்கடமே—தொண்டாக்கி
யேவத் தனக்குடைய வென்னைமுன் னாளெடுத்த
கோவத் தனக்குடையார் குன்று. (௯௭)

வாழரியுஞ் சந்தனத்தோய் மாருதமுந் தாக்குதலால்
வேழ மருப்புகுத்தும் வேங்கடமே—நீழலமர்
பஞ்சவடி காட்டினான் பாரணப்பான் போலெவர்க்குங்
கஞ்சவடி காட்டினான் காப்பு. (௯௮)

எவ்விடமு மாறாதோய்ந் தெல்லோரும் பல்பாப்பும்
வெவ்விடரி னீங்கியெழும் வேங்கடமே—தெவ்விடையே
பூட்டவறு கத்தலையா றேந்தியவா றான்மார்க்கட்
வீட்டவறு கத்தனையான் வெற்பு. (௯௯)

பாடு மதுகரமும் பச்சைத் தழைக்குடிலை
வேடு மணமருவும் வேங்கடமே—நீடு
மகால யங்கடந்தார் வாழ்வகத்தே வார்க்கு
மகாலை யங்கடந்தார் வாழ்வு. (௱)

நூற் சிறப்புப் பாயிரம்

ஆதிதிரு வேங்கடமென் றாயிரம்போர் ணிடமென
ஓதிய வெண்பா வொருநூறுங்—கோதில்
குணவாளர் பட்டர்திருக் கோனகத்தாள் சேர்
மணவாள தாசன்றன் வாக்கு.

திருவேங்கடமாலை

முற்றிற்று.

FIRST EDITION 1952. 1,000 COPIES.
[illegible] பிரஸ்—சௌகார்பேட்டை, சென்னை. (1-2-52)

# ஒரு பெண்ணரசியின் பிரஹ்ம ஞானோபதேசம்.

இதன் ஆசிரியர் ஸ்ரீ சாது கோ. வடிவேலு செட்டியார் அவர்கள்

[*Approved by the Madras Text—Book Committee (Vide) Fort St. George Gazette Part I—B, Educational Dated 13—11—28 Page No. 515*]

18-2-1928-ல் சென்னை "ஹிந்து" (தினசரி) ஆங்கிலப் பத்திரிகை பின்வருமாறு அபிப்பிராயம் எழுதுகிறது.

ஞான வாசிட்டத்தின் நடுநாயகமாக உள்ள கதையின் மொழி பெயர்ப்பு இது. துவாபர யுகத்தில் மாளவதேசத்தை ஆண்டுவந்ததாகப் புராணங்களில் சொல்லப்படும் சிகித்வஜன் கதையைப் பற்றிச் சொல்லப்படுகிறது. புராணத்திலுள்ள இச் சரித்திரம் வேதாந்த தத்துவத்தின் பிரதான கொள்கைகளை நீதிகள் ரூபமாக விளக்குகிறது. சிகித்வஜ ராஜ குமாரனது மனைவியாகிய சூடாலை தன் கணவனது நிலையைக்கண்டு இரக்கம் அடைந்து, அவனுக்கு வேதாந்தத்தின் உண்மைகளைப் போதிக்கிறாள். சூடாலையின் உபதேசங்களெல்லாம் யோகம் குண்டலி சக்தி ஆதி வியாதி முதலிய பல சித்திகளைப் பற்றிய கொள்கைகளடங்கியதாக இருக்கின்றன. பிறகு சிகித்வஜன் வேதாந்த உபதேசங்களை அகஸ்தியருருவந் தாங்கிய தன் பத்தினியினிடம் நீதிக்கதைகள் ரூபமாகக் கற்கின்றான். இந்த நீதிக்கதைகளடங்கிய உண்மைகள் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இதன் வசனநடை எளிதாகவும் நன்றாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இது சம்ஸ்க்ருத உண்மைகளைத் தெளிவாகத் தமிழில் காட்டியிருக்கிறது; இந்நூலாசிரியர் படமும், அவருடைய குருநாதர் அழகிய புகைப்படமும், அவர்களுடைய சரித்திர வரலாற்றுச் சுருக்கமும் சேர்க்கப்பட்டுள்ளன. ஞானவாசிட்டத்தில் ஸ்ரீ ராமசந்திர பிரபுக்கு ஸ்ரீ வசிஷ்டர் உபதேசித்துள்ள வேதாந்த உண்மைகளை யறிய விரும்பி, சம்ஸ்க்ருதம் தெரியாத தமிழர்களுக்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமானது. இந் நூலாசிரியர் சீக்கிரத்தில் ஞானவாசிட்டத்திலுள்ள மற்ற கதைகள் ஈமா...

உ

[illegible] துணை.

திருவனந்தபுரம்,

# ஸ்ரீகண்டேசர்

# நான்மணிமாலை.

இது

[illegible],

வி. ர. பழனிக்குமாருப் பண்டாரம்

இயற்றியது.

[illegible] பாடசாலைத் தமிழ் முன்ஷி

ஸ்ரீ. குளத்தூரையரவர்களால்

[illegible] நாகர்கோவில்

ஜெ. சாமுவேலது

யூனியன் பிறசில்

அச்சடிக்கப்பட்டது.

௲௮௱௬௪ ரு

உ

தூரன்றுணை.

திருவனந்தபுரம்

ஸ்ரீகண்டேசர்

# நான்மணிமாலை.

---

## காப்பு.

நேரிசைவெண்பா.

நூலின் மொழியுன் னுரையு மனந்தைக்கட்
சேலின் மொழியுமைபாற் சீகண்டற்—கோலினெடு
நான்மணி மாலை நவிலக் கயமுகத்த
வான்மருப்பொன் றனைருண் மலர்.

---

## நூல்.

நேரிசைவெண்பா.

சொல்லிற்க ருங்கலனுச் சூழு மனந்தபுரச்
செல்லிற் கருணையிருஞ் சீகண்டா—புல்லுகிர்க்கட்
காலனுக்குத் தூக்குங் கருணை மலர்க்கால்வன்
காலனுக்குத் தூக்கிணையென் காண். (க)

## ஸ்ரீகண்டேசர்

கட்டளைக்கலித்துறை.

காணாத கண்ணை யுருட்டி மருட்டிக் கனல்பரப்பி
வீணாக வேம னாவுரு பாரறி வெருண்டொளிற்
பூணாக பாணிடச் சீகண்ட நாமப் புராந்தகனே
நாணாதென் செய்வருன் னற்புகழ்ப் பேசறு நாவினரே. (௨)

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாவலா ரூர னட்புறு சேர
னட்புனி னைங்களென் றென்று
மேவிய வனந்த சயனத்தாந் திருமால்
விட்டடா வருச்சனை யுவந்தல்
தாவறு கிளைவ யனபர்க்கெக் காணுந்
தகுமென வுலகுணர்ந் திடவே
சேவினை யுயர்த்துங் கொடியொடு நடத்துஞ்
செஞ்சடைச் சீகண்டே சுரனே. (௧)

நேரிசையாசிரியப்பா.

சுரநதி யொழுகிக் குரைமதி குளிப்பித்
தறுகுபொன் னிதழி யாத்தி வில்வந்
தழைத்தரும் பவிழ்க்குந் தண்மலர் வாசஞ்
செழித்திட வதனுட் செங்கட் பிண்ணைக்
கரவ மணைத்தங் ககங்களித் துறங்குஞ்

செஞ்சடை முக்கட் சிகண்டேசா
மஞ்சடை பன்னகன் கொஞ்சிய பாசா
வெகுமுடி செம்புலி ரெனைமேய யாயினு
மத்தழி யவ்வழி நானை நின்னருட்
டன்னின மாகவிற் றாமின மாமென்
றனைணுக நூல்வ ருளா மலையு
மென்றனை யறிவா வெவ்வுயிர்க் கேணுந்
தூன்புறு போலவுந் துயாவுறு சிந்தையோ
டன்புடன் கசிபவ ரருளாம யாறும்
பிறவிப் பிணிமை வெரீஇப் பேர்ப்ப
மறைவழி யறிவிலா மலர்த்தின ருளத்துட்
செறிதத் துவமாந் திருவளர் நாடு
மறிபவ ரறுதலந் தப்புறங் காணும்
பறவொளி யாமேயார் பண்புடை நகரு
மிருண்மலங் கழீஇய திருவுளத் தெளிவின
ராயத்துறுண் வாழியா லைந்திலக் கணமும்
வாய்ந்தருள் வாளுறு பாவா மாலையும்
வாசல்க ளொன்பதின் வழியொழு காவலைத்
தேசுறு முடனாட் டிரிதரும வாசி
சேமித் தறிவெழுந் திணையிய கோலாற்
றன்புடை நடத்துநர் தணிமனப் பரியும்
பதுமக் கோயிலான் படைத்திடு படைப்பும்

விதித்திடும் விதியும் வினையு மாயையு
மவந்தந்து நித்தியத் துவந்தரு ஞானத்
தவஞ்செய் பவர்பாற் றயிரிய முளத்தின்
விளைந்திட வெழுந்திடும் வீரமாங் களிறு
முலகுபுறந் தோன்று தினகுபொருள் யா
முள்ளத் தறிபவ ரொக்கவுட் கேட்பத்
தெள்ளிதிற் றெளிக்குமுன் னொலியாம் பறையுங்
குடிலையு முலகையுஞ் சூழ்த்தா னெல்லாச்
சடைமுடி கவிழ்ந்து நடைநெறி புரந்து
கள்ள மிலாவுள் வெண்மைய வென்ன
வொள்ளிய நீறுந் தூவனங் கொடுநன்
னீர்மைய னனைக்கை நிர்க்கர கங்கொண்
டெங்கிக மூவலைக் குரியவர் முரிகலை
கொண்டொரு கைக்கொளுந் தண்டமாங் கொடியு
மொன்றே தெய்வமென் றுள்ளத் தோர்ந்தோ
ரென்றுமு றுதிச்சொல் லியப்பலா மணியு
மென்றும் பிரியா விறைவன் சேரன்
கோதையா ரேங்குங் குளிர்மலை நாடு
மாதவர் பணியு மனந்தைய நகரும்
வேதமாம் பரியும் போதமாங் கரியு
நாதமாம் பறையுங் கோதிலான் கொடியுங்
கடுக்கையந் தாருங் காத்திடு கருணையு

முடையவ னாகி யுறுநர்தம் பவநோய்
வேரொடுங் களைந்து விமலமா முத்தி
யளித்திட வென்றே யமர்ந்தன னுலகீர்
வம்மின் வம்மின் வழிபட வம்மினென்
றிம்மெனக் கூவி யெவரையு மழைத்தே
யன்பொடு கூடி யாடிப் பாடி
யின்புற வேத்தி யிருக்கொடு போற்றி
யங்கமண் ணுறநட்டி யழுது புரண்டு
செங்கைகள் கூப்பிச் சிரமேற் கொண்டு
துதித்துத் தொண்டர்கள் சூழ்ந்திடக் கண்டும்
விதிர்ந்துடல் பனித்து விம்மிட வல்லா
லெம்முறை வணங்குவான் செம்முறை நீபெற்
கருணையி னலையரு ளாழியினின்
னருளலா தடைபவ ரவனியி லெவரே. (௪)

நேரிசைவெண்பா.

எவர்பொருட்டிங் கிங்கா ளிறைஞ்சுவர்முன் போற்றி
யவரியார்க்கு வென்றெழுந்தாய் நீயெம்—மவர்காணக்
காரணமா நாமங் கதித்தனந்தை மேவுமெழிற்
பூரணசீ கண்டா புகல். (௫)

கட்டளைக்கலித்துறை.

புகல வினிக்கு மெனக்குப் புகலிடப் பூங்கழலா
னகல வினிக்குடம்பிக் குள்ளுற தீர்த்தவ னங்கணினு

ளிசகல வினிக்குவி ளாற்செற்ற சீகண்ட வெம்பெருமான்
சகல வினைக்கும் விடையளித் தோட்டுவன் றாழ்ந்தவர்க்கே (௬)

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாலமுகில் சைவலநெய் தாழுமலர்க் குழல்வான்
சாபநுதன் மீனிணைமை யாதவிழி யாரிச்
சீலமிகு நாட்டரிவை யாரெனவு ரைத்துஞ்
சீர்ப்பெயர ரம்பையள மார்திருவ னந்தைப்
பாலவனல் பானுமதி முத்தளவில் வைத்தின்
பாசிலைவி லைத்தவிழி தண்டுறசீ கண்டர்
காலணையு தைத்தமலர்க் கான்முடிமு டிப்பார்
காகமிவர் கோனிடர்க ழிந்தகதி யோரே. (௭)

### நேரிசையாசிரியப்பா.

கதிரோன் பதியோன் காமர்க் கோயில்
விதியோன் கரியோன் விண்ணவ ருரகர்
மகவா ஞதித் திசையோ ரெவரு
மெழுகலி யொருமண் ணைழீஇ யுர்றுங்
குழுவலி னொலியோ டேற்றச்| சூழ
லக்கடல் பழன மசலங் காடு
புக்கி யளித்தெனப் பொருள்பல நிறையப்

பகைகொடு சிறுவிதி படுகுழி தொட்டு
வகைபட விந்தனம் வரையி னடுக்கிப்
புகையெழீஇ வானம் பொரவெரி பொத்தி
யனைமலை யண்ட முகடுற வானெய்
யருவி பெய்தங் கரிமலர் தூய்ப்பல்
பொருளொடு வளர்த்த புரைமக மன்றம்
வானை முறு வரைந்து மண்ணி
றுறை நிரையு நடந்த வென்னத்
தீயிற் குருதிச் செம்புன லோடத்
தாளிற் றொகையிற் றுண்டவ மிதியிற்
றோளிற் றாயமற் றடவாடி தொலைய
வளாயுன மகக மழுதெற நின்ற
குண்டம மொடு மெல்லிசை கூட
வெரிந்து சிதறு கரிபல திசையுந
திரிந்து பல்லவர்கள் டெரியுற மருள
வாளிற் கணையில வேலிற் பட்ட
பிணமலை யேறிப் பேய்பல வாடிப்
பிச்சு முரித்தா பிரமை யுப்பீர்த்
துச்சுவை தேறிக் கைப்பப் பருகிக்
குருதிக் கடலிற் குளித்தனல் போர்த்து
நிணநெய் நீவி நீள்குடர் மாலை
துணையோ டணிந்து கள்ளிற் றிரிவ

வளசுவை சிலைப யுறவர்க் குதவ
விளமக வக்குச் சிலைபோய் தலையு
னளைஇய வுகிரா லொளிக விடந்து
மூளையு நிணமும் வெள்ளையி னாட்ட
நாடி யெய்பாய் காடயர் செவிக்
கோடிச் சிலைபே யுதவு வென்று
தேடிச் சுவையின் றேர்ந்தட் டாக்கி
யூட்டச் சிலைநெட் டாக்கோட் டலைக
செவ்வுண வீந்த திறமது தேறித்
தெவ்வர்த் தெவ்வாந் தெய்வத் தலைவற்
போற்றிப் பூசை புரிந்து பாடி
நாற்றிசை தலைகை நாட்டித் தொழுது
துணங்கை கொட்டித் துள்ளிப் பரவச்
சிந்திய தலைசட் சிலைபெய் சென்று
தந்தலை கொலெனச் சார்ந்து நோக்கி
யத்தலை சீற வதுக்க நகைக்கப்
பித்துட னழுஉவப் பெயரீஇ நகைப்பக்
கழிகால் கள்கை கணரம் பென்பை
யிழிவாய் முதுபேய்க் குழுவுகள் வாரி
வாட்டி யுணக்கி வற்றற் போட்டு
நேட்ட மிதென்று பூட்டிக் காக்க
நெய்தன் முழக்கு நீளெரி யொலியும்

பொய்தன் மாறாப் பூசற் றாடியு
முய்வன வோரா வூபெரி யலறுந்
தொய்யின் றுங்குஞ் சூர்ப்பேய் விளியுஞ்
செத்திடத் தெரிக்குந் தீவாய்க் கூகைச்
சாவோர்க் கூவுந் தாழ்கண் ணாந்தை
புறவுகள் முதலைப் புலைபு புலப்புங்
கழிந்த பிணங்கட் கௌவி யீர்த்திர்த்
திரிந்த நாய்க ளிளித்திடு முருமுஞ்
குருதிடை யுள்ளக் கோதுடை யோரிக
ளூறிய வெண்புண் டொலிக்கு மொலியுந்
திசைக்கடல் புக்குச் செவிடு படுப்பக்
கழுது பருந்து காக மாதி
யெழீஇ யிரைந்து சிறைகள் விரீஇ
யந்தர மூடி பந்தர்செய் மன்றிற்
பயப்பந் சுரத்துப் பரிசழி பண்ணி
னெழுந்து சிலம்ப யிசைந்து சேர
முடிகளை முடிங் தடவறுப் புண்ட
வாண்டலைப் பந்திக ளிண்டு ஞான்ற
விலங்கைதப் பொதுவிற் பலபேய் கூடப்
பிரிந்த துணியு முரிந்த தோலு
மறந்த நாலுங் கரிந்த மயிரு
மெறிந்த மலருஞ் சரிந்த குடரு

முடைந்த குடமு முயிர்த்தட் டுலையும்
விரவித் தூக்கும் விதான மோலு
டுணங்கு நெற்றி ணுலியுறு நெடிய
வாகை மன்றின் வல்வாய்ப் பேய்க
ளோகை யோடு முழங்கள் பேச
வழிந்த கள்ளி பிளந்த கவையுட்
பரிந்து தேய்ந்து பரந்து சேந்து
பிரிந்த தலையுட் டிரிந்த நரிகட்
பிணவுப் பேய்கள் குலாங்கி யாடக்
குராவ போழ்ந்த குளிராம் புவு
மராவ மருங்கு மகவுக் குட்டி
தான்றி யொடுவை தாதுகள் மன்னி
கான்றை குரை கவிழி ஞாழிஞ்சி
லின்றங் குருந்து மிருப்பை யாதி
மன்றம் பலவினு மொன்றுபல் பேய்கள்
குறை யாடருஞ் குலைநிறை கோட்டலும்
பரல்கள் பழுத்த னெல்லொன் முரம்பு
மெரிதெற நின்ற கரியுறு மிடறுங்
கோரற் கொடியுங் குறைத் தேரு
மாறலைப் பனவு மூரெரித் திடனு
முழுது மாறு முதுகா டாகத்
திசைமுழு தொளிர்ந்து செந்தீக் கதவும்

குழைசென விரிந்த சுஞ்சியு நுதலின்
விழித்திடு னெவையு மெரித்திடு மொளியுந்
திரைக்கடற் றிசையெண் கரியையு முரிக்கு
மரியுரிக் கஞ்சுக பணிந்தொளிர் மார்பு
முலைக மோரடிக் சொப்பறு பகழு
பலைபல திரண்ட திசைகடந் தலக்கு
மாயிரும் படைகொளீ ராயிரங் கரமுந்
தீவகை மூன்றுஞ் செனித்திலை விழியுங்
கொண்டுதன் சினமது வந்த தென்ன
மண்டொலி பரப்பும் வடிவி னவனைத்
தந்த ரேர்விழித் தழலவ னோடு
வந்த தென்ன மாணடி முடியா
தூண்டெழு புரையு முடிவிடக் குரளுமா
மண்டல மதிர விண்டல முதிர
வண்டம் வெடிபட வார வாரித்துப்
பம்பை பன்முரசு கொம்பு வளையுறுமி
திமிலை முதல்வாரி செவிபட வார்க்கும்
படைகளொடு மேவுதன் பணிகொளுஞ் வீரனு
னடைய வழிப்பித் தப்பகை முடித்தமை
புன்மையென் றன்னா ருளமெனக் கலங்க
வெனக்கிடர் கருணையுள் ளில்லா ரியற்றிய
துன்பொழித் தின்பத் தன்பதத் தன்பு

பூட்டிய நதிமதி புயங்கமா ரறுகுத்
தார்க்கொன்றை சூடிச் சண்டனை யுதைத்து
120. மார்க்கண்டற் காத்த சீகண் டேசா
விடத்துமை வியர்க்கத் தடக்கையா னுரி
முகமது கோளரிய முறைக்கு
நகுவதென் றெளிர்தல்போ னகைமழு வலத்தே. (௮)

நேரிசைவெண்பா.

வலக்கண் டிருமலரோன் வாய முளைமால்
கலக்க வுடல்பகுத்தாய்க் கண்டு—மலர்க்குழன்மா
னுற்றேன்மா லென்றழிநு ரோதலனந் தாபுரியி
னெற்றேசி கண்டேசா வென். (௯)

மணமுரசுகூறல்.

கட்டளைக்கலித்துறை.

என்மனத் தன்பளித் தின்ன லொழித்து மெழிலனங்கைச்
சொன்மனத் தன்பதி கப்பொருட் சீகண்டன் றென்மலைநந்
தன்மனத் தன்பொன் பலிகொண் டின்னே மணஞ்சார்ந்திடும்
கன்மனத் தந்தயர் கொள்ள முரசங் கறைகின்றதே. [பொற்

மகிழ்ந்துரைத்தல்.

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரையுண்டு முடைவிசு கூரெயிற் றரிவாய்
கலங்கப் பிளந்திட் டவெண்

பிறைகொண்ட சடையா ரனந்தைத் திருக்கண்டர்
பீடார் பகைத்தா ரிறை
நறைமண்டி யிரும்பிண்டி நறைசோக மிலையென்ற
நாமத் தொழிக்காத் தலா
மறைகொண்ட படையென் றெடான் மகிழ்மாத ருங்கற்பின்
மகிமைத் தயந்தந் தபீத. (கக)

## நேரிசையாசிரியப்பா.

தந்தகல் வினைவழி வந்ததென வுணரா
தந்தனத் தவர்பா லெவ்வியங் கொள்ளும்
வறிய ருளமென வரியதுயர் மன்ன
வரர்முத லெவர்க்குந் துயர்தரு முண்ட
விருண்மனத் தவுணர் புரமிகல் குறித்து
முடப்பத னடத்து மடற்பசும் பரியேழ்
பூட்டொரு காற்றேர்ப் புங்கவ னுடுபதி
கால்கழுற் கோட்டு மால்களிற் றுக்கோன்
றட்டுத் தேவர்ப் பொற்றே ரிவுளி
நான்மறை பாகு தாமரைக் கிழவோன்
மால்வரை சாபம் வாசுகி நாரி
யடற்கணை கதையுறு கடற்றுயில் பவன்மற்
றடியர்கள் காலா ளாகக் கொண்டு

வெம்புலி யுரியரை வீக்கிமே முத்ததம்
போர்த்ததுவி பக்கமு ளார்த்திட வணிந்து
குடபதி யவிர்செஞ் சடைவரி கொண்டை
தொடைநிறை தூபடை யடல்குறித் தணிந்து
புண்டரம் பிறையெனத் துன்றிய நுதலிற்
கொண்டெரி விழியொடு பண்டியயிட் டிருந்து
செயஞ்செய மெனப்பல் லியங்கட லைப்ப
வார்த்தபன் விண்டிசை யதிரச் சென்று
போர்முகம் புகுந்துய போரினைக் குறித்துத்
தெவ்வர்மேற் றண்படை தன்படை விடாது
கோபமொடு சாபங் காதுபொர வாங்கி
நாரியடு சகோத கைநெக்க நடாது
வாள்வலந் தோலிடம் வாங்கி விதிர்த்து
வைபிட புன்பின் விலகலொடு கொண்ட
தோமேனி இடனெஞ் சுருங்கலொடு நின்று
பல்பல வீரம் பகர்ந்து மொழிதொடு
பகைதலி மொது பற்கட் டாது
தன்புடை யுள்ளார் தகுநற வென்று
சிங்கையிற் கொண்ட செருக்கற வுண்ணி
வலைக்குங் கல்வில் வட்ட மாகக்
குழையுங்கிரு சோடும் பொருந்தக் கண்டிட்
களிப்புக் காட்டுங் குறிப்பும் போலவ

புன்னகை செய்து புரமெரி யூட்டி
முன்னல் விடாதார் மூவரை யன்றித்
தன்னினை வற்ற தானவர்ச் செற்றுப்
பகைதவிர்த் தெவர்க்கும் பயமொழித் திடுநின்
றகைமையுள் ளுன்னித் தவித்துரு குவர்க்கெவ்
வகைவழி யெனினும் வருபகை யொழித்தின்
னருளது புரியுங் கருணையங் கடலே
மாண்ட வனத்துயர் மாற்றி யெனை
யாண்ட வனந்தைச் சீகண் டேசா
நின்சடை யமரு நஞ்சடை யரவந்
தனதுயிர் மறுக நிழறரு மரபார்
கண்ணான தருள்சேர் திண்ணிய கலுழனை
யசமது நாணச் சுகமோ வென்னுந்
திறல்பெரி யோரைச் சேர்ந்திடுஞ்
செயலென நின்புகழ் தெரிகின் றதுவே. (கஉ)

## நேரிசைவெண்பா.

தெரிந்துரைப்பார் றூக்கிற் கருளுதவிற் றேரேன்
பரிந்துரைபா விற்கருடல் பாங்காம்—விரிந்தசடைத்
தேவா மனந்தபுரச் சீகண்டா சீர்சிறியர்
மூவா மழலை மொழி. (கங)

## வழிபாடுகூறல்.

### கட்டளைக் கலித்துறை.

மொழியி னமுதவெம் பொன்னுட் டனதாண் முகப்பளிங்கின்
வழியி னுணர்ந்தருஞ் செயலோர்ந்துஞ் சொல்வழி மன்னிநிற்
விழியின் பணிதருஞ் சீகண்டன் றண்புகழ்மேவனந்தைக் [பான்
கிழியி னிகர்நங் குறும்பொறை நாடன் கிருபையனே.

### எழுநெடிலடியாசிரியவிருத்தம்.

கிரியைநெறி முன்பினொடு மறியாது ஞானங்
கிடைத்தோரின் மேலோர் கடங்
கேள்விகள்பெ றாதவர்கள் கேண்மைபெறு நன்னடைகள்
கிடையா துணர்ந்தோ ரென
விரிபுவன நிறையண்ட முழுமையும ளப்பனால்
விதிவழியெ னப்பேசிடும்
வீணர்களில் வலியனா மெனையுமொரு பொருளென்று
மெய்யடியர் கொள்வார் கொலோ
பரிவினுவர் மண்கொண்டு மழையினின னைந்தவுடல்
பானுவெயி லானு லர்ந்த
பண்பினொடு மெதிர்வருமொர் காழியனை நீறுபுனை
பத்தனென் றேத்திட் டவெங்

கருதரிய சேரன்மான் பெருமான்ற னாட்டினிற்
காட்சிமிக் கோங்கிப் பொலி
களிறுபிடி கன்றினொடு திரிதரும னந்தநகர்
காக்கின்ற சீகண் டனே. (௧௫)

## வாழ்க்கைநலங்கூறல்.

### நேரிசையாசிரியப்பா.

சீருந் திருவுஞ் செல்வமு மாகக்
கண்டிகை நீறு கற்றுய் கலைநீர்க்
குண்டிகை தண்டைஞ் சக்கரங் குளிர்தார்
கவசங் கச்சை தோல்வாள் காலா
ணிரணிறை யாக நீங்காத் துணைகொடு
தீய மாயைப் பேய்ப்போ ரடு
ஞானிகள் கண்டுண் மோன பாசப்
பாம்பின புலியின பதத்தினர் களிக்கத்
தசைகழி யுடலந் தாங்கும் வீரப்
பிருங்கி யொருகோன் மருங்கி னூன்றிப்
பெயர்த்திடு பாதப் பெற்றியை யேய்ப்ப
வலமிட மாகத் தலைதளர்த் தாட
வேத்திரப் படையெம் விடைமுக வண்ணல்
சாத்திர மோதித் தாளம் போட
வுலகினை யொருங்கி னுதவிய வுந்தி
மலைமக ளுள்ள மகிழப் பொதுவி

ளாடக மாடு மாடகச் சிலையின்
மாகண் டத்துச் சீகண் டேச
னருளிணை பெறுநய பொருபா மகளு
மப்பா ஞவி யாசு மனைநதை
யொப்புறா கருணை யுடையவ ளாகம்
முடிக்க வொழிந்துக் கடப்பும் பிடவுங்
கடிக்கையுங் கோடலுங் களவு மலரக்
கைமுமா வடமுங் குமரியர் முலையு
பேலி வெபமைய பொதுப்ப விப்பி
ருஞிற மதவா னேறு செறப்ப
வானம் பாடி வானீ ரேந்தக்
கான்மயி லாட வான்குயி லோலப்
பண்கொண் முல்லை யரிந்தளி பாடக்
கண்கள் காணக் காயா மலர
வமுதச் செவ்வாய் முருந்த மவிழ
நவிவெண் ணைகயட் டளவு வெடிப்பக்
கனிவாயப பெய்கை காந்தள் விரிய
முலைகட் டெரிய வனச முகிழ்ப்பக்
கதிரை மயக்குங் கரும்பட் டார்த்துப்
பதசெம் டஞ்சு கோபம் பூசி
யுத்தர மாவா யுமையொடு கலந்தும்
பூக்க மபுத முதிர வீசிப்

பாரிட மூறல் பாறி டாமற்
காரெனு மாது பாரி யாரி
மான்கான் மேப்பார் மேய்ந்தழ விசையுங்
கான்யா றுறிங் கவியு மாய்ச்சியர்
நேத்திர மாகக் கோத்திர வங்கட்
கலைகட் டரவமுங் கடாவிடி மார்ப்புந்
துளைற் போற்றிச் சூழவர் சூரு
மேறுகோட் பறையுஞ் சீழுர சொலியும்
பெருகுங் கொல்லைத் திருநில மகனு
மொருவருள் னொருவ ருபாபணி புரிவா
ருள்ளா ரிவரி னல்லா ரானம்
யில்லாழ் விவர்வாழ் விதர விதர
மல்லெது வேறிங் கறியேன்
சொல்லி னகைமுகைத் துகிர்மென் கொடியே. (கசு)

## காதல்கட்டுரைத்தல்.

### நேரிசைவெண்பா.

கொடியிடைபாற் பாதங் கூசாது மாறி
கடவமுற்ற நாத னனந்தைப்—படியனையான்
காதலினம் பொன்னுகப்புக் கன்றுமென வோதிமல
ரேதுமணி யானைசொல் லென். (கஎ)

### கட்டளைக்கலித்துறை.

என்னைத் தனத்தணி காதி னிசையமு தென்றுமுன்னா
யென்னத் தனத்த குழையா விரண்டுவிச் சாதரரை *
மன்னத் தனத்ததி முறைகொள்சீ கண்டனை வாழ்த்தினரே
வன்னத் தனத்தமை நோக்கிமை யார்தொழு வாழுவரே. (கஅ)

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாழ்த்திட வாயும் பார்த்திட விழியும்
வணங்கிடத் தலையுளங் கருதச்
சூழ்த்திடக் காலு மேத்திடக் கரமுந்
துணையுட னிருந்துமிவ் வுடலம்
வீழ்த்திட மறலி வருமுன மனநதை
விமலசீ கண்டனைத் தொழுநாட்
டாழ்த்திட லுடையா ரிருதியி னிடரைத்
தப்பிடா ரென்பிறந் தனரே. (க௯)

### நேரிசையாசிரியப்பா.

பிரசுர ரொருவிழி மறைந்தது தெரிந்தரு
சுரர்பதி யுடல்பழி விழியுற லறிந்தும்
பிரகற் பதிதன் னிறைகற் பினைளுங்

---

* இருவரொன்றது அசுவதரகம்பளரை.

கரவுச் செயலுட் கண்டது கண்டும்
மிரப்பார்க் கிடாம விடுவார்த் தடுத்தலு
முளம்வெரு வாது பிறர்மனை விரும்பலுங்
களவுறு முன்னக் கருத்தொடு காட்டுஞ்
சாகசத் துள்ளாய்த் தன்மை லாறுப்
பாசந் தினனெனப் பகர்ந்து மனைவியை
யார்ந்துள் ளன்பொடு தேர்ந்துளங் களித்தலு
மாறு தவர்பான் மன்னிடு மடமையு
மோராது பாழ்வினை யூட்டிடு மயலுங்
கதிர்முன் னிருளாக் கலையத் தக்க
மதிர்வுறு மறிவுண் மொய்த்து முளைக்கக்
தம்பிக்கொடி கமுகின் கழுத்தொடு பம்பியங்
கெழீஇச்சில தெங்கிற் செறீஇச்சில விண்போந்
தைந்தரு வளைந்ததன் றண்டரு மலர்கள்
பந்தியிற் றாழ்ச்சில பைங்கொடி பற்றி
யாடுவர் பாடி யாடுந் தோறும்
பேடொடு சுருப்பு பிரியா துதிர்ந்து
நறுமணங் கான்று நாற்றிசை கமழு
மணந்தைய நகரி னனல்விழி சேப்பச்
சினங்கொளும் புலியதட் சீகண் டேசா
தாட்கம லத்தரு டந்திங்
காட்கொளென் றடைந்தன னடைக்கல முனக்கே. (௨௦)

நேரிசைவெண்பா.

உன்னடியா னைப்பிழையீ தொற்றிநின்பின் முன்னிற்கத்
தன்னடியா னென்னவருஞ் சாக்குற்று—வென்னடிகாண்
பின்னடையார்கன் றுட்டனைக்காத பெயியர்சீ கண்டவென்
பண்டையில் முற்றுமறப் பார் (உக)

கற்பரிவித்தல்

கட்டளைக்கலித்துறை.

பாரி னிகரிற்சற் பன்று மனைத்துப் பானிறமிக்
காரி னிகழ்சி யளியுஞ்சீ கண்ட னருளையான்
போரி னிகலசிறு புசர வடிக்கின்போன் னின்பொருட்டோ
சேரி னினைத்திரு வைப்பொன் பெருமையாச் சென்றடைந்தே ( )

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இடங்கொண்ட விழியுமையு ளிடங்கொண்ட
விசயசீ கண்டன் றன்னைத்
தடங்கொண்ட பதிலைநகைத் தடங்கொண்ட
துறைத்தளிமே தடயாக் கொண்டு
குடங்கொண்ட வெண்டெறுமுன் குடங்கொண்டாட்
டுழுன்மலமோ டென்கண் டேத்திற்
படங்கொண்ட புவியிடர்தீர் தளத்துன்னு
மனைவியனையும் பாலிப் பானே. (உ௩)

## நேரிசையாசிரியப்பா.

பால்கனிந் தொழுகிப் பனிக்கென வொளிரக்
கால்சினை யமையா நூலிடை நுழையாச
சுரும்புகள் குடையா வரும்புக வவிழ்மல
புரமுன் னகவொட் குருஉப் பொற்கைக்
குடக்கனி செழித்த கடத்தனி நிறைக்கு
மடையெடுத் தோட வெடுத்திடு பலவிற்
செறிமடற் கமுகை விரித்தலை மலர்ப்பைங்
குரும்பையின் பாளை நறுந்தெங் கேழ்
வாய்திறந் தருநதக் காய்கறித் திடவண
ணீரு சோல னோர்நிலை தெண்டி
தோன்றுங் கண்டு துளக்கை பிடித்தட்
பதைப்பொடு குதித்துப் பார்க்குந் தேனும்
பற்பல வாவப் பனிக்கொட் டருந்தா
குருவம பவித முறுபிடத் தம்பேற்
பொரவந் தனபல பூத மென்றன்
னலமரு மகதிக லரிமதரி யாமற்
பலமரம் பயுப் பைம்பொழில் பலவா
வயப்பு மனக்கை வா[illegible] மழவிடைக்
[illegible] மதிகதிக்
[illegible]

தந்தைதா யன்பு சற்றமி லாது
பந்துச கோதரர் பச்சமு றாது
நொந்தோ ரான்றோர் நூலோர் மேலோர்
சிந்தையன் பூறச் செயல்புரி யாது
தொண்டர் பதங்கட் டொழவறி யாது
மண்டிய நின்புகழ் வாய்வழுத் தாது
பெண்டு பிள்ளைக ளென்றிழி பேய்கொண்
டலைக மனைபொன் னணிதுணி நாடி
வெட்கமி லாமற் பக்கம் பலவா
வல்லும் பகலு மழுதழு தலையும்
புல்லறி வுடைய புலையே னெனினு
மில்லாண் டோரு மீன்றதை யுண்ணிட
பொல்லா னாயினு நல்லா னாக
வருளே புரிவா ரவனி யெவைக்குங்
கருணா லயமெய்க் கற்புறு தாயுந்
தந்தையுங் குருவுந் தமரு நீயே
யவனியவ் வுயிருளொன் றாகு நானே
யென்றனக் கருடரற் குன்றனை யன்றிக்
கதிவே றறியேன் கடையே னாதலிற்
புன்றொழின் முழுவதும் போக்கி யெனைநின்
றன்பணி யோடு சரணார்தம் பணியும்

பொய்யிலன் பொடுசெயப் புரிவித்
தையருட் படுத்தலுன் னாருட் கழலே. (உ௪)

## வினாவுத்தரம்.

### நேரிசைவெண்பா.

அழகென களமென்போ லார்குழையென் முன்னா
மொழிய வெழுத்தின் முதலை—தொழியச்
சிரித்தெரித்த தென்னிச்சீர்ச் சீகண்டற் கூரென்
னருட்டிருவ னந்தபுர யாம். (உ௫)

## கற்புப்பயப்புரைத்தல்.

### கட்டளைக்கலித்துறை.

ஆமா னினையு முருக்குமின் வேய்ங்குழ லானனந்தைத்
தாமா னினைக்கொள் பிரானேர்பொன் கற்பந்தி தன்கடைவாய்ச்
சீயா னினைச்சிந் துரத்தோடுஞ் சென்ற திசைவிடுத்து
மாமா னினைய வுநோணச் சேர்க்குமென் மாணனையே. (உ௬)

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

யானோக்கி மகிழ்வெய்து மறைபோற்றிக் கழலோனு
மலர்த்தா ணட்டங்

தாமேனுக்கி யல்லாது தரியாத சேரர்பிரான்
றன்னூர் நாட்டின்
வாமேனுக்கி மனமுவப்ப மணிமாட மலியணங்கை
மணிகண் டாவுன்
ஞமேனுக்கி நலிபெய்து நாளுஞ்சேடா நானிலத்தங்
கடனந் தாமே. (௨௭)

## நேரிசையாசிரியப்பா.

நடலைச் செறிவா னன்மலர் விரியு
முடலக் சுழியி னிலைமுயி ரிறைவை
விரிந்த மனமாம் பரந்த மனையிற்
குறும்பு செறிந்த சொகிவிலை யொன்னுங்
கூர்முள் ளரவா யாரிரு டூயிலை
வாளிலை யடர்ந்த நின்முடங் கைதையிற்
காலக் குருகு காலங் கருதிக
கண்ணிமை யாது காக்கப் பட்ட
பெற்றிய பிறவிப் பெருவாய் யென்று
நற்றவ முயல்வார் முறைநு ழைந்த
காலத் தென்றுந் தவா நாக
வேலிபி [illegible]
டாலமு [illegible]

தமரு மசுரரு மாவலின் றிழுத்தக்
கடைய வடவை கடைபெழுந் தாங்கு
கனன்றெழு நஞ்சை யருந்திக் காகா
வெனநின் றனனை யெவரும் போற்றி
யுயிர்தரி யாம லோலமிட் டலற
வன்னவ ராவி யகன்றுடன் மண்ணுப்
போகா வண்ணம் புத்தமு தாக
வருந்தினை யதனினும் பெரிதிலை கொடிய
வெனதகத் துயர்தீர்த் தனைதருட் கழங்க
ளருமொன் றன்னையிங் கிரந்திடு மென்சொல்
லென்பொடு மழலைக் ககமிற் வல்லாற்
புன்மொழி யென்று போக்கா ரன்றிப்
பாலின்க ணைப்போற் பரந்தெங்கு நிற்குமே
நூலின்க ணீச னுறைந்தெனு மொழிபோற்
றென்சொல் லெச்சொல் லெனினு முண்ணின்
றின்சொல் லாக வேற்றெனை யுன்னத்
துன்மொழித் தின்பந் தன்பதி யதனி
லாதரித் தருளுதி யனைத்தையிற்
சோதியப் பரசுரை தூக்கிநிற் பவனே. (உஅ)

நேரிசைவெண்பா.

தூக்கியதேன் றொண்டர் தொழுதடைதற் சோதென்கோ
னோக்கிமே றென் றவ்வென் றுண் ணோதற்கோ-நோக்கிமையா

மாகத்தார் போற்றமலி மாடவனக் தைப்பரமா
பாகத்தார் போற்றம் பதம். (உசு)

கட்டளைக் கலித்துறை.

பதமே விரும்புண் ணியர்போற் றனந்தையம் பால்விடையோன்
பதமே விரும்புண்ணப் பாய்ந்தாங்குசொற்பகர்வார்க்கரிதாய்ப்
பதமே விரும்புண் ணுருதின் பொருளினிற் பற்றிநிற்பீர்
பதமே விரும்புண் ணெறியார் பெறும்பயன் பற்றுளத்தே. (கூ0)

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உளமொன்று மவநினைவு லோகரையு மறப்பினெம்
தொருவனுணர் வானென் றுளத்
தோராதொ ளித்துமுக மினுண்மை போன்மொழிவ
ருறவாடி னும்மவர் கள்சொற்
களவென்று கருதாம லுளதென்று நெஞ்சிற்
களித்தன்பு பாராட் டிடக்
கற்றவர்கள் கூட்டத்தி னுற்றிடவ மைத்துநல்
கழற்கன்பெ னக்கருள் வைமே
யளவொன்றெ னக்கொண்டி ளங்குஞ்செ ழுங்கொஞ்ச
பங்கிஞ்சு கச்சொற் களு
மரியயாழ் வீணைமாதர் பயில்கின்ற விசைகளு
மரம்பையர ளந்து ழல்பவே

வளமிஞ்சு தண்டலைசண் மணிமந்தி ரங்கள்பல
வாய்ந்துபொன் னகரென் னவான்
வளர்திரு வனந்தபுர நகரினிலு றைந்துயிருள்
வாழ்கின்ற சீகண் டனே. (௩௧)

## நேரிசையாசிரியப்பா.

கண்டாங் கின்சொற் காவிச் சேற்கட்
செண்டாங் கொங்கைச் சேணிமை யாரோ
டின்புறு மகவான் றன்பதி விட்டுள்
ளூட்கி யொளித்துப் பக்க மொதுங்க
வக்கினி தேவ னணிமணி மாடம்
புக்கிற் றீபம் போற்றத் தென்கோ
னுயிர்தங் கிளைகட் கவரில வென்றங்
கயர்வி னிரங்கி யடியிணை பணியத்
தெய்வ நிலைமைச் செயல்கொ ளரக்கன்
றயவு வேண்டித் தண்டிகை தாங்க
வருணக் கடவுள் வாச றெளிக்க
வாயு குப்பை வாரித் தூர்ப்ப
வளக னடப்பை யஞ்சி யெடுக்கத்
தன்னூற் றுவிங் கிந்நா ளின்றென்
றின்னு வுள்ளோ டெட்டான் றிக்கோ
னெதிர்நா ணேக்கி யிமிழ்நீ றுதய

கானவர் பச்ச பாமிசம் வாரக்
கான முனிவர் கட்டூட னோம்பக்
திசைமுக னைந் தினமுற வோதிப்
பிசுகுக டேறிப் பிறைகாண் பான்கொல்
லென்றா னோற நோக்குங் காறு
நின்றுயிர் நீங்கி நிலைபெற் றயர
வுலகுயிர் முழுது நலமுற வொண்ணிக்
கலிதீர்த் தன்பிற் காக்குங் கருணைக்
கருப்பொற் றாளைக் காட்டலி மருவி
கருப்புக் கொழுந்து சுடரா ழிக்கைக்
கமலக் கண்ணன் கால்கள் கசிக்க
வருந்த நின்றங் கச்சனை யேந்தப்
பாணர் புகழ்ந்து பல்லாண் டோதக்
கின்னரர் நின்று கீதம் பாட
விஞ்சையர் கூடி வீணை மிழற்ற
வானவர் மாதர் நாடக மாட
நாமகள் யாழொலி நவின்று பாடப்
பூமகள் பளிக்கற் பூரந் தீப
போற்றி யால மெடுத்து விளிப்ப
வித்தகை யவரோ டேனை யோருஞ்
சிறுவிதி முன்னர்ச் செய்மக மதனிற்
பெறுமவிக் கிசைந்த பிழைமொழி நேர்ந்து

சாப நினைந்து தாவி யினைந்துள்
ளாவி பறைந்தங் கடிமலர் தூவப்
பலமலை கூடப் பட்டாங் குன்றும
புபவலி யுடைய கடமுக னினைய
கருமுகி லாருங் கரிகட் சீறு
பரிமுக வசுர னென்ப வீரச்
சோதரா கங்கனை ஆண்டிட்ட தப்பேர்ப்
பானு கோப னாதிய பாலர்
வழிவழி வந்தார் வாரியின் வளைய
மதியர் வாழ்ந்தத் தந்திரர் போற்ற
விரண்டைஞ் ஞூறுமே டெட்டுறு மண்ட
மொருதுடை நிழலிற் றனியர சாளு
மாயா நாளு வான்பல படையு
மீசா னாதி யோகொண் முகங்க
ளேந்தி னுறு மழியா வரமு
மாயுளு நூற்றெட டாகிய யுகமும்
பேருடல் வலியும் பெற்றிடு மாயச்
சூரனை யஞ்சுஞ் சுரரை விடுப்பச
சிந்தை நினைந்தவை செயலின் றாது
மழலை மொழிக்கெம் மலையுங் கனியும்
பழகப் பயிலும படைநுதி நுனியால்
விரியுல கெனையும் வேவச் செய்யு

மருண்மிகு குழவித் திறமுறு செயல்கொள்
வித்தக நூல்வல் வீர வாகு
தேவற் றூது செலுத்தி வினவி
நீதியு ஞான நெறியுங் கூறி
யொவ்வா வதனா லுக்கிர மோடு
பூத கணங்கட் பொருந்த நோக்கி
யாதர முடனே யணிபடை செய்து
கடலது கடந்து கடிநகர் புகுந்து
கூக்குர லிட்டுக் கூவிப் பொருது
வலிமிகை நோக்கி வடிவேல் போக்கி
வரல்கண் டஞ்சி மண்ணாய் மலையாய்
மழையாய் மாவாய் மீனாய் மற்றும்
பற்பல வடிவு படைத்தும் விடாது
பாய்ந்துபல் கிளையொடு மேய்ந்து வதைப்ப
வாற்ற னாகி யழியுயி ரோடு
திகழ்வுறு மயிலுஞ் சேவலு மாகி
வந்து வணங்கி வரமது வேண்ட
வாகன மாயுங் கேதன மாயு
மேற்றருள் செய்ய வெற்கொரு துணையா
வருளும் பொறையு மாணையும் வலியு
மிளமையு மாறா வெழிலுறு முருகச்
செல்வனை யருளித் தெவ்வரை மாய்த்தந்

தேவரை யாண்ட சேகன் டேசா
பாவமெய் படைத்த வென்னைப் பாரோர்
வஞ்சக நட்பாய் மனத்தொன் றுன்னி
யின்சொற் காட்டி யேசிறு மோசக
வன்பக மொழிகூந் தன்பற வுன்னி
முன்சின மாக முனியினு முனியுக
விடர்செய் வாருக் கெதிர்செய வெய்யாச்
சடல மென்னு முன்னினுந் தள்ளுக
வெவ்வெர [illegible] று மெதிராக்
குடியுள னென் [illegible] ளினுங் கொள்ளுக
குறைந்தி னெவரோ யிங் குலாவிக் கொள்ளு
[illegible]ளைக்க [illegible]மன்னன் [illegible]றன்னிறு [illegible]ள்ளுக
வின்சொற் பொறையன் பிறை கல்லிப்
பண்பில னென்று பழிக்கினும் பழித்துக
விலைகட் கயர்வெற் றென்றிங் கொன்றுண்
டென்புகழ் கேட்கத் துள்ளாற் கோதற்
கன்பற முன்பிற் றன்றிடும் வல்லாக்
கஞ்சவ வரிசோ ரமலவிட டோரட்டு
நெஞ்சக் கவலை நீக்கியுன்
கஞ்சக் கழலிற் [illegible]கிட வாரேன். (கூஉ)

நேரிசைவெண்பா.

தஞ்சா நதிபுரந்த சோழன் கலைகற்கும்
பஞ்சா னனப்பாசு பாளிபோல—பஞ்சாம
னஞ்சகந்த பொருளா நகரிலிருந் துண்டோர
னஞ்சகந்த தென்போர் வருள். ௩௭

காதலன் துயருரைத்தல்.

கட்டளைக் கலித்துறை.

அருளார் செழித்தற் பணியப் பணிந்த தகைக்கொணர்ந்து
பொருளாக நின்ற புரவலர் தாபுரி போர்பருக்கை
யிருளார் கணைக்கண் பிகன்டே னென்ற, ளிரதிபோல்
தெருளா வசுக்கூ தனளைப் போல ஜூலிக்குக் கேர்கிலினே

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேரரச ரின்கதற குட்டிறு மைநந்த
செய்பொனின கர்ப்புரி டன்றுமரிறு
மாரரத மாதர்பத டன்னன்னிவின் மொரசுப
மாடமொர்ப விக்குலி போன்றுலை வாளுந்
சேணிறு னத்தினைர தேவருல காட்பற்
றிங்களிக ரேந்தபொழி லேய்துறும னத்தை
யாரறுக ராவணிசி கண்டனடி மலர்க

### நேரிசையாசிரியப்பா.

சித்தனைச் [illegible]
முத்தனை [illegible] முன்னிப்
பத்தியிற் [illegible] றனவே. (௩௬)

### நேரிசைவெண்பா.

தானந்த மாசுந் தவிர்ப்பான் றிகம்பரன்
வானந்த [illegible]—தானந்தங்
காணாத்தச் [illegible]
காணாத்தச் செல்வமுதல் வான். (௩௭)

## கலவியின்பங்கூறல்.

### கட்டளைக்கலித்துறை.

[illegible] மதின்
[illegible] செறிந்தான்று மொன்றுபோன் றுள்
[illegible] மானினனும்
[illegible] கத்தின்று மீதுறைவே.

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

[illegible]
[illegible]

வானத் தலைத்தனிய னந்தைப்ப திக்கண்வல
மாவைத்த சீகண் டர்வெஞ்
சேனைக் குழுக்கவர வீறற்ற துட்டர்களை
சேதித்த சீரின் புகழ்
மானக் கருத்தினுடை னொடித்து திப்பரிடர்
மாய்ந்தோடு மின்போங் குமே. (௩

### நேரிசையாசிரியப்பா.

இங்குண் டங்கின் றங்குண் டிங்கின்
றென்பன வில்லா தெங்குந் தங்கி
யென்றனை யெவரு மியம்பும் வழக்கா
லென்னுளி லீயு மின்னடி யானு
பாமென் றுண்மை யாபரு ளான்றோர்
சொற்கண் டன்றி யுட்கண் டறியாச்
சிறியேன் றனையும் பெரியதன் னருளாற்
றுன்பப் புவியுட் டுன்ப மொழித்துத்
தன்பத நம்புந் தன்மை யளித்துக்
காத்தனை யுலகி னாற்றிசை கமழக்
கொங்கு விரிந்து குங்கும மிஞ்சுங்
கும்பக் கொங்கைச் செம்பொற் கஞ்சத்
தொருமா வாமப் பெருமான் மேவற்
கிருகூ றுற்ற வொருநாப் பஃறலை

யுறுசெம் மணிமன் றுச்சிப் பூக்கொள்
படமிசை வாய்ந்த பாயா போங்க
வருணிறை வுறுமிவ் வனந்த னகரின்
முன்பய னென்பத் தன்பணி செய்யுந்
தொண்டர்க ளேத்த வண்டர்கள் வாழ்த்த
நாதத் தனையுட் போதத் தலையாச்
சோதிச் சிவமாய்த் தோன்றி வாழுஞ்
சிகண் டேசா சித்தத் துன்னி
வேண்டுவ தென்று விளங்கக் கேட்டன்
றுண்ட நீபா யருளுதி யஃதே
சென்றன தள்ளி நின்றன தெரியே
னெந்நா ளேனு மெவ்விட மேனு
மெடுத்த யாக்கை யிறுநா ளங்கா
ளொடி தளர்ந்து வாடி மெலிந்து
வாத மிசைபந்த சீத மிகுந்து
பீழை செறிந்து நீர்முன் வடிந்து
கண்க ளிருண்டு கடைவழி யாக
வார்ப்பன வொழுகி வாய்மொழி குழறிக்
காதுக ளடைத்துக் கருத்துங் கெட்டுப்
போகா துனது பொற்கழ லாதி
கேசத் தழகு நேசித் தாய்ந்து

புகி டணைந்து போதத் தொழி
பஞ்சவி சிரமே கன்னைகள் கூட்டி
ஞைஞ்சக் கழிபெய் யன்புட னேறி
நினைபா ரூட னீயென் னைமா
பொருசெவி யதுகவி போழுங்
கருதிகண் முன்னர் நொய்யன் பெயரல் லை. (௪௰)

சீகண்டேசர் நான்மணிமாலை

முற்றும்

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

உ

சிவமயம்.



# திருவாவினன்குடி மாலை.

1914.

Vivekabanu Press, Karur.

1527

கணபதி துணை.

# திருவாவினன்குடி மாலை.

இஃது

தி. தா. அத்தாணி நெய்க்குப்பை

பரியணைம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று

---

பொச்சியமென்று வழங்கும் தேவார வைப்புத்தல

மாகிய எச்சிலிளமர்ப்பதி மிராசுதார்

மகா-௱-௱-ஸ்ரீ

ஆதிமூலவாண்டையாரவர்கள்

விருப்பத்தின்படி

---

இந்நூலாசிரியன் மாணாக்கராகிய

திருப்பாச்சிலாச்சிரமம்

செ. துரைசாமிக்கவண்டரால்

கரூர் விவேகபாநு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

ஆனந்த-ஷு ஆனி-மீ

1914.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரங்கள்

இவை

தில்லைவளாகம்

## சிவானந்தானுபூதிநிலய மடாலயம்
## ஆனந்த ஷண்முக சரணாலயசுவாமிகள்

அருளியது.

---

பொன்னாலு மணியாலும்
புவியாலுங் கவியாலும் போதத்தாலு
மின்னாலும் நடமுதலால் விதத்தாலு
மிதத்தாலும் வேதத்தாலுஞ்
சொன்னாலு மனைமுன்னூற் றொடையாலுங்
கொடையாலுந் தோற்றத்தாலு
மென்னாலு நிறைசெழிய னிறைமாண்பின்
முறைவாய்மை யியலுநாட்டின்

சீர்பூத்த திருவானைக் காவரங்க மெனும்
பதியைத் தென்பாற் கொண்டே
ஏர்பூத்த வடதிசையி னெழிலாரும்
வெள்ளரையும் மிலங்கா நிற்கப்
பார்பூத்த நெய்க்குப்பை யெனுநகருக்
கதிபதியான் பண்புமிக்கான்
வார்பூத்த தனமனையோ டில்லறநல்
லறமாக மருவிவாழ்வோன்

அன்னவன்றன் றிருநாமங் காத்தபெரு
மாளெனவென் றறைவரந்த
மன்னவன்ற னருந்தவத்தால் வந்துதித்துப்
பலகலையு மதிகொண்டாய்ந்து
சொன்னலனும் பொருணலனுஞ் சுவைநலனு
முறக்கவிதை சொல்லவல்லன்
பன்னகரும் புகழ்ந்தேத்தப் பரிமணமென்
றொருபெயரைப் படைத்தசீமான்

தேவர்குலப் பெருமணியைச் சிறைமயின்மேல்
வருமணியைத் திகழ்மெஞ்ஞானப்
பாவலருட் புகழ்மணியைப் பரனுரத்திற்
றிகழ்மணியைப் பகைபெற்றோங்கு
மேவலரைச் செறுமணியை விளங்குறுசுப்
பிரமணிய மணியைவேண்டிக்
காவலரா வினன்குடித்தோத் திரப்பாவா
மணிகுமரன் கலன்க ளாமால்

காமணக்கு நெய்க்குப்பை தனிலமரும்
பரிமணமாக் கவிஞன் சொல்லாந்
தேமணக்குந் திருவாவி னன்குடிவாழ்
குகன்றுதியைத் தினமுநோக்கிப்
பாமணக்குங் கவியொன்றோ ரடியேனு
முளங்கருதிப் படிப்பார் தங்க
ளூமணக்குஞ் செவிமணக்கு மகமணக்கு
மறிவுமண நாடு மாதோ

இஃது
சித்தாந்த சரபம் அஷ்டாவதானம்
பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்களால்
இயற்றியது.

மருவாவ லுறுவலங் காரநய கற்பனைகள்
மலிந்து மேவத
திருவாவி னன்குடிதோத் திரப்பாநற்
பாமாலை திகழச் சொற்றான்
பெருவாரி யனவிலக் கியவிலக் கணமனைத்தும்
பெரிதுந் தேர்ந்த
திருவாமு னெய்க்குப்பைப் பரிமணப்பேர்
நாவலனுந் திறன்மிக் கோனே

இஃது
திருவாவடுதுறையாதீனத்து
மஹாவித்துவான் திருசிரபுரம்.
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரி
லொருவரும் திருவிழிமிழலை சாமிநாத
கவிராயரவர்கள் சகோதரருமாகிய
ஸ்ரீ பாலகுருக்கவிராயரவர்களாலியற்றியது.

---0---

திருவளர்ந் திலங்கு முகிற்பிறை களங்கஞ்
சேர்ந்துமென் கடுக்கையா ரமும்
பெருகரல் வரைமா திணையுமார் தவிஞல் பிஞ்ஞகன்
றனைநிகர்த் தோங்குந்

தருநிறை பழனி மாதிரத் தணித்தாய்த் தயங்குமா
    வினன்குடித் தளியி
னருமறை புகழ வமர்ந்தருள் சுடர்வே
    லற்புத சிற்பரக் குகன்மேல

ஆரங்க மறையுங் காணு வரவனை
    யமலன் றந்தசுந்
சீரங்க மெனு நகர்க்குத்
    திகழ்வட பாலின் மன்னுங்
காரங்கந் திகழுஞ் சோலை
    கவின்மிகு கொச்சி யத்தில்
வாரங்க நகுமின் னார்க்கு மதனென
    வழகு வாய்ந்தோன்.

வேறு.

விண்கலை மகளும் விடவர விறையும்
    விசும்பயன் றலம்பா தலத்துங்
கண்படா தொழிக்கக் கவின்கொடை கல்வி
    கசடறு வலியினுங் கதித்து
மண்புக ழாதி மூலமென் றொருபேர்
    வாய்ந்த நற் சுகுணனு மகிழ்ந்து
பண்பட ராவி னன்குடி மாலை பகர்ந்தரு
    ளென்றனன் பரிவால்

ஆலையை முறித்தங் கரிகாத் தேந்தி
    யரிகரி யயின்றிட வளிக்குஞ்

சோலைசூழ் நெய்க்குப் பைநகர் மேவிச்
சுரநதிக் குலத்தின்வந் துதித்தோன்
வேலையைப் பரவும் வித்தகன் காந்த
விண்டுவென் றொருபெயர் பெற்று
மாலையங் குவளை புனைந்தமன் னவன்செப்
மாதவத் தாலவதரித்து

வேறு

முத்தமிழ்க் கடலயின்றிம் முதிர்ச்சியின்
முதநூல் சொற்ற
தத்துவ நூன்முன்னை சமயநூ
லியாவு மாய்ந்தே
மந்தன தருளைப் பெற்ற
வன்பிறு லறைந்து தந்தான்
பத்திக்கோர் வித்தனை பரிமணப்
புலவன்மாதோ

இஃது
திருசிரபுரம் வரகனேரி சித்தாந்த ரெத்தினாகரமாகிய
வித்துவான்
**சோ. வீரபத்திரபிள்ளையவர்களாலியற்றியது.**

---0---

கதிர்நில வெறிக்குங் கற்றையஞ்சடிலக்
கண்ணுதற்பெருமான் கனையிருண்மூடிய
பணிக்கதி ரென்னப் பாசத்தொடுங்கிய
பலப்பலவுயிர்கணிலத் தகத்தனுவுங்

காரணமும் புவனமும் போகமுமளித்தே
விடுத்த பேத மெண்பத்துநான்கு நூ
றுயிரமவற்றுளாரும் பெறன்மக்கட்
பிறப்பே சிறப்பிற் றிறப்புமவைகள்
சுத்தநன்னிலைக்கட் சுகமுறவுறற்று
மறநெறிவழா அறோம்புஞ் செல்வம்
பெற்றவன் கற்றவர் பெட்கும் பான்மையன்
பகீரதன் வேண்ட பாவையிற் கிடந்த
சகரர்த மென்பிடைப் புகுபவர் தம்மைத்
தனியிலமுய்த்த தளிர்புனற் கங்கையிற்
பரமனாடிக்குப் பணிக்கு நன்மலர்கள்
பூத்திடுசோலை பொலிவழி செயலான்
ஆரணுரெய்திய வானுலகிறைவன்
அகமகிழ் வினையே நலமெனப்புரிந்த
பொன்னியின் வளமிக மன்னியசோழ
நாட்டிற் கணிகலமாகிய சிரபுரத்
தொரு பாலரங்கத் தொருபாற்பிறங்கு
நோன்மை நொச்சியக்கு நொச்சியைப்போல்வான
மறையவற் பயந்த மணிநிறவண்ணனைப்
பகுவாய்க்கரா அம்பற்றக் கரிமுன
மழைத்த சொற்றன் பாலடைந்தவர் தேரத்
புனைந்த வாதிமூலப் பெயரான்
செய்கெனப் புகன்ற காரணத்தானே
எவ்வுலகத்து பிலையாமரபிற்

றெய்வயானையைத் தினைக்குறமானை
நன்மணமிலைச்சிய நகையேய் புயத்தான்
பனைக்கைக்களிற்று பண்ணவர்க்கிளையோன்
தனைப்பெறு தந்தைக்குக் குரவனானோன்
சூருடல்கிழிய வீறயிற்கரத்தோன்
ஆவினன் குடிக்கண் மேவிய புனிதன்
ஆயநன் முருகனைப்புயத்தாட்க
ணன்பாற் சூட்டின னருந்தமிழ்மாலை
தென்னவர் பிரானைத் தெறுநோய்கடிந்துந்
திரைப்புனல் வைகை யெதிர்மறுத்தேறியுஞ்
செயிர்த்தோர் மூட்டிய தீவினையாடியுஞ்
சேயிழையாக வென்னைப் பணித்துஞ்
செங்கலைப் பசிய பொன்னாவமைத்தும்
பல்லிசை விரித்த பனித்தமிழ் மகளைப்
பூதலமறியப் புணர்ந்து தன்னுள்ளஞ்
செல்புலஞ் செலாது நல்புலத்துர்ந்து
மறிவினை வளர்க்கு மறிஞர் தங்கோமான்
மாணிலந்தழைப் பவளஞ்சுரந்தளிக்கும்
நீர்வளங்கொழிக்கு நெறிபடர் மேகமும்
பெட்டவர் பெட்டவை பெட்டவாங்களிக்குங்
கற்பகத் தருவுங் கைத்தெழு வள்ளலு
முட்குமா றுதவு மொருபெருங் கரத்தான்
அருவவின்பத்தை வுருவப் பொருள்கொடு
அளவுக் களவாவளிக்குங்கல்வி

கற்றவஞ்சகக் கணிகைமார்களு
மானனங்கண்ட வக்கண நிலைதிரிந்
தம்மவோமதன னகணிக்குவளை
மலர்தொடுத்தெய்யு முன்வளர்முலைபுல்லி
யுயிர்நிலை யளியெனவுரைக்கு நல்லெழிலோன்
செப்பருஞ் சிறப்பினெப்ப நெய்க்குப்பைப்
பரியணைப் பெயரிய பாவலோனே

---

இஃது

உறையூர் சைவசித்தாந்த சபை தனசாலாதிபரும்
கு. தா. லாலாப்பேட்டை சித்தாந்த ஞானப்பிரகாச
சபைத் தலைவருமாகிய உறையூர்

## தே. பெரியசாமி பிள்ளை அவர்களால்

இயற்றியது.

அருவாகி யுருவாகி யருவுருவந்
    தானாகி யாவுமான
மருவாரு மலர்க் கொன்றை மாலைபணி
    வார்சடையெம் வள்ளலாய
பெருவாழ்வு தருங்கருணைப் பெம்மானு
    ருலகுய்யப் பெட்பினீன்ற
திருவாவி னன்குடிவாழ் செவ்வேளின்
    சேவடிக்குச் சிறக்கமாதோ.

சொல்வளமும் பொருள்வளமுந் தொடைவளமு
　　நடைவளமுந் தூயபத்தி
நல்வளமும் பொருந்தமைந்து நனிவிளங்கச்
　　சூட்டினனு னினர்பாமாலை
பல்வளமும் பொருந்திடசெய் க்குப்பையெனும்
　　பதிசெய்தவப் பயனாய் வந்தோன்
கல்வளமு மென்றபுயக காரளன்
　　பரிமணம்போல் கவிஞரேறே.

அன்னவனு மருந்தனைய வரியதமிழ்க்
　　கெரிபலிலான் றெரயுதமாக
மன்னவெழுத் தாமெழுத்தில் வயங்கவமைத் துதவி
　　யிரு மையுநன் குற்றான்
அன்னவுறை தன்பழனத் தணிபாச்சி
　　லாச்சிரம மமர்ந்தோனாய
எண்ணினியநட் புடையான் றுரைசாமி யெனும்பெயர்
　　கொளெழிலோன் றனே.

இஃது இந்நூலாசிரியன் மாணாக்கராகிய
திருப்பாச்சிலாச்சிரமம்

## செ. துரைசாமிக்கவுண்டரால் இயற்றியது.

சீர்பூத்த சோணாட்டு வேளாளர்
　　குலதிலகன செல்வ மிக்கான்
கார்பூத்த கரதலத்தான் காத்தபெரு
　　மாடவத்திற் கண்ட மைந்தன்
பார்பூத்த பரிமணமாக் கவிஞனு வினன்குடிவாழ்
　　பரன்பேண் மாலை
பேர்பூத்த சொற்பொரு டோர்ந் தியற்றினனென்
　　மனத்திருளு மிரித்த சீமான்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்

# திருவாவினன்குடி மாலை.

## கடவுள் வணக்கம்.

காப்பு.

இருகவுணி னின்றிழி மதமருந் திடவேகிக்
கருநிறத்த வண்டினம் பிறைக்கோட் டொளிகலத்தல்
மருவுதாதைபோன் மலர்தலை சூட்டின னென்ன
வெருவிலாக்களி யுறவயர் வேழமென றுணையே.

சிவபெருமான்றுதி.

அலையெறிபா கீரதியை யிலைச்சிய செஞ்
சடைத்தேவை யகிலம் போற்றுங்
கலைநிறம்பாப் பிறையணிகண் ணுதலைமழு
மான்றரித்த கரத்தி னானை
மலைமகளை மணந்தானைப் பன்னிருதோ
ளுடைப்பரனை மகிழ்வி னோடு
நிலைபெறவெவ் வுயிருமுய்யத் தருவானை
நினைந்துபவ நீக்குவாமால்

உமையவள் றுதி.

வேதமாந் தருவிற் படர்ந்தவிர் கொடியை
விழுமிய பிரணவத் துதித்த
போதமா யகிலத் துயிர்க ணன்மார்க்கப்
புணர்ப்புற வருள்செய் பூரணியைச்

சீர்கொண் மலரின் மணமெனச் சிவத்திற்
றிகழுமெம் மிறைவியாஞ் சிவையைப்
பாதக மிரியப் பணித்தருள் புரிகற்
புரைபதந் தினைப்பர விடுவாம்.

சுப்பிரமணியர் துதி.

கார்மலிந்த கந்தரத்தா னுதற்கணுதித்
தமரர்களைக் காப்பான் வேண்டி
யேர்மலிந்த வயிலுந்தி யசுரர்குல
முழுதழித்தோ னியன்மிக் கோங்கு
வார்மலிந்த குயக்கரியை வணக்குறவர்
தருமானை மணந்தோனைய
பார்மலிந்த புகழாறு முகத்தேவைப்
பழிச்சிவினை பாற்றுவாமால்.

வள்ளி தெய்வயானையார் துதி.

மணியொளிபூ மணம்போலா வினன்குடியி
னருளுருவாய் வயங்கா நிற்குந்
துணிபொருளை னகலாதென் னுளமருள்
சுரந்தளிக்குஞ் சுரர்தமானைக்
கணிதமறு பல்லுயிருங் காப்பானை
யென்மனமாங் கல்லின்மேய
வணிகிளரும் பொருப்பின்வரு வள்ளிநா
நாயகியை யன்பான் வழுத்துவாமே.

௧.

சிவமயம்.

காப்பு.

கட்டளைக் கலித்துறை.

அண்ணலா வினன் குடியப்ப னடிக்கமலத் தேந்தும்
பண்ணவர்க் கொரு மாலைசெந் தமிழினிற் பாட
வெண்ணயந்து சொற் பொருடர வொற்றைக்கொ
மருப்பினோன்
றண்ணைத் தாமரைத் தாட்டுணை சூட்டுதுங் கைவேல்

நூல்.

மாமகள் கொழுநன் மறையுணர் புலவன்
வழுத்துநின் சேவடி மலரே
யாமவப் பிறவி யகற்றினா யேழை
யாட்கொள வருளுதி மயில்கள்
பூமலர் வயின்வண் டின்னிசை பாடப்
புளகமுற் றெழினட மாடுங்
காமலிந் திலகு யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (1)

எத்துணைச் செயலு மற்றிருந் தேனை
யித்துணைக் கோலம தியற்றி
வைத்தருள் புரிகி லாய்நொது மலர்போல்
வாழ்ந்துகொண் டிருத்தியென்ன தான்

பித்தனை மாயப் பேய்கொலோ தேர்ந்து
பேசவை தெவன்பிரி துரையாய்
கத்தனை வளஞ்சா ராவினன்குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே (2)

தெய்வரிற் சிறந்தோ ரிந்திர னவனிற்
சிறந்தவன் விரிஞ்ச னன்னவனின்
மேவரு நெடுமால் சிறந்தவ னந்த
விண்ணவர் தங்களிற் சிறந்தோன்
பாவனை யென்னி லீசனே யன்ற
னன்பினிற் சிறந்திட வருள்வாய்
காவகம் பிறங்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (3)

இந்துவாழ் கமல மிரவியாற் குவளை
யிடருறு சமயிக ளன்பா
லுந்தையெஞ் சிவமு லோபரால் வறிஞ
ருள்ளக மலர்வன வுளவேற்
சந்ததம் பிறதெய் வங்கள்பா லலருந்
தமியனே னுளமிது சாதம்
கந்தவண் பொழிலா ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (4)

விண்ணவர் பதமுங் கண்ணன்மே லுலகும்
வேதிய னிருக்கையும் விழையேன்
எண்ணுங்கா லவைதா மிந்திரசால மேய்க்குமா
லென்னுளக் கிடக்கை

மண்ணாக மெனினு மெடுத்தெடுத் தடிகேள்
வண்புகள் வழுத்துமதொன்றே
கண்ணினுண் மணியே யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (5)

வரியமர் தனத்தார் புரிகட நோக்கி
மகிழுமதொழிந்து மாலையற்கு
மரியநின் னடியன் புற்றெழ நோக்கி
யகமகிழ் வடையு நாளென்றோ
பொரியமைத் தேமா வெனவருசூரைப்
போக்கியாண் டருளிய பொருளே
கரியபைங் குயில் சூழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (6)

நின்னையே தொழுவார் வறுமையாற் பிணியா
னினைவின்மாத் திரையுந் துன்படையா
ரென்னவே புகலு மொழிகண்டே னவ்வா
றெளியனேன் றன்னிடைக் காணே
னென்னையோ மாய மறிகிலேன் றெழும்ப
னென்பது பொய்மையோ வியம்பாய்
கன்னலம் வயல்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (7)

வரையிடை யிவர்ந்து நதியிடைப் படிந்தும்
வனத்திடை யமர்ந்தும் வாரிதிசூழ்
தரையிடைத் திரிந்து மாவதெனின்னைச் சரண்புகுந்
தடைந்தன ரெனின் வெரு

டிரையிடைப் படிமிப் பாரினின் மற்றோர்
செய்தவ முண்டுகொல் வாவிக்
கரையிடைப் பொலிபூ வாவினன் குடிவாழ்
கந்தனை யெந்தயா பரனே. (8)

உதித்தனை யுலகி னுயிர்க ளன்மார்க்க
முற்றுயக் கருதியென் றறிஞர்
விதித்திட வந்தனை யறிந்த மெய்
யுணர்வின் மேலவ ருனைவிடுகுவரோ
பதிக்கமரி யாகு மாகநா டாண்ட
பண்ணவா பைந்தமிழ்க் கரசே
கதிக்கிட யெனச்சொ லாவினன் குடிவாழ்
கந்தனை யெந்தயா பரனே. (9)

மலைமக டனது செங்கையாற் றூங்கி
மக்களா வென்னநோக் குறலுங்
தலைமைசா ராறு முகத்தொடோர் வடிவாய்த்
தயங்கிய தடத்தனை சாதிப்
புலையரும் விரும்பாப் புன்புலா லியாக்கைப்
பொறையினை னெனினுமெற் கருளாய்க்
கலையெலாம் பயிலு மாவினன் குடிவாழ்
கந்தனை யெந்தயா பரனே. (10)

ஆவியோ டாவி புணருமக் காலை
யதற்கிடை யுடம்படு மெய்தான்
மேவிடு மன்றே யவ்வண நின்றன்
மெல்லடித் துணையொடு கூடப்

பாவியே னுனக்குப் பக்தனா னாக
　　படியுறுந் தோடொகொலை பாதாய்
காவிறை மருகா வாவினன் குடிவாழ்
　　கந்தனே யெந்தயா பரனே. (11)

செய்தவ மழித்த பாதகன் றன்னைச்
　　சிந்தையிற் கொடுபா கதிக்க
மெய்தூத லின்றி வாயின்மண் கோட
　　லெழின்முகந் தியாவர்க்குங் காட்சி
தொய்துடை யானெனம் பெண்மையாய் நின்ற
　　ஞேன்கழற் கடிபவ னியானே
கைவிடா வையா வாவினன் குடிவாழ்
　　கந்தனே யெந்தயா பரனே. (12)

துறைபலி யடியர் துதியொடு நாயேன்
　　றுதியுமுன் றிருச்செவி யேற்கு
மறைகடற் புனித நதிப்புன லதனோ
　　டங்கண நீருமேற் றிடுமாற்
சிறைமயி லேற்றோ யாளுநி ஞான
　　தேசிக னெனவொளிர் தேவே
கறைவிலார் பணியு மாவினன் குடிவாழ்
　　கந்தனே யெந்தயா பரனே. (13)

பொருள்குணஞ் சாதி தொழிலொடு புலனும்
　　பொருவிலா வணியிடைத் தன்மை
யருளுநின் றன்மை யங்கண மன்றோ
　　ரறிவொடு புலனென வறிந்தேன்

பொருணிறை மணியே சைவநற் கொழுந்தே
தெண்கடற் பிறந்தவா ரமுதே
கருணைவா ரிதியே யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (14)

என்னகத் திருக்கை மழுக்கினன் னெறியி
னெய்துறக் கருணைசெய் குவையேற்
பொன்னக ரதனைப் புரந்தரற் களித்த
புகழினும் புதியவோர் புகழாய்
முன்னரு மொளியைப் பரப்பிடு மதற்குன்
முகத்துறு கண்களை யமையுங்
கன்னலம் பெருகு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (15)

பாவியேன் மனமா கியபெரு முத்தி
பத்தியா கியபெரு நதியை
மேவிடு மதுபோ லின்பத யாகும்
வீரையுட் புகுவ தென்றுளோ
பூவியல் பதத்தோ யாவரே யெமக்குப்
புக்கிட மளிப்பது புகலாய்க்
காவியம் புகலு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (16)

மாண்டநின் னடியர் குழுவொடு மெளியேன்
வயங்குநின் பேரவை யதனி
னீண்டவன் புடையே னுதவி னதனை
நிலைபெற வருளுதி நீயே

பூண்டகு மணியு மாடமும் வீதிப்
புறங்களும் பொலிவுற வயங்குங்
காண்டகு மணியே யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (17)

யானென தெனும்புன் செருக்கினை யழித்தா
ரிழப்புறு ரென்பது சரதந்
தானென மறைக ணறையவு முணராச்
சழக்கனே னுனையிழந் துழன்றேன்
மீனென விலங்குங் கண்ணியர் மயக்கின்
வீழுறு தாண்டுகொள் விரைவிற்
கானெலா மணியா ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (18)

அருளிலாத் தவமும் விதிவிலா வானு
மாதரஞ் சற்றுமி லறமுந்
தெருளிலா வுணர்வும் விரையிலா மலருஞ்
சிறியனேன் பத்தி யில்லாத
பொருளில் புன்பாட லென்னினு மேற்கும்
புலவனீ யெனப்புகன் றனனாற்
கருளிலார் பரவு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (19)

பலகலை பயின்று மதன்பொரு ளுணர்ந்தும்
பக்குவ மில்லவர் தமக்கு
வலர்தலை யுலகின் ஞானம துறுமோ
மாண்புடை நினதரு ளேக்கா

லலகில் வெங் கொடிய பாதகமனைத்து
மகற்றிநற் கதியளித் திடுமாற்
கலவிவா னவன்போற் றாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (20)

பற்றவா வறுத்த நின்னடி யவர்தம்
பழக்கமே நற்றுணை யென்ன
வுற்றவா தரமே யுன்பத மளித்தற்
குறுதுணையா மஃ தருள்வாய்
முற்றறத் துறந்தார் தமக்குறு பயனை
முழுமுதற் கடவுளே யென்றே
கற்றநா வலர்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (21)

என்றுநற் றுணையா நினைவிடுத் தயலா
ரிணக்கமே புரிந்திழி வடைந்தேன்
கொன்றுதின் றுழலுங் கொடியனே னெனினுன்
குரைகழற் கன்பனைக் கொளுவாய்த்
துன்றுபைங் கமுகுங் கதலியுங் கன்னற்
றெருகுதியுட் கான்மது வருந்திக்
கன்றுவெம் பசிதீ ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (22)

எண்ணிய வனைத்து மெண்ணியாங் கியற்று
மெண்ணிலா வலியுடை யெந்தாய்
தண்ணிய மலரோன் றனையவ மதித்துன்
றந்தையெஞ் சிவபிரா னுவக்கப்

புண்ணியர் புகழோ மெனும்பத மதற்குப்
பொருளறிந் துரைத்தனை நீயே
[illegible] வினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (23)

தூவள [illegible] த்தாலு மலருறை பவனும்
பொன்னகர் தன்னையாள் பவனு
மேவலைக் கேட்டவர் தங் குறையினைத் தவிர்த்தா
ளென்றிரா திடைவதற் கிசையாப்
பாவகா ரியனுங் காருகச் செருந்த
பாயநின் பதமல ரரட்டாய்க்
காவளம் பொலியு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (24)

கொடியவ னெனினுங் குணமில னெனினுங்
கோதறு நின்றிரு வடிக்க
ணெடியவன் பொடியேன் றுதிசெயக்கண்டு
நீயிரங் காவகை யென்னே
யடியவ னலனோ வாதர மிலனோ
வையநீ யறிகுவை யெவையுங்
கடியவன் பிறப்பி லாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே (25)

வலியகன் மனத்துச் சிறியனென் மாட்டு
மருவுறப் படாதென மறுக்கிற்
பொலி பருப் பதமந் தரமுதலிடத்துப்
புணர்ந்தது மில்லதாய்ப் போமால்

பனிசுவைக் கதலிக் கன்னலு மாவும்
வருக்கையு நாளெலாம் வழங்கிக்
களிபுகா தென்று மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (26)

ஒருகணப் போது நின்றிரு வடியெ
னுளத்தினிற் கொண்டிட லரிது
மருவினு மதனை யுகமெனக் கருதும்
வன்மனத் தொடுழல் கின்றேன்
பருதிவா னவனும் பரவிடுந் தெய்வப்
பசுந்திரற் றிடப்பெய ரடைந்து
கருதினோர்க் கருளு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (27)

அந்தகன் றமர்வெம் பாவிநீ யிவண்வந்
தாயனாற் பாரெனு முனநின்
பந்தமில் கணங்க ளின்றிரு வடியாம்
பங்கயங் காட்டெனப் பணிப்பாய்ச்
சந்தநான் மறைதே ரிருபிறப் பாளர்
தழலவி தனையுணக் கருதுங்
கந்தமார் பொழில்சூழ் மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (28)

வளமலி மறையு மறையினின் முடிவும்
வயங்குறு மாகம மூபாங்க
முளமலி புராண முப்புரா ணங்க
ளுரைக்கு நூலுள்ளன வெவையும்

பளகறப் பயின்றென் றனுமுன் றமம்
பறையறை வித்தெனப் பகருங்
களவிலார் பரவு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (29)

யாரினும் பெரியோ னுந்தையென் றுரைப்ப
ரவரினும் பெரியைநீ யென்றே
சீரினும் பெருகுந் தன்மையோ னெனலாற்
சிறியனேன் றனக்கருள் குதியாற்
போரினு மிகுந்த பொழிலினு மதின்மேற்
பொங்கவிர் முகட்டினுங் கமஞ்சூற்
காரினு முறங்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (30)

வேதவா கமங்க டெரிபறியாமை மேவிடா
தொருங் குணர்ந் திடினு
நீதமிற் கடைநோக் கிலையெனி னவருன்
னீள்கழற் கன்பரா குவரோ
மாதவத் தவரை நாளுநின் றனது
மலரடித் துணையொடு கூட்டிக்
காதநீ டெல்லை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (31)

பதுமமென் மலர்மேன் வாழ்மக டனது
பழுதிலா வளமையே பொருவு
முதுபுகழ் மலயத் தின்றமிழ் முனிக்குன்
மொய்கழல் சூட்டிமுன் னுவந்தா

யதுவினங் குடியே னின்றிரு வடிக்க
ணன்புமிக் கூர்ந்தன னறிதி
கதுவிலார் பரவு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (32)

படிமுழு தளந்தோன் பாற்கடற் றுயின்றோன்
பார்த்தனுற் பாரத முடித்தோன்
கடிமல ரதனி லுதித்தவன் காணுக்
கான்முடி யுடையனின் றந்தைக்
குடியினி லுதித்துங் கொடியனு குவனே
கூட்டியாள் குமரநின் மலரிற்
கடிமது பிலிற்று மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (33)

முன்னநீ யருணா கிரிக்குப தேச
முறைமையிற் செய்தவன் றனனு
னன்னலம் பெறுமுன் றிருப்புக ழதனை
நவிறரச் செய்தனை யதுபோற்
சொன்னலந் தருமோர் நூலியா னியற்றச்
சொற்றி யெற்கருள்செய் தூயவனே
கன்னன் முத்துயிர்க்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (34)

வாலியன் மருப்புப் பொருப்பெலா முறையும்
வளமலி கோயிலாக் கொளுநீ
கோலிய வாறு முகநதிப் பெருக்கிற்
கொணர்ந்தெறி தருமணிக் குவையைப்

பாலியச் சிறுமி சிற்றிலிற் பரப்பப்
பருகிவர் துதித்தன போலுங்
சாலியல் டழனத் தாவினன்குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (35)

இரங்குவ ரேழை மக்களுக் கெவரு
மென்பதே யிவ்வுல கியற்கை
தரவருள் தழைக்குஞ் சண்முகத் தேவே
தற்பர மெனுந்தனிப் பொருளே
பரவெளி யதனிற் பற்றிவாழ்ந் திடற்குன்
பதத்துணை யலதுவே றிலையாற்
கரவிலார் பரவு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (36)

வருத்திடி னினியான் பொறுத்திட லரிதுன்
மாணடிப் போதினை யெனது
கருத்தினிற் பிணிக்கிற் றீவினை யெனுமோர்
கட்டினைக் கணத்தின் மாய்த்திடுமோற்
பருத்திடிவ் வுடலாற் பயன்றரா தெனுஞ்சொற்
பாரினிற் பெரியராற் றெரிந்தேன்
கருத்துறு பழனத் தாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (37)

வஞ்சனை லோபம் பொறாமைதீக் குணங்கண்
மருவுமென் னுளத்தினி னுறைதற்
கெஞ்சலி னிடமின் றென்னினிற் கொருசா
ரில்லையோ யிரங்குவை யையா

தஞ்சமென் றடைந்தார் தங்களை நோக்கார்
தரணியி லுண்டுகொ றக்கோய்
கஞ்சமார் தடஞ்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (38)

நிலைபெறு வளமை மிகுந்திடு நினது
நிறையருள் கருதிநைந் துருகேன்
அலைதவழ் கடலி னுப்பிர வடிவா
மலைத்தரு ளழித்தபா லனே
விலைவரம் பறியா மணிகிடந் தவிரும்
வீதியு ணிருப்பிறப் பாளர்
கலையினைப் பயிலு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (39)

அடைந்தவர்க் கருளு மையனீ யென நான்
கருமறை தெறித்திட வறியா
அடைந்த நெஞ்சுடையே னின்றனை யடையா
வுணர்விலே னெவ்வழி யுறுவேன்
குடைந்துவண் டிமிர்பூங் குழலியர் நிதம்பக்
குழியின்வீ ழாவகை யருள்வாய்
கடைந்ததெள் ளமுதா ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (40)

உலகெலா மழலிற் பொடித்தவன் சேயா
யுதித்தனை யெனநனி யறிந்து
மலகில்வெங் கொடியே னுன்னையே யடைந்துன்
னருள் பெறக் கருதியுற் றனனல்

விலகுபு வெனச்சொற்றிடினு மியான் வெருவேன்
 விழுமிய பொருடெனக் கீவாய்
கலவியர் புடைசூ ழாவினன் குடிவாழ்
 கந்தனே யெந்தயா பரனே. (41)

பல்வினைத் திரந்து தாராதா மறியாப்
 பதகர்மேற் பலகவி பாடிச்
சொல்லினைப் பரப்பித் துடருவார் நின்னைத்
 துதித்திட வருபய னறியா
ரல்வினை யிரிக்கு மாதவற் கடுப்ப
 வகத்திரு டகற்றிட வருள்வாய்க்
கல்லெலா மணியா மாவினன் குடிவாழ்
 கந்தனே யெந்தயா பரனே. (42)

வானகத் துறையு மமரர் கற்பகத்தின்
 மலரினைக் கொணர்ந் தனுதினமு
மோனநா யகநின் னடிமல ரதனின்
 முற்றுமர்ச் சித்திடப் படலாற்
றேனறு ஞிமிறி னினமரு மறுகிற்
 றிருவரா ரெங்கணுஞ் செறிவார்
கானறுப் பெருகு மாவினன் குடிவாழ்
 கந்தனே யெந்தயா பரனே. (43)

மதிநதி மழுமான் முதலிய கரந்து
 மடிபகை துறந்தும்வே ளெனுஞ்சொற்
பொதியுமத் திறத்தா னின்னையே யகண்ட
 பூரண சிவமெனத் தெளிந்தே

னதிர்கடற் புவியிற் றெளிதரா ரவரே
யலக்கணுற் றழிகுவ ரறிநற்
கதியினிற் புகுத்து மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (44)

பரவுமுன் கோயில் சூழ்தரப் பணிந்துன்
பல்புக டனைப் பழிச்சித்தே
குரவமென் மலர்கொண் டருச்சனை யியற்றிக்
கோதிலா வாரண மொழிந்து
சுரர்தொழு நினது பாதபங் கயத்தைத்
தொழும்எனைன் றுதித்திட வருள்வாய்
கரகமா தவன்சே ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (45)

அறைதரு கருணை யாளிநீ யெனவந்
தடைந்த சேய் தனையகற் றுமே
நிறைதரு மன்பிற் றழுவியென் றனையா
ணித்தனே தத்துவப் பொருளே
துறைபல கெழுமு வறுமுக நதிசூழ்
சோலையெங் கணுமனந் துன்னக்
கறைதபு வாவி யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (46)

வெள்ளியங் கைலை யமர்ந்தநா யகர்க்கோ
மெனும்பதத் துறுபொருள் விளக்கும்
வள்ளியோ யெனது மனத்திரு ளகற்ற
வலியுனக் கில்லையோ வையா

யுள்ளிய வடிவே யறிவினை விளக்கி
னுத்தமென் றியாவரும் புகழ்வார்
கண்ணுலாம் பொழில்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனை யெந்தயா பரனே. (47)

மன்னிய பவநோய்க் குன்னருள் மருந்து
வாய்த்திடற் கெடுமென வறிந்தேன்
றுன்னிய வனைத்து மறுத்துதி செயுநின்
றொண்டனேன் றுயர்தவிர்த் திடுவாய்
மின்னிடை மருங்கு லன்னமென் னடையார்
விரும்பியாட் டயருறும் பொழிலின்
கன்னியங் கமுகா ராவினன் குடிவாழ்
கந்தனை யெந்தயா பரனே. (48)

தொண்டனாய் மனவாக் கொருங்கமைந் துய்க்குந்
துல்லியர்க் கன்றி மற்றொருரு
மண்டரா திபரு படைகுதற் கரிய
வடிமல ரடைவரோ மேன்மை
கொண்டவன் கங்கை தனையனை மடையுங்
குருகதிந் திடப்படுங் கொல்லோ
கண்டவர் பவம்போ மாவினன் குடிவாழ்
கந்தனை யெந்தயா பரனே. (49)

எண்ணருங் கொடிய பாதக மனைத்திற்
கிருப்பிட மாகினே னெனினு
நண்ணரு முனது திருவருட் டோயி
னவிவுசெய் திடுமோ நலஞ்சார்

பண்ணரும் பொருளை யெனக்கருள் மையனே
பராபரற் குருவுமா னவனே
கண்ணருங் கழனி யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (50)

தழைசெய் வண்கடம்பின் றாரணி புயத்தற்
றங்கையிற் கொண்ட சண்முகநின்
னுழைசெய்பங் கயத்தா ணிழலி னடியே
னுழைசெயா வறுதுயை யகற்றல்
விழைசெய் நின்னடியர் வெருவுறு தவக்கும்
விருப்பமே யெனவுறிங் கிரங்காய்
கழைசெய்பூங் கழனி யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (51)

அடியவர் குறிப்போர்க் குறுதவ மெனுஞ்சொ
லைத்தமோ வலதுமென் னளவிற்
குடிலமை துளவோ நின்னடிக் கன்பு
கொளாதகூர்க் குலத்துதிக் தவனோ
படிமிசைக் கொலைமா பாதக மனைத்தும்
படைத்துளே னெனினு மெற்கிரங்காய்
கடிகமழ் சோலை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (52)

உற்றவர் பவசா கரத்தினைக் கடக்க
வொளிசெழு மரக்கல மாகுங்
கொற்றவா ஞானக் குரவனே யடியேற்
குற்றதீ வினையகற் றிடுவாய்

பற்றறக் களைந்தார் தம்மகத் துறையும்
பரமனே யளகைபென் றறைந்து
கற்றவர்புகழு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (53)

பண்டைய ரமர ராதியர் பழிச்சிப்
பகைகமைதீ ரெனப் பணிந்திடலு
மண்டுசூர் தடிந்த மாவல னெனுமோர்
வண்புகழ் படைத்தனை யெனினுந்
தொண்டு கொண்டடியேன் றீவினைப் பகையைத்
தொலைத்திடி. னோர்புக ழொடடருங்
கண்டுளோர் பிறவா வாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (54)

பொருவரு வனப்பு மிகுமடந் தையர்பாற்
பொலிவுறு மூரனாக் கென்று
மருவுதீ வினையே னின்னருட் கடையால்
மகிழுறச் செய்வ தென்றுளோ
வுருவளர் கோமே தகமுதற் பலவா
யொளிர் மணி குயின்றமாடத்துக்
கருநெடு முகில்சே ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (55)

மன்னிய வுலகின் மானிடப் பிறப்பின்
மருவினே ரடையப னினது
பொன்னிகர் பதத்தொண் டடைந்துபூங் கோயில்
புகுந்தணைப் போற்றுத லன்றோ

மின்னியன் மருங்கு லார்பாதத் தொண்டே
விழைந்தயில் வினையேனேற் கிரங்காய்க்
கன்னியர் தமிழா ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (56)

ஐயவிப் புவியி னிடமறப் பரந்தண்
டங்களு மஃதின்மே விடந்து
மெய்ய நின்புக ழுவாவலான் மேலோர்
விளம்புவர் நினைப்பரம் பொருளென்
றுய்யுமா றடைந்துன் புகழெடுத் தோது
முறையினுக் களவிலே யடியேற்
கையநீ யருளு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (57)

காற்பசு கறவேன் கற்பசு கரக்கக்
கற்றுளே னன்றி மற்றுன்சீர்க்
கேற்ப யான் புகலேன் வம்புபே சிடுதற்
கெண்ணில்வாய் படைத்துளே னெந்தாய்
சூற்பகை தடிந்த சோதிவா னவவென்
றொல்வினைத் தொடரறுத் திடுவாய்
காற்பணை நீர்பா யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (58)

கோதிலா வமுதா யருட்பெருங் கடலாய்க்
குணமலி குன்றமாய்க் குறைவில்

சோதியா கியநின் றனைத்துதித் தொழுகுந்
தூயவர்க் குற்ற நற்றுணைவா
வாதிநா ளமர ரடைதுயர் களைந்த
வமலனே கமலநா பனைநேர்
காதிசேய் பரவு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (59)

ஆதரஞ் சற்றுமிலாதவென் றனையின் னருளினு
லாண்டு கொள் ளுனையேற்
பேதமிலா நின் னடியவர் புறந்தாப்
பித்தன்மா மகனெனப் பேசார்
மாதரோ ரிருவர் கொங்கைதோய் மார்பா
மலரடித் தாகளினி தளிப்பாய்க்
காதலாற் றுதித்தேற் காவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (60)

சிறியவர்க் குரிமை யேதமே புரிதல்
செயிரறு பெரியருக் கியல்பு
மறியவக் குற்ற மாய்த்திடன் வழக்கா
மற்றிது நீ யறியாயோ
செறிவயற் சூனெற் பயிரினை மேய்ந்து
செழுஞ்சுவை யுறுநறுங் கழையைக
கறிசெய் பேதிகள்சே ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (61)

வலைகொடு கடலின் மீன்முனம் படுத்தோன்
மகனெனப் படுவதற் கொப்பக்
கொலைபயின் மறவர் கொம்பினை மணந்த
குமரனை கொடியனேன் மனமா
மலைக்கவிழ் கடலி னுழைமீன் றனைநின்
னருள்வலைப் படுத்திட லரிதோ
கலைபயில் சிறார்கு ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (62)

மறைபல துதிநின் னரும்புக ழனையான்
வழுத்திட வல்லனோ வான்றோ
றறைமொழி யனைத்துந் திருச்செவி யேற்கு
மடிய னன்பா னறைமொழியு
நிறைபெறு வேற்கு மெனத்துணி வுற்றேற்
கெதுசெய நினைத்தனை யையா
கறைபறு வளமை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (63)

வனத்தினுங் கொடிய சுரத்தினு முழனு
மறவர்கோன் மகவிலா மையிற்றன்
மனத்தினின் றெழுமா குலத்தினு னினையோர்
மன்னுபு சினகரத் தமர்த்தி
யினத்தின ரொடுநின் பாதபங் கயத்தா
ளேற்றிட வெழின்மக வளித்தாய்
கனத்தினு மளிப்பா யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (64)

பல்லுல கீன்ற நின்றிருத் தாதை
பாலமுன் விழியினிற் றோன்றி
மல்லன்மா ஞாலத் துறுதுய ரொழிப்பான்
வந்தனை யெனுஞ்சொலைப் புதுக்கி
யொல்லுமா றெனதா ருயிருடற் பொருண்மூன்
றுனக்களித் தேற்கருள் புரிவாய்க்
கல்லுதீ வினையை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (65)

மன்னிய வுனது நாமமா றெழுத்தின்
வன்மையை நின்வயிற் பொருத்தி
மின்னிய மனத்திற் பிணித்திடா தவர்நல்
விரிஞ்சனுற் றருபல வெழுத்தை
முன்னிய துயராற் றன்றலை முழுது
மொய்ம்புறச் சுமப்பவ ரன்றோ
கன்னிநா டதனு ளாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (66)

வெய்யவா பாச மார்க்கமே யொழுகும்
வீணனே னெனினு நின்னடியை
யையகோ வடையப் பெறினெம பாச
மைவகைப் பாசமு மகலுந்
துய்யமா தவர்தூஉய்ப் பழிச்சிய பாதத்
துறுமண மெங்கணும் விரவக்
கையுற விலர்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (67)

பொங்குபாற் கடலிற் றுயில்கொளு மாலும்
பூவுறை நான்முகத் தேவு
மங்கண்மா ஞாலத் துன்றிருக் கோயி
லடித்தழும் புறவலம் வரலாற்
றங்களுக் குரிய தொழினடத் துவராற்
றமியனின் சரண்புக வருள்வாய்
கங்குலு மறவே ளாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (68)

அடிநடு முடிவீ றில்லவ னெவனே
வவன்றனக் கருணையநன் மகவாய்
முடிவிலின் புருவா யருவமாய் ஞான
முதல்வனா கியபெரு முதலே
படியிலி யுனது பதநிழ லலது
பற்றிவாழ் தரற் கிடமின்றே
கடிமலர்த் தடமா ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (69)

இருவினைச் சிமிழ்ப்புண் டுழலுமெற் கருளா
வெழுவ தோர்ந் துன்கிழத்தியர்க
ளருகுறி னதனுக் கஞ்சிடே லனைத
னரும்பசுங் குழவியேய் தனக்கு
வுரியநன் மருந்துண் டுறுபிணி தவிர்த்த
லோர்ந்தெமக் கருளுதி யையா
கருமுகி லுறங்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (70)

மாயனு தியர்க ளின்னமுங் காணு
    மாண்புடை யடிமுடி யுடையோன்
றாயமா தவஞ்செய் யோகிய ருளத்திற்
    றுலங்குநற் சோதிநின் றந்தைக்
கேயவன் புடைய னிவனென வெழிவந்
    திரங்கியா ளாவகை பொன்னே
காயசித் தியர்சூ ழாவினன் குடிவாழ்
    கந்தனே யெந்தயா பரனே. (71)

அடியருக் கிடையூ றணுகிடா தகற்றி
    யாண்டருள் தண்டபா ணியனே
மடிவிலா வருட் சத்தியிரு மாது
    மகிழ்தர மன்னிவாழ் மணியே
முடிவிலாப் பொருளே மூர்க்கனேன் றனைச்சார்
    முழுப்பவ மழித்துணர் வளிப்பாய்
கடிகமழ் சோலை யாவினன் குடிவாழ்
    கந்தனே யெந்தயா பரனே. (72)

மலப்பகை தவிர்க்கு மந்திர மணியே
    மாகநாட் டுறைதரு மருந்தே
நிலைப்பட வெனையாண் டருளிய கோவே
    நேயனே தாயனை யவனே
புலப்படப் பரசிற் சுகத்தி லென்னாளும்
    புணர்த்துவ துன்னடிப் போதே
கலப்பிலா தவர்சூ ழாவினன் குடிவாழ்
    கந்தனே யெந்தயா பரனே. (73)

பிரிந்துனைச் சிறிதுந் தரிக்கிலே னினது
பெரும்புக ழனையுமியான் மறவே
னெறிந்துளங் கலங்கி மயங்கல்கண் டிருந்து
மிரங்கலை யேழையே னளவிற்
புரிந்திட வேண்டு நினதுபே ரளியைப்
புண்ணியா வென்னுயிர்த் துணைவா
கரந்திடாப் பொருளே யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (74)

யேதுமொன் றறியாப் பேதையே னெனினு
மெடுத்தெனை யாண்டுகொண் டனை நால்
வேதமும் பயனு மாகிய வொளியாய்
விளங்கிய விளக்கமே ஞான
போதமெற் கருள வித்தகு சமயம்
பொறுக்கிலே னினிச்சிறு பொழுதுங்
காதகந் தவிர்க்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே (75)

கொழுமணி கொழிக்கு மருவியஞ் சாரற்
குன்றமாங் கந்தமா தனத்தைச்
செழுகழு மலையைத் திருத்தணி யினைநற்
றிருப்பரங் குன்றினை யிரவி
யொழுகொளி தருசெங் குன்றினை யலைவா
யோம்பு நின்னடியினை யருள்வாய்
கழுமலர் வாவி யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (76)

இலங்குபா மலயத் தின்றமிழ் முனிநின்
னிணையடி யேற்றுமத் திறத்தா
லலங்குதெண் டிரைசே ராழிநீர் பருகி
யண்டர்கோ னகைமுகட் டெழுந்த
நலங்குல விந்தை தனைமடக் கியதா
லையந்திலே னெங்ஙன முய்வேன்
கலங்குறு தருளு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (77)

உளங்குளிர் கங்கை முதலிய தீர்த்த
முறைப்படிந் திருந்தவ முஞற்றி
விளங்குறு பூதி கண்டிகை புனைந்த
மேலவ ரெனினு நின்றனது
வளங்குல வியபே ரருள்சிறி தின்றேல்
மன்னிய பவமழிந் திடுமோ
களங்கறை யானே டாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (78)

முத்தவா ணகையார் முயக்கமெப் பொழுது
முன்னுவார் குழுவொடு கலந்து
சித்தமா ழாந்த தீயனென் றெனைநீ
சேர்க்கிலா யெனின் முனமாரு
ரத்தனோர் கோதை தன்வயிற் றூதா
யடைந்தவன் சேயென வறைவேன்
கத்தனே யெனையா ளாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (79)

உரைசெறி நினது சடக்கர மறையை
யுணர்ந்தவர் தம்வயி னுலாராத்
தரையுற மெழுகி யொருபொழு துண்ணுந்
தவத்தினு லாவதென் றெளியேன்
புரைதபு முடலாதிய வொருமூன்றும்
பொலியுநின் வயத்ததா மெனவே
கரைசெடென் றனையா ளாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (80)

மகபதி யொடுமா லயன்முதற் றேவர்
வந்துநின் னடியிணை வழுத்திப்
புகலரு மாயை தன்வயி னுதித்த
புதல்வர்செய் கொடுமையைப் பொறுக்கோங்
குகபரம பொருணீ யெனுமுறை கொளாவக்
குறைதவிர்த் தாண்ட கொற்றவனே
ககனமா புரசை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (81)

வெள்ளிய பிறையு நுண்பொடி நீறும்
விடைவரை யுறுபுலி யுடையுந்
தள்ளில னலனின் றாதைபோ லடியேன்
றனையுநீ கொள்வதுந் தகுமால்
வள்ளிநா யகியை மணந்திட வேட
வடிவுகொண் டுற்றவான் மணியே
கள்ளியல் பழனத் தாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (82)

விரைகெழு மலர்நின் முடிக்கணி யாது
மின்னனார் குழலை முடிக் கணிந்து
வரையறக் கருவேள் வழங்குபூப்
பெற்று வையமென் பூவிடை யுழல்வேன்
புரையினன் மணியா லவிருறு மாடம்
பொலிவுறு தெங்கணும் விரவிக்
கரையுறு பொய்கை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (83)

திரிபுடை மனத்துக் கயவனு முனது
திருவடி தனைப்புகழ்ந் தறியா
துருசுடை யவனென் றுன்னடித் தொண்டர்
சொல்லினத் துருசறுத் திடற்குக்
கிரிசைத னருமைச் சிறுவனை கடைநோக்
கிருத்தலைக் காண்குற வருள்வாய்
கரியவன் புகழு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (84)

இறையவ னீயெவ் வுலகினு மேற்றற்
கியைபுடை யவனென வுணர
மறையவன் றனைச்சார் சாபவன் பிணியை
மாற்றிநீ சாபகா ரிப்பேர்
நிறைவுறக் கொண்ட நிமலவோ வெனையா
ணிலவுபூந் தளியொளிர் சாலங்
கறையிரு ளிரிக்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (85)

கந்தமார் கழலி னறங்குது கலிப்பக்
கண்டுபல் லுயிர்களுந் தனது
பந்தம தகற்றி யுய்ந்திடற் கிதுவே
பாவிடத் தருவதென் றுணராச்
சிந்தையி னுறுமா குலமொழித் தனரிச்
சிறியனேன் படுதுய ரொழிப்பாய்
கந்தவண் பொழில்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (86)

தெரிந்தில னவனிக் கொருபெருந் தேவாய்த்
திகழுறச் செழுநலம் பயக்கு
முரியமெய்ச் சீல மறையவன் றனக்கோ
மெனும்பதத் துறுபொரு ளுணர்த்தித்
தரியலர்க் கிடியே றாகி யசூரின்
றன்குல முழுதழித்தனை யென்
கரிசறுத் தாளு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (87)

திருத்தியா ளெனதஞ் ஞானமாஞ் செறிவைத்
திகழயிற் கரத்துடைச் செவ்வேள்
மருத்துறு மலயம் வாழ்குறு முனிக்கு
மறைமுழு துணர்த்திய வலவா
பொருத்து பன்மணியாற் குயின்றிய மாடம்
பொங்கொளி தரவமர் தளியிற்

கருத்திடு முகில்சே ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (88)

பொறை யருளடக்கம் பொலியுமா சாரம்
பொருந்திய வன்புநல் வாய்மை
யறைதரு மின்ன குறையுளே ளாகி
யலக்கணுற் றலைந்தவெற் கருள்வாய்
குறையுறுப் புடையோ ராயினு மவரைக்
கூறுவர் மக்களென் றெடுத்தே
கறையற விளங்கு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (89)

உத்தம னெனமா மறைசொல வதனி
னுண்மைதேர்ந் தொழுகு மாரியர்கள்
பெத்தநற் றவமே தவமெனப் பகர்வேன்
பேதையே னவையிலா தவமே
மத்தனாய் வஞ்சக் குழிசியா யினுநின்
மாணடி தனைத் துதித்தேற்குக்
கத்தனே யருள்செ யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (90)

குகபரம் பொருணீ யெனமறை கூறுங்
கூற்றினை யுணர்தரி னுயிர்க
ளகமெனுங் குகையி னடைந்துவாழ் தனிக்கு
லப்பெய ருனக்குரித் தெனவே

சகமதி லெவருஞ் சாற்றுதல் சாதந்
தமியனே னுளத்தினு மமர்ந்தாய்
ககனமார் புரசை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (91)

பொருவறு கருணை வள்ளலா ருலகிற்
பொதுசிறப் பெனவகுத் துரைத்த
வருமறை யாக மாதிகள் பலவு
மையமுற் றொழியவோர்ந் தொருவிற்
றிருவுடை யெவரு நின்பத நீழற்
சேரலே வீடெனத் தெறிப்பார்
கருமுகில் பொழியு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (92)

தடையற வுணர்ந்தோர் சாற்று நன்னீதித்
தலைவவென் றுதையே யடியே
னடைமெலிந் திருக ணொளிகெடா வதன்முன்
ஞானநன் முகில்பெய வருள்வாய்
மடைதிறந் தன்ன கருணையோ டனையாள்
வளமுறு மாசிலா மணியே
கடையனேற் கருளு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (93)

அணிகெழு திசைக ணெங்கணு முனது
வருட்பெருங் குணநிறைந் திடலாற்

றுணிவுறப் படுநற் றொண்டர்கட் குறுக
ஊறுஏற் றிடப் படுவதோ சொல்லாய்
மணிசெழு புயமீ ராறுடை வலவா
மறமலி யெனையு மாட்கொளுவாய்
கணிதமின் முழவா ராவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (94)

விழிகுளிர் தாநேர் கண்டுமெய் சிலிர்ப்ப
விம்முறு வன்புஊற் றெடுப்ப
மொழிகுழ றிடநினை றுதிசெய்மெய் யடிய
ருன்னிய யாவையு முடிப்பாய்
கொழிசுவை யுறுமுஞம நன்னறவைக்
கொளவரு ளியகுரு பரனே
கழிதட விசைகேட் டாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (95)

செவியினு னினது புகடனைக் கேட்டுத்
தெரிந்தவன்போற் பல பிதற்றிக்
குவிதரப் பனுவ லியற்றுமென் றனது
குணமெனக் கேநகை தருமா
லவிராயிற் காத்தெம் மண்ணலே நினது
வடியிணை தனையுவந் தளிப்பாய்
கவிழிணர்ச் சோலை யாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே, (96)

வருந்துபொய் வஞ்ச வாழ்க்கையை மதித்துன்
மலரடித் துணையினை மதியா
திருந்தரு ளுழந்தே னென்செய்வே னெளியே
னிடையறா வன்பின னாகு
மருந்தவர்க் கமுதே யாறுமா முகத்தெம்
மண்ணலே யடியனேற் கிரங்காய்
கருந்தன மலிந்த வாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (97)

அடையல ரெனுஞ்சூர்ப் படையினைச் சவட்டி
யமரர்கோன் றனக்கர சளித்த
படையயிற் கரத்தோய் மும்மல பந்தம்
பற்றற வொழித்தமெய் யடியர்
மிடைதரப் பவனி யெழுமயி லேற்றின்
விளங்குறக் காணவா வுடையிக்
கடையனேற் கருளு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (98)

நன்னலம் பயக்கு நாவினன் குமர
குருவென நவிலுநின் னடியா
ருன்னருந் திருச்செந் தூரின்வா ழிறைவர்க்
குற்றமா ணாக்கனென் றுரைக்கிற்
சொன்னலந் தரவிம் மழுச்சுடா தெனவே
சொற்றிட வருளிய துரையே
கன்னலம் வயல்சூ ழாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (99)


குற்றமின் றுருங் கவியதா மெனவே
குணமில் புன்மொழிகொடு துதிகள்
சொற்றன னெனினு நின்புகழ் விரவித்
தோன்றலா லுவந்து கொள்ளுவையா
னற்றவத் தவர்க ளொடுகலந் துயச்செய்
நாதனே யேதமி லெவையுங்
கற்றவர் பரவு மாவினன் குடிவாழ்
கந்தனே யெந்தயா பரனே. (100)

---

ஆவினன் குடியான் வாழி யருமறை யனைத்தும் வாழி
யோவில்சீ ரடியார் வாழி யுரைதரா கமங்கள் வாழி
தாவில்பே ரறிஞர் வாழி தவத்துறை பவர்கள் வாழி
நாவலர் வாழி யின்னூ னவிலுவோர் நாளும் வாழி

திருவாவினன்குடி
மாலை முற்றிற்று

PRINTED AT THE VIVEKABANU PRESS, KARUR.



உ

கணபதி துணை.

துறைமங்கலம்

# சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணிமாலை.

பெரியநாயகி விருத்தம்.

பெரியநாயகி கலித்துறை.

பிக்ஷாடன நவமணிமாலை.

இவைகளும்

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

பொன்னம்பலபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஆறாம் பதிப்பு.

இராக்ஷச ௵ தைமீ.

கணபதி துணை.

## சைவசமயாசாரியர்களாகிய

# நால்வர் நான்மணிமாலை.

---

## காப்பு.

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

### வெண்பா.

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெந்த செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் சமலமே வீடு. (க)

### கலித்துறை.

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது
வாட்டிற்கு வல்ல வொருவற்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினைக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. (உ)

### விருத்தம்.

படியிலா நின்பாட்டி லாரூர னணிவிருப்பன் பரம னென்ப,
கடியனே னறிந்தனன்வான் றொழுமீச னினைத்தடுத்தாட்கொ
ண்டு மன்றித், தொடியுலா மென்கைமட மாதர்பா னினைக்கா
கத் தூது சென்று, மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு முழன்ற
மையால் விளங்குமாறே. (ஙு)

## அகவல்.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரைபெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. (௪)

## வெண்பா.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு. (௫)

## கலித்துறை.

எனக்கன்பு நின்பொருட் டெய்தாததென்கொல் வெள்ளே
றுடையான், றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்தவித்தா
ரணியி, னினக்கன்பு செய்கின்ற வப்பூதியைச்சிவ நேசமுறு,
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந்தே. (௬)

## விருத்தம்.

அறிந்து செல்வ முடையானு மளகைப் பதியாற் றோழமை
கொண், டறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு

மெனவிருந்து, அறந்த முனிவர் தொழும்பரவை துணைவா
நினைத்தோ ழமைகொண்டான், சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே. (எ)

## அகவல்.

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. (அ)

## வெண்பா.

இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—நெடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புகின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனேன்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு. (௯)

## கலித்துறை.

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய்
கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே. (௧௦)

## விருத்தம்.

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனு
லோங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே. (௧௧)

## அகவல்.

கடனிற வண்ணன் கண்ணென் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னாம்பூங் கருமயி ருகவியு
தென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தலை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்செல விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை பொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொயம்மலர்க் கோதை யகம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரண்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனை
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மணமகிழ் வோனே. (கஉ)

## வெண்பா.

மகிழ்ச்சி மிகவுண்டு போதலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிசையுந் தண்புகலிச் சம்பந்தா !
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. (கங).

## கலித்துறை.

தாயிலி யாருஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னூறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னுணவு மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே. (கச)

## விருத்தம்.

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா னூற்பக வன்ன நுண் மருங்குல், வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி மாற்றுவான் சென்றன னென்றூற், கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக் கொண்டதே தக்குநீ புகலாய், காக்கரு முதலை விழுங்கிய மதலை கான்றிடத் தோன்றுநா வலனே. (கரு)

## அகவல்.

வலமரு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி

வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (கசு)

வெண்பா.

பயனுறு நல்லாண் பனைக்குவிடந் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிவபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு. (கஎ)

கலித்துறை.

பாட்டான் மறைபுக ழம்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே. (கஅ)

விருத்தம்.

போத முண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ னக்கி யம்ப வேண்டுமே. (ககூ)

அகவல்.

வேண்டு நின்னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக

திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே. (உ0)

வெண்பா.

கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றமுவ ரேகமுவின்
காடேறப் புக்கவருகா. (உக)

கலித்துறை.

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
சருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே. (உஉ)

விருத்தம்.

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்று காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக வென்றமு கின்றநா ளலைபா
றணிந்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பி ரானலனே. (உங)

அகவல்.

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
ளொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்

பழிப்பி னென்று விழிப்பி னெரியு
மாயிழைக் கன்னை நீபுகழ்ந் துரைக்க
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே. (௨௪)

வெண்பா.

வானும் புகழ்புகலி மன்னன் றொடைபொன்று
தேனுந் தெவிட்டியோன் சீரோடு—தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ருழல்கிழ்ந் தெழுந்தா. (௨௫)

கலித்துறை.

துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுக்குலை
யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்க்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே. (௨௬)

விருத்தம்.

அரசன் பரிமேல் வரநெடுநல் யானை பொருத்தத் தமர்ந்துபோய்
வரதன் கைவலை மலையடைந்த மணியே மணிநீ ரிடுபசும்பொன்
றிரைசங் கெறியுங் குளத்துவரச் செங்கற் செம்பொ னுப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத் திருவாய்மலர்ந்துபகர்வாயே.

அகவல்.

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெருரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
யன்னமாடு மகன்றுறைப் பொய்கை

வாதவூ ரன்ப வாத வூரேல
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலரெனுந்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே. (உஅ)

வெண்பா.

தேனே றலர்சூடிச் சிப்பலிக்கென் றூர்திரியு
மானேறி யாண்டிபெற் றான்கொலோ—தானேறும்
வெள்ளிமலை யென்று விளைவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின். (உகூ)

கலித்துறை.

பெற்றா ளினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டே
னற்றா ரணியி லினைப்போற் பிறப்பரு நல்லகண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில் வீரன் திருப்பெயரோ
பற்றா மதிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே. (௩0)

விருத்தம்.

பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பிநீ
சேவாய்ப் பொருநுந் தருமமுடைத்தேவன் மலைக்குப்போம்பொ
காவாய்ப்பயந்தடக்கைமலர்க்கழறிற்றறிவார்கடாவிவருமூது
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே மாவாய்ப்பிறக்குந்திருமாற்கே.

அகவல்.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை

மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. (௩௨)

வெண்பா.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தாரோ டூர்ந்தா ரிடையை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றூர்ந்துஞ் சிவிகையினை யூர்ந்து. (௩௩)

கலித்துறை.

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்வீட் டுறுமுனைக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குராவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே. (௩௪)

விருத்தம்.

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியாலார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றானே. (௩௫)

அகவல்.

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. (௩௬)

வெண்பா.

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க—ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று. (௩௭)

கலித்துறை.

உற்று னலன்றவந் தீயினின் றூனலனு னீண்புனலா
லற்று னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்று னெழுதியுங் கூறியு மேயென் றுந் தன்பில்பதம்
பெற்று ளொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. (௩௮)

விருத்தம்.

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி பெரிது வந்துன் றிருவடித்தா மரையைப் போற்றி, விரைமலர்தூய் வந்தனைசெய் கின்று னென்றால் விளங்கிழையா ரிருவரொடு முயங்கலாமோ, வரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ லின்னே யுடையானுக் கடுத்தசெயலுனக்கு மாயிற்,சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்தொகைசெய்தோயறமுதனல்வகைசெய்தோயே.

அகவல்.

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (௪௦)

---

தேவாரம் திருவாசகம் என்கிற தமிழ்வேதஞ் செய்தருளிய சைவசித்தாந்த சமயாசாரியராகிய நால்வர்களிலே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசுநாய னாருக்குக் கட்டளைக்கலித்துறையும், சுந்தரமூர்த்திநாயனாருக்கு விருத்தமும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகவலுமாகத் துறைமங்கலச் சிவப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்த நால்வர் நான்மணிமாலை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

## விருத்தகிரி

# பெரியநாயகியம்மை

## நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முச்சுடரெண் டலைக நின தெழில்கூர், முகம்புலர் தலைக்கண் டெல்லோர் தடியின் முனைப்பிறைக் கோடுகொண் டுழுது, விழுமணி யரவ நுழை சடா டவியின் விண்ணதித் தண்புனல் விடுப்ப, விரைவொடு குளிர்ந்து முகமலர் சலிஞன் மென்கொடி யனையினை புணர்ந் தேன், செழுமணி நீலை மலைமுகி றவழுஞ் சிலம்பெனும் புற்றி னின் றார்ந்து, திரைபொரு கடற்போர்ப் பெரும்படம் விரித் துத் தினமணி யெனப்படுஞ் செங்கேழ், கெழுமணி யுமிழ்ந்து பேரிரு டோந்து கிடக்குமெய்ம் முடக்குமா கணையாய், கிளர் மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (க)

விழைவொடு நினக்கு மாதுலன் மாமி வெற்புகோன் றுரு துதன் மருகன், மேலெலா மெனும்புந் தோலுமாய்க்கிடத்தல் வெறுத்திடா திளமைநா டாறு, பழமலை தனக்குச் சாதியொப் பெனவே பார்த்துனைக் கொடுத்தனன் றந்தை, பனிமலை யென் றோ தன்மனை யாட்டி பயந்திடப் பெருமக ளென்றே, கழை வரை முன்ன ரூன்றுபு நடந்து ஈடிதுபள் ளங்களின் வீழ்ந்து, கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க் கடையுற வளைந்துருத் திரைந்து, கிழவுரு விருத்த நதியெனப் பட்டுக் கீர்த்தி மூவுலகினும் போர்ப்பக், கிளர்மணி முத்தநதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (உ)

காமமென் கின்ற கதுவுவெந் தீயுங் கடுஞ்சின மெனப்படு புலியுங், களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக் கறை யடிக் களிநல்யா னையுமே, தாமிகு மெனது மனமெனும் வனத்

திற் றனிவரால் வெருவினை யாயிற், றழலினின் ருடிப் புலிகரி யுரிபோர்த் தடுத்தவாண் டுணையொடும் வருவா, யிமவெள் ளெலும்பங் கிடப்படு மெனத்தா னெலும்பணி கடவுண்மா நதியா, யிருந்துநல் லின்னங் கொண்டுமெய் வெருப்ப வினை தபு கங்கையை யிகழ்ந்து, கீழ்மைசெய் கின்ற தொன்றாயின் ருயிற் கிடைக்குமோ விதன்குண மென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௫)

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான சொரூபியென் றரு மறை யனைத்துஞ், சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந் தேன் கரந்தநின் றிருமுலைச் செழும்பால், வட்டிலிற் கொச் சைப் பிள்ளைமுன் னுண்டு வண்புகழ் ஞானசம் பந்த, வள்ள லென் றிடப்பேர் பெற்றநன் மொழிபோன் மையறு சீர்செய் யுள்செய் தமையா, லெட்டிநற் றிகிரி பறித்தெறிந் தாற்கா லியானையை யுருட்டிவாங் குதிரை, யெறிந்துசங் கதிர்த்துக் கொடுமர முறித்திட் டெதிர்ந்திடார் தமைவிழுத் தோடிக், கிட் டினர்ப் புரட்டி முருகவேள் பூசக் கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து, கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௬)

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா முறுகுழி மேடுக ணிரவி, யொழிவிலா வாய்மை மெழுக்கிறைற் பூசி யுய ர்தரு மனமெனப் படுமோர், பள்ளிமென் றவிசி லிருத்தி நின் பதியைப் பழுதில்லா னெனப்படு நெல்லைப், பழமல மாயைத் தவிடுமி போக்கிப் பாகஞ்செய் தென்றருத் திடுவாய், துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர் சூழல்வெண் ணெய்க் குட முருட்டித், துணைமுலைக் குவட்டின் மஞ்சண்மேற் படப்போய்த் தோய்ந்துநின் ருடிளங் கயற்கட், கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக் கேடில்சீர்க் கண்ணனு டுதல்போற், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௭)

நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு நல்கிய தந்தையுந் தாயு, நம்பனு நீயு மல்லிர்நும் மூர்க்கே நவின்றவம் முறையு ளீர் நீவிர்; பாடியா ரணைஞ்சொ லீண்டுமாய் வனதாம் பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப், பழமலை தனது பெயர்வலக் காதிற் பக ர்ந்தருள் செயப் பெறுஞ் செயலா, லோடி யோர் சாக மேறுபு கவிழ்த்த வொருசிறு சரகநீர் தானு, மொருவனோர் செவி யால் விடுத்தவப் புனலு மமையொரு பாசுர்கட் டோன்றிக், கேடிலா னந்த வுருவமா மெனையொக் கின்றன வோவென வதிர்த்துக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௬)

தன்னொரு மகன்வா கனத்தினை வெறுத்தோர் தனயன்வா கனத்தினை விரும்புந், தண்மணிப் பணியு மதனையுள் வெரு வித் தான்வள ராமதி யமும்வாழ், மின்னவிர் சடையான் றனைநினை யன்றி மேவுவா னவரைநெஞ் சுன்னல், விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து வெறுமணி கொள்ளுமா றன்றே; மன்னவர் மனிதர் சந்திரன் பரிதி மகபதி மலரயன் மறலி, வானவர் வசுக்கள் சித்தர்கிம் புருடர் மாதவர் விஞ்சைய ரசுரர்; கின்னர ருரகர் மூழ்குபே ரரவங் கேட்டொரு முராரி பாய் சுருட்டக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௭)

படைத்திடுந் தொழிலோன் மறைச்சடங் கியற்றப் பாவி யோன் மனத்தினும் வலிய, பன்மணி குயின்ற செம்பொனம் மியினின் பதமலர் வைத்தக லாம, லிடத்தினி லுனைவைத் தரு ளுதன் முன்னே வியற்பகை மனைவியை யிரந்தா, னிளம்பிறை சூடு மிறையவன் பின்ன ரெங்ஙனம் போயிரந் திடுவான், கொடுத்தெனி லிடுபொன் புலவனுக் காரூர்க் குளத்தினிற் பழ மலை யன்று, கொடுத்தது நானே கொடுத்தன னென்னிற் குளி த்தகல் பவர்குளத் தெல்லாங், கிடைத்திட வொருகண் டருமெ னக் கிதுசெய் கின்றதற் புதங்கொலோ வென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௮)

பண்டுநின் கொழுநன் றந்தையுந் தாயும் பயந்ததம் மருமைருந் தன்ன, பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும் பாதகமொன்றுளங் கொண்டு, தொண்டர்தம் மனையிற் செல்வனென்றெழுநின் சுதனழப் பொருதுநின் முலைப்பால், சுரந்தமு தூட்டுமன்னைநீ யாவாய் தொழுதுபோய்ப் பிரித்திலை யென்றே, வண்டார்தங் கங்கை யன்னமங் கதன்க ணாடல தன்னைவந் தடையா, வாடியிங் கிதன்க ணமர்வுறப் பெறலா லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து, கெண்டை யொண்வாளை யுடனெழக் குதிப்பக் கிளைவளைக் கமுகின்மேற் றவழக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௧)

புரிசடைக் காட்டு ளாடவிட் டினவம் புலியினைச் சிறப்புலியொடுகோட், புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப் புலிபணி மலையிள மானைப், பரிவுறத் தொழுது மருவிய வதனாற் பயமறச் சாதிக டனது, பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து பசுவெலா மருவுறப் பெறுமே, சுரிகுழற் கயற்கட் பிறைநுதற கனிவாய்த் துடியிடைக் குவிமுலைத் தளிர்க்கைத், துணைவிமுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ் சுடர்மணிக் கட்செவிப் பணியான், கிரிமகட் கடுத்த கறைமிடற் றிறைவன் கிளக்குமேற் புகழெனத் தோன்றிக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# பெரியநாயகியம்மைகலித்துறை.

இறைவற்குத் தக்க விறுமாப் பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாமிறு மாப்பனெனக்
குறைவற்ற நெற்கொண் டுலகேற் றுணைப்பலி கொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை வாழும் பெரியம்மையே. (க)

பத்தர்க்கு நெஞ்ச மலர்மீ திருத்திப் பயந்துகொடுஞ்
சித்தர்க் ககலுநின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல்
வைத்தற்கு மெண்ணி மதியுடையே னென்பன் வார்சடையான்
பித்தர்க்குத் தங்குண நூலினுஞ் செம்மை பெரியம்மையே. (உ)

இழைபொறுத் தாற்பொறை தானென்ப ரானல்லி சைப்புலவர்
மழைபொறுத் தார்புனன் முக்காற் பொறுக்கும்வழக்கதுண்டே
யுழைபொறுத் தார்நல் லியற்பகை யார்மனைக் குற்றவொரு
பிழைபொறுத் தாய்நன் றுகாண்குன் றைவாழும்பெரியம்மையே.

கையன்று தாமரை கண்ணன் றிளமென் கயலெனவே
பொய்யன்று கங்கையை நீரென்று சாதிப்பர் போர்விடையார்
மெய்யென்று நீகொண் டிரே றைலாயி னென்மென் கையிடைப்
பெய்யென்று பின்னை யறிவாய்தென் குன்றைப்பெரியம்மையே.

பொன்வாங்கு செஞ்சடைப் பாம்புகள் சுற்றும் புதுமதியி
னன்வாங்கு கோடு கிழிக்கு நகுவெண் டலைபடுங்கன்
முன்வாங்கு மெர்ஸைதநின் பாதாம் புயத்தின் முடிவணங்கிற்
பின்வாங்கி நில்லன்ன மேகுன்றை வாழும் பெரியம்மையே. ()

கடிநறு மென்றரு மீதிருப் பாரெனக் கங்கை யென்பாண்
முடிநடு வேறி யிருந்தனள் வேனின் முதிர்விலத
னடியடை வாரெனச் சங்கரன் பாங்க ரமர்ந்தனை நீ
பிடிநடை யேகுயி லேகுன்றை வாழும் பெரியம்மையே. (சு)

நின்போ லிலரரு ளாள்ரென் றேசொல நின்கொழுந
னென்போ னொருவன் மகன்பூங் கழுத்தினை யீர்வலென்றே

யன்போர் சிறிது மிலனாகப் போக வதற்கிசைந்து
பின்போய் விடாது கண்டாய் குன்றைவாழும் பெரியம்மையே.

செச்சை மலர்புரை வானோடு மேனி திறந்துகொண்டு
கச்சை யரவொன் றசைத்துக் கபாலங் கரத்தெடுத்துப்
பச்சை மயிலனை யார்மனை தோறும் படர்ந்திரக்கும்
பிச்சையொழிகென் றொருவார்த்தைசொல்லெம்பெரியம்மையே.

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற்கில்லை
யோநிற் பிறரென வச்ச முறும லுயிர்களொல்லா
நீதிப் புதல்வர்க ளாயின் வாதலி லீகொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண்டாய் குன்றைவாழும் பெரியம்மையே. ()

நின்னைய நாயக னென்றிருப் பாய்நினை நீத்தகன்று, தன்னை
ரில் பூவணத் தேயன்றுபோய்ச் செய்த தன்மையெல்லாஞ், சொ
ன்னே னலேனினி நின்றோடொளிப்பதென்சொல்லுவன்யான்,
பின்னே தெனக்குத் தருவாய் தென்குன்றைப் பெரியம்மையே.

நற்றவத் துன்னைப் பெறுமலைக் கென்னமுன் னல்கியுனைப்
பற்றுறக் கொண்ட தெனும்பே யணியும் பழமலைதான்
சற்றெனக் கையந் தராதுசொன் னும்மலைச் சாதியுள்ளே
பெற்றவர்க் கென்ன முலைவிலை குன்றைப் பெரியம்மையே. ()

கற்றா ரறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த
சொற்றா னொருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுலகி
னற்றாண் மகற்பெறு கென்றாசி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரையன் குன்றை வாழும் பெரியம்மையே. ()

கரிய மிடறுடைப் பெம்மான் கரத்துழைக் கன்றொடுமோ
ரரிய முடியம் புலியொடு மேவிளை யாடுகின்றாய்
தெரிய வரிய பதினா லுலகுமென் சிற்றிலென்பாய்
பெரியவ ளென்ப துனக்கேது குன்றைப்பெரியம்மையே. (௧௫)

MAHAMAHOPADHYAYA

தண்ணா ரிதழி புனைவான் விழியிணை தம்மனைகள்
பண்ணா வழிக்குமென் றோதின் றிருமுக பங்கயத்திற்
கண்ணா யினருனைக் கவ்வலை மாதுங் கலைமகளும்
பெண்ணா ரமுதனையாய் குன்றை வாழும் பெரியம்மையே. (௧௪)

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்துக்கென் றுன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப் பான்மெல் விரனுதியாற்
றெள்ளித் துளியள வாயினுந் தொட்டுத் தெறித்திலையுன்
பிள்ளைக்குங் கிள்ளைக்கும்பால்கொடுத்தாலென்பெரியம்மையே.

ஆறுத் துயர்கொண் டடியேன் சலிப்ப வதுசெவியி
லேறும லேயிருந் தாலென்செய் வேனெங்க ளீசற்கொரு
கூறுகி யண்ட முதலா யிளமை குலவுதவப்
பேறுகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே. (௧௬)

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் றருமிருநாழிநெல்லால்
வினைமாட்சி கொண்டுயி ரெல்லா மளித்தருண் மேன்மையினான்
மனைமாட்சி யெய்து முனக்கே பெருங்கற்பு மாட்சியன்றிப்
பினைமாட்சி யார்க்குண் டுலகின்ற குன்றைப் பெரியம்மையே.()

நெடிய விலங்க லொருசிலை யாக்கிய நின்பதிமேற்
கொடிய வநங்கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்ந்த
வொடிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுநடுப்
பிடியு ளடங்கிய தென்னிது குன்றைப் பெரியம்மையே. (௧௮)

பண்டகு வீணை யொடுபாட வந்தவப் பாமடந்தை
கண்டழு மாறு மதிநிரை போலக் கவின்கனியும்
வெண்டலை மாலை கிடந்தொளிர் தோளிக்கு வீங்குமுலைப்
பெண்டகை மாமணி நீகுன்றை வாழும் பெரியம்மையே. (௧௯)

முற்றிற்று.

பழமலைநாதர்

# பிக்ஷாடனநவமணிமாலை.

நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலிகொண்
டங்குற்று மென்றுகில் போக்கினள் வெற்றரை யாகியந்தோ
விங்குற றனையென வெம்பெருமானிவ் விருநிலத்திற்
றங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே. (க)

குன்றுமுதுகுன் றுடையா னிலாதவெண் கோவணத்தான்
றன்று மரைக்கை விரன்மூன்று காட்டித் தனங்குறித்து
னருக வித்தனை பிச்சையுண் டோசொன் னறுநுதலா
யன்று னிரண்டத் தனையுள கோடியென் றிட்டனளே. (உ)

இப்பாத் திரந்தலை சீழாப் பிடித்தனை யென்னைமுனந்
தப்பாப் பலிகொண் டறிந்திலை யோவெனத் தாழ்குழலாள்
செப்பார் பணைமுலை யாயநிலத் தேபலி சிந்தியிட்டா
யெப்பாத் திரத்திலு மிட்டறி யாய்கொன்முன் னென்றனரே. ()

வேட்டன மாதுகை தாழ்த்திட மாமுது வெற்பர்பலி
யோட்டினை நீதொடலாமோ வெனவுமை யுந்தொடலாம்
வீட்டினில் யானென வேயவர் தாமிது வேண்டுவைகொல்
யாட்டினின் பாலென மூலமு மாமென்ப தென்றனரே. (ச)

மாண்ட வெலும்பணி கோலமொ டேபலி வாங்கிடுதற்
கீண்டு வருமுது குன்றுடை யீருமை யான்மிடற்றி
னீண்ட வுகிருறுத் தாதனை வேனென்று நீர்தலையைத்
தீண்ட வுமது பலிப்பாத் திரமென் சிரிக்கின்றதே. (ரு)

வானோர் தொழுநின் பலிப்பாத் திரத்தை வனைந்ததுநீ
தானோ வெனச்சக் கரந்தான் சுழற்றத் தகுங்குயத்தி
யானோர் குயவன்மெய் யென்றே முதுகுன் றிறையியம்ப
நானோ வொருசிற் றிடைச்சியென் றுணர்ந் நறுநுதலே. (சு)

பங்கய மன்ன விழியார் முதுகுன்றர் பாத்திரத்தி
லங்கையி லைய மொடுவெண்டு வீழநல் கையவென
வெங்கையில் வந்த தெமதாக வேவழக் கென்று செட்டி
மங்கையர் தங்கட் கிருங்கூ டலிலிட வைத்தனரே. (எ)

நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் நேடியுங்க
ளூருக்குட் பிச்சையென் றுற்றேமுண் டாயி னுரைமினென
வாருக்குத் தக்க முலையா ரதற்குளர் மற்றொருவர்
யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரே. (அ)

முழங்குந் துடியொடு பிச்சையென் றேமுது குன்றர்வரச்
சழங்கு முலைமுதி யாளொன் பலியெனத் தம்மனையில்
வழங்கு மனமென் றனர்புறம் போந்து வளர்முலையாள்
விழுங்கு மனம்பகற் போது கொள்வாயென்று வேண்டினளே

பிச்சா டனநவ ரத்தின மாலையைப் பீடுபெறத்
தைச்சான் றுறைமங் கலமுறை சீவ தயாபரனும்
பொய்ச்சார் பதனை யொழிக்குஞ் செழும்புலி யூர்ப்புணித
னற்சார்பு சார்ந்த சிவப்பிர காச நவமணியே.

முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.